# தமிழ் மொழி

## உயர்தரம்

அரசகரும மொழிகள் திணைக்களம்
1999

40
வெ
/PR

රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව

அரசகரும மொழிகள் திணைக்களம்

Department of Official Languages

# දෙමළ භාෂා උසස් පාඨමාලාව

# தமிழ் மொழி உயர்தரம்

# Advanced Course in Tamil

**ISBN No. 955-9180-03-7**

භාෂා මන්දිරය

රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව, රාජගිරිය.

பாஷாமந்திரய

அரசகரும மொழிகள் திணைக்களம், இராஜகிரிய

Bhashamandiraya

Department of Official Languages, Rajagiriya

2 - CM 0241 - 7,500 (2000/01)

First Edition

හිමිකම් ඇවිරිණි.
මෙහි සම්පූර්ණ අයිතිය රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව සතුය.
රාජ්‍ය භාෂා කොමසාරිස් වරයාගේ ලිඛිත අවසරයෙන්
තොරව මෙහි කිසිවක් උපුටා පළකිරීම තහනම්ය.

உரிமை பதிப்பாசிரியருக்கே
இந்நூலின் உள்ளடக்கத்தை முழுமையாகவோ அல்லது ஒரு பாகத்தையோ
அரசகரும மொழிகள் ஆணையாளரின் எழுத்து மூலமான
அனுமதியின்றி அச்சிடுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

All rights reserved.
The contents of this book may not be reproduced in
part or whole in any form without the written
permission of the Commissioner of
the Department of Official Languages.

# දෙමළ - උසස් පාඨමාලාව
## පෙරවදන

දෙමළ බස අප ශ්‍රී ලංකාව තුළ වාසය කරන ජාතීන් දෙකකගේ මව් බසයි.එය අප රට ඉතිහාසය හා බැඳෙන්නේ ක්‍රිස්තු පූර්ව 1 වන ශත වර්ෂය වැනි ඉතා ඈත කාලයක පටන්ය. ශ්‍රීලංකාවට වයඹ දිගින් පිහිටා ඇති දක්ෂිණ භාරතය හෙවත් දකුණු ඉන්දියාව දෙමළ භාෂාවේ නිජ බිම වන අතර අප මවුබස වන සිංහලය කෙරෙහි එය දක්වා ඇති බලපෑම අල්ප නොවේ.

භාෂාමය වශයෙන් පමණක් නොව රාජ්‍ය තාන්ත්‍රික, සංස්කෘතික, කලාශිල්ප, ගෘහ නිර්මාණ ශිල්ප ආදි වශයෙනුත් අප රටට "දමිළ" යෙන් වැටුණු ආභාෂය ඉතා විශාලය.

සියවස් විසිපහකට ආසන්න අඛණ්ඩ ඉතිහාසයක් හිමි අප ශ්‍රී ලංකාව තුළ වරින්වර පැවති පරසතුරු ආක්‍රමණ හැරුණු විට,මෙරට තුළම ඇතිවූ "ජාතිවාදී අරගල" පිළිබඳව සඳහන් වන්නේ මෙම සියවස තුළදී පමණක් යැයි සඳහන් කිරීම වටී.එයිනුත් ඉකුත් දශක හතරක පමණ කාලයක් තුළ ඇති වූ අරගල හුදෙක්ම "භාෂාව" පදනම් කොටගෙන ඇතිවූ ඒවා වීම මෙහිදී විශේෂ අවධානය යොමු කළ යුත්තකි.

මෙයින් පැහැදිලි වන්නේ අඩ සියවසකට ආසන්න කාලයක සිට ශ්‍රී ලාංකික ජනතාව අතර වර්ධනය වෙමින් පවත්නා අන්‍යොන්‍ය විරසකභාවයටත්, අනවබෝධයටත්,ප්‍රධානතම හේතුව වී පවතින්නේ ඔවුනොවුන් තුළ මෙම ද්විභාෂාඥානය කොහෙත්ම නොමැතිවීමය.

මෙම තත්ත්වය ප්‍රත්‍යක්ෂාකාරයෙන් අවබෝධ කොටගත් රාජ්‍යායතන අතුරෙන් ඉදිරියෙන්ම සිටිනුයේ රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුවයි.අප දෙපාර්තමේන්තුව මගින් ආරම්භ කරනු ලැබ ඇති දීප ව්‍යාප්ත භාෂා පුහුණු ව්‍යාපෘතීන් මගින් දිවයිනේ රාජ්‍ය සේවයේ නියුතු සියලුදෙනාටම සිංහල/දෙමළ යන භාෂාද්වයය ප්‍රධාන වශයෙනුත්,ඉංග්‍රිසි භාෂාව සන්ධාන භාෂාවක් වශයෙනුත් පුහුණු කරවනු ලබයි.

"දෙමළ-උසස් පාඨමාලාව" නමැති මෙම කෘතිය,අප දෙපාර්තුමේන්තුව මගින් මූලික දෙමළ අධ්‍යාපන ලැබූ නිලධාරින්ගේ එම දෙමළ දැනීම වඩාත් නිවැරදි හා පුළුල් වුවක් කරනුවස්,සකස් කරන ලද පාඨ ග්‍රන්ථයකි. එහෙයින් විශේෂයෙන්ම මෙම ග්‍රන්ථය භාවිතා කරනු ලබනුයේ දෙමළ භාෂාව පිළිබඳව උසස් ප්‍රවීණත්වයක් ලබා ගැනීමට අපේක්ෂා කරන විද්‍යාර්ථීන් විසිනි.

මෙම පාඨ ග්‍රන්ථය සැකසීමේදී මෙහි සම්පාදකත්වය දරමින් ක්‍රියාකළ අප දෙපාර්තමේන්තුවේ පර්යේෂණ නිලධාරි වජිර ප්‍රභාත් විජයසිංහ මහතාටත්,සෝදුපත් කියවීම ආදියෙන් සහාය වූ,පරිවර්තන අධිකාරි වී. සිවපාතසුන්දරම් මහතාට සහ පරිවර්තන අධිකාරි ජේ මහදේව මෙනවියටත් සම්බන්ධීකරණ කටයුතු මෙහෙය වීමෙන් සහායවූ අධ්‍යාපනඥ වික්‍රමසිරි වික්‍රමාරච්චි මහතාටත්, පරිගණක කටයුතු මනහර ලෙස නිමකරදුන් වී.සඬගෝපන් මහතාටත්,අලංකාර ලෙස මුද්‍රණ කාර්යයන් නිම කොට දුන් රජයේ මුද්‍රණාලයයේ අධිපතිතුමා ඇතුළු කාර්ය මණ්ඩලයටත් මගේ ස්තුතිය හිමි වේ.

එස්.පතිරගේ,
රාජ්‍ය භාෂා කොමසාරිස්.

"භාෂා මන්දිරය"
රාජ්‍ය භාෂා දෙපාර්තමේන්තුව,
රාජගිරිය.
1999.11.01

# முன்னுரை

தமிழ் மொழியானது ஸ்ரீலங்காவில் வாழும் இனத்தவர்களில் இரண்டு சமூகங்களின் தாய்மொழி ஆகும். இலங்கையில் தமிழ் மொழியின் வரலாறு கி.மு. முதலாம் நூற்றாண்டிலிருந்து ஆரம்பிக்கிறது. இலங்கையின் வடமேற்குத் திசைக்கு அப்பால் அமைந்துள்ள தென்னிந்தியா தமிழ் மொழியின் பிறப்பிடமாகும். தமிழ் மொழி, சிங்கள மொழி மீது செலுத்தியுள்ள செல்வாக்கு அளப்பரியது.

தமிழ் மொழி இந்த நாட்டில் ஒரு மொழியாக இயங்குவது மட்டுமல்லாமல் அது இந்நாட்டின் ஆட்சி, கலாசாரம், கலை, கைப்பணி, கட்டடக் கலை ஆகியவற்றின் மீதும் செல்வாக்கைச் செலுத்தியுள்ளது.

இலங்கையைப் பொறுத்தமட்டில் அதன் இருபத்தைந்து நூற்றாண்டுகால வரலாற்றில் அது காலத்துக்குக் காலம் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளுக்கு உட்பட்டிருந்த போதிலும், 'இன முரண்பாட்டான' சம்பவங்கள் தற்போதைய நூற்றாண்டில் மட்டுமே இடம்பெற்றுள்ளன என்பது நோக்கற்பாலது. அதிலும் கடந்த நாற்பது வருடங்களில் இடம்பெற்ற முரண்பாடுகள், தெளிவாக மொழியை அடிப்படையாகக்கொண்டு எழுந்தமையினால், விசேட முக்கியத்துவம் பெறுகின்றன.

இதனால் தெளிவுறத் தெரியவருவது என்னவென்றால், சுமார் அரை நூற்றாண்டு காலமாக இலங்கையின் இனத் தொகுதியினர்களுக்கு இடையில் காணப்படும் இந்த பரஸ்பர தப்பெண்ணங்கள், தவறான கருத்துப் பரிமாற்றங்கள் ஆகியவற்றுக்கு அவர்களுக்கிடையில் இருமொழி அறிவு இல்லாதிருப்பதே பிரதான காரணம் என்பதாகும்.

இந்த உண்மையை உணர்ந்து தெளிவாகத் தெரிந்து கொண்ட அரச அமைப்புக்களில் அரசகரும மொழிகள் திணைக்களம் முதன்னிலையில் உள்ளது. எனவே இத் திணைக்களம் அரச கரும மொழிகளான சிங்களம், தமிழ் ஆகியவற்றையும் இணைப்பு மொழியாகிய ஆங்கிலத்தையும் நாடு பூராகவும் போதிக்கும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

"தமிழ்மொழி – உயர்தரம்" என்ற தலைப்பைக் கொண்ட இந்தப் பாடநூல், இத்திணைக்களத்தில் அடிப்படைத் தமிழ்க் கல்வி நெறியிற் பயின்ற அரசாங்க சேவையாளர்களது தமிழ் அறிவை அதிகரிக்கும் நோக்கத்துடன் தொகுக்கப்பட்டுள்ளது. ஆதலால், இந்தப்

பாடநூலானது, சிறப்பாக தமிழ் மொழியில் உயர்மட்டத் தேர்ச்சியைப் பெற விரும்பும் மொழி பயில்வோரினால் பயன்படுத்தப்படவுள்ளது.

இந்த நூலை திணைக்களத்தின் ஆராய்ச்சி உத்தியோகத்தரான திரு. வஜிர பிரபாத் விஜேசிங்க அவர்கள் எழுதியுள்ளார்கள். திணைக்களத்தின் மொழிபெயர்ப்புக் கண்காணிப்பாளர்களான திரு.வி.சிவபாதசுந்தரம், செல்வி. ஜெ. மகாதேவா ஆகியோர் இதன் அச்சுப்படியையும் வாசித்துத் திருத்தஞ் செய்துள்ளார்கள். கல்வி நிபுணர் திரு. விக்கிரமசிறி விக்கிரமாராச்சி அவர்கள் இணைப்புப் பணியில் ஆதரவை வழங்கியதுடன் திரு. வி.சடகோபன் அவர்கள் அச்சுக்கோப்புக் கருமங்களைச் செய்துள்ளார்கள். அரசாங்க அச்சாளர் இந்த நூலை அழகுற அச்சிட்டுள்ளார். இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எஸ். பத்திரகே
அரசகரும மொழிகள் ஆணையாளர்

பாஷா மந்திரய,
அரசகரும மொழிகள் திணைக்களம்,
ராஜகிரிய.

# ADVANCED COURSE IN TAMIL
## PREFACE

Tamil is the mother tongue of two communities living in Sri Lanka. The History of Tamil Language in Sri Lanka goes as far back as the 1st Century B.C. South India, situated towards the North-West of Sri Lanka, is the birth place of the Tamil Language and it has influenced the Sinhala Language in no small way.

Tamil has had its influence not only as a language of this country but also on its governance, culture, arts and crafts and architecture.

Although Sri Lanka had foreign invasions from time to time during its history of almost twenty five centuries, it is noteworthy that "ethnic conflicts have taken place only during the present century. Of these, the conflicts that took place during the last four decades are of special significance as they have taken place on the basis of "language".

It is clear that mutual estrangement and misunderstanding that have been developing between the ethnic groups in Sri Lanka are mainly due to the total lack of bilingual knowledge among them for the exchange of their views mutually.

The Department of Official Languages is in the forefront of state organisations that have fully realised this fact. Hence the Department has launched an all-island programme for teaching Sinhala and Tamil as official languages and English, as the link language.

This text titled "Advanced course in Tamil" has been compiled for the purpose of widening and enhancing the knowledge of Tamil among the public servants who have already followed the basic Tamil course of the Department. Hence this text is to be used by language learners who are desirous of gaining an advanced level of proficiency in the Tamil language.

I wish to thank Mr.Wajira Prabhath Wijayasinghe, Research Officer of the Department, for writing this book, Mr. V. Sivapathasundaram and Miss. J. Mahadeva, Superintendents of Translations for extending their assistance in reading the proof, Mr. Wickramasiri Wickramarachchi, Educatonist, for extending his assistance in co-ordinating the project, Mr.V.Sadagopan for preparing the type setting and the Government Printer and his staff for attractively printing the book.

S. Pathirage,
Commissioner of Official Languages

Bhasha Mandiraya,
Department of Official Languages,
Rajagiriya.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தமிழ் மொழியைப் படிப்பது சிரமமானதா? | 1 |
| 2. | இலக்கணம் அவசியமா? | 5 |
| 3 | மொழிப்பயிற்சி | 8 |
| 4. | ஸ்ரீ லங்கா | 10 |
| 5. | அஞ்சலி | 15 |
| 6. | மொழிப் பயிற்சி | 17 |
| 7. | யாவருக்கும் புகலிடம் | 20 |
| 8. | வேளாண்மை | 23 |
| 9. | சுப்பிரமணிய பாரதியார் | 28 |
| 10. | பாப்பாப் பாட்டு | 31 |
| 11. | வெசாக் பண்டிகை | 33 |
| 12. | மொழிப் பயிற்சி: | 38 |
| 13. | கோவில் வழிபாடு | 43 |
| 14. | அசோக சக்கரவர்த்தி | 45 |
| 15. | பாரதியும் பட்டிக்காட்டானும் | 49 |
| 16. | என்னை நிம்மதியாக இருக்க விடுங்கள் | 51 |
| 17. | சொற்புணர்ச்சி | 56 |
| 18. | பருடியின் கதை | 60 |
| 19. | வசந்தம் | 64 |
| 20. | மொழிப் பயிற்சி | 66 |

| | | |
|---|---|---|
| 21. | தமிழ் எவ்வாறு வளர்ந்தது? | 68 |
| 22. | தலையாலங் கானத்துப் பாண்டியன் நெடுஞ்செழியன் | 72 |
| 23. | ஆறு | 76 |
| 24. | சிலப்பதிகாரம் | 78 |
| 25. | காலைப் பாட்டு | 83 |
| 26. | மொழிப்பயிற்சி | 85 |
| 27. | "யாம் ஐவேம்" | 89 |
| 28. | குதிரையின் குணம் | 93 |
| 29. | கட்டடக் காவற்பொறுப்பாளர் பதவி | 96 |
| 30. | மகாபாரதம் | 101 |
| 31. | மொழிப்பயிற்சி | 105 |
| 32. | இராமாயணம் | 109 |
| 33. | மொழிப் பயிற்சி: | 115 |
| 34. | வேற்றுமை | 118 |
| 35. | செய்வினையும் செயப்பாட்டு வினையும் | 126 |
| 36. | மொழிப் பயிற்சி: | 135 |
| 37. | நீதி நூல் | 139 |
| 38. | வாக்குண்டாம் (செய்யுளும் பொருளும்) | 143 |
| 39. | வாக்குண்டாம் (11) | 149 |

# 1 ஆம் பாடம்
# தமிழ் மொழியைப் படிப்பது சிரமமானதா?

தமிழ் மொழியைக் கற்பதிலும், கற்பிப்பதிலும் புதியதொரு போக்கு தோன்றியுள்ள இந்தக் காலத்தில் இது ஒரு முக்கியமான வினாவாகும். இதற்கு நேரடியாக வழங்க வேண்டிய விடையானது இல்லை என்பதாம். தமிழ் மொழியை மாத்திரமல்ல தற்போது உலகத்தில் பரந்து காணப்படும் எந்தவொரு மொழியையோ, பிற கற்கைத் துறைகளையோ கற்பது சிரமமான காரியமேயில்லை. இவ்வாறு நான் உறுதியாகக் கூறுவதற்கு எனக்குள்ள துணிவு என்னவென்று தெரியுமா? மேற்குறிப்பிடப்பட்ட மொழிகள், பிற கற்கைத் துறைகள் அனைத்தும் தெய்வீகத் தன்மையைக் கொண்டவையல்ல. அவை உலகத்தில் வாழும் என்னைப் போன்ற சாதாரண மனிதர்களால் பயிலப்படும் மொழிகளாக அல்லது கற்கைத் துறைகளாகவே இருக்கின்றன. தெய்வீகத்தன்மை வாய்ந்தவையாக இருந்தால் அவை எமது அறிவுக்கு அப்பாற்பட்டவையாகவே இருக்கும். நான் ஒரு மனிதன். என்னைப் போன்ற இன்னுமொரு மனிதன் தனது தாய்மொழியாக பயன்படுத்தும் ஒரு மொழியை ஏன் என்னால் கற்க முடியாது. மனிதராகப் பிறந்த எவரும் சாதிக்கக்கூடிய ஒரு கருமத்தை நானும் சாதிக்க முடியும். இது தான் உண்மை.

தமிழ் மொழியானது, எமது தாய் நாட்டிலும் அநேகமாக தென்னிந்தியாவிலும் வாழும் ஓர் இனத்தவர்களின் தாய்மொழியாகும்.

தமிழர்கள் எமது சகோதர இனத்தவர்கள். அவர்களும் நீண்டகாலமாக எம்மோடு இந்நாட்டில் வாழ்ந்துவருபவர்கள். சிங்கள மொழியினதும், தமிழ் மொழியினதும் மொழி நடையானது ஒரே தன்மையாக உள்ளது. எழுத்துக்களின் வடிவங்களும், எழுதும் முறைகளும், சந்தி, சமாச இலக்கண அமைவுகளும் ஒரே தன்மையின. ஆதலால் சிங்களவர்களாகிய நாம் தமிழ்மொழியைக் கற்பதில் எவ்வித சிரமமும் இருக்காது.

ஆனால் ஒன்று. வழி சேமமாக இருந்தாலும் முன்பு ஒரு போதிலும் பயணம் மேற்கொள்ளாத வழியிலே செல்கையில் பீதியோ, ஐயமோ மனதில் உண்டாகுவது இயல்பு. அதற்காகத் தான் அனுபவம் பெற்ற வழிகாட்டுபவர் ஒருவரின் துணையை நாட வேண்டியுள்ளது.

வழிகாட்டுபவர் அனுபவம் மிக்கவராகவும், செம்மையாகப் பயணியை அழைத்துச் சென்று அக்கரையைச் சேர்ப்பதில் நம்பத்தக்கவராகவும் இருப்பது அவசியம். மொழி படிப்பதில் அடைய வேண்டிய குறிக்கோளை அடைவதற்காக செல்ல வேண்டிய வழியானது ஒரு கரடுமுரடான வழியாகும் என்பதனை மாத்திரம் நான் இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது. மாணாக்கர் தனித்தனியே இந்த வழியில் பயணத்தை மேற்கொள்ள மாட்டார்கள். ஆசிரியர் ஒருவர் வழிகாட்டுபவராக இருப்பின் மாணாக்கராகவுள்ள பயணிகளே ஏன் தயக்கம்? மொழிப் பாதையில் செம்மையாகச் செல்லுங்கள். அதோ தெரிகிறதே குறிக்கோள்.

"சுகாஃ தே பந்தானாஃ அஸ்து"
உமது பிரயாணம் பத்திரமாயமையக் கடவது.

## பயிற்சி

பின்வரும் வசனங்களைக் கவனிக்குக.

1. "தற்போது உலகத்தில் பரந்து காணப்படும் மொழிகளையோ, பிற கற்கைத் துறைகளையோ கற்பது சிரமமான காரியமேயில்லை."

2. "மேற்குறிப்பிடப்பட்ட மொழிகள், கற்கைத் துறைகள் அனைத்தும் தெய்வீகத் தன்மை வாய்ந்தவையல்ல."

3. "மனிதனாகப் பிறந்த எவரும் சாதிக்கக்கூடிய ஒரு கருமத்தை நானும் சாதிக்க முடியும்."

4. அதற்காகத் தான் அனுபவம் பெற்ற வழிகாட்டுபவர் ஒருவரின் துணையை நாட வேண்டியுள்ளது.

5. அதோ தெரிகிறதே "குறிக்கோள்"

இந்த ஐந்து வசனங்களால் புலப்படுத்தப்படும் கருத்துக்களை சுருக்கி ஒழுங்காக வரிசைப்படுத்தினால் பின்வருமாறு ஐந்து வசனங்கள் அமையும்.

1. எந்தக் கற்கை நெறியையும் கற்பது இலகுவானது.
2. கற்கை நெறிகள் தெய்வீகப் படைப்புகள் அல்ல.
3. நானும் வல்லவன்.
4. கைதேர்ந்த ஆசிரியரே சிறந்தவர் .
5. மனதில் உறுதிக் கொள்.

இவ்வாறு பின்வரும் ஐந்து வசனங்களையும் சுருக்கி எழுதுக.

1. "தமிழ் மொழியானது எமது தாய் நாட்டிலும், தென்னிந்தியாவிலும் வாழும் ஓர் இனத்தவர்களின் தாய்மொழியாகும்"

2. "சிங்கள மொழியினதும், தமிழ் மொழியினதும் மொழி நடையும் எழுத்துக்களின் வடிவங்களும், எழுதும் முறைகளும் சந்தி, சமாச இலக்கண விதிகளும் ஒரே தன்மையன"

3. "வழி சேமமாக இருந்தாலும் முன்பு ஒரு போதிலும் பயணம் மேற்கொள்ளாத வழியிலே செல்லும் போது பீதியோ, ஐயமோ மனதில் உண்டாகுவது இயல்பு"

4. "மொழி படிப்பதில் அடைய வேண்டிய குறிக்கோளை அடைவதற்காக செல்ல வேண்டிய வழியானது ஒரு கரடுமுரடான வழியாகும்"

5. "மொழிப்பாதையில் செம்மையாகச் செல்லுங்கள்"

2. மொழியின் அம்சங்கள் எவையென விளக்குக.

3. சிங்கள மொழியினதும், தமிழ் மொழியினதும் எழுத்துத் தொகுதிகளை ஒப்பிட்டு அவற்றிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்க.

4. "மொழியானது ஒரு விமானம்"
"மொழியானது ஒரு பாலம்"
இந்த இரண்டுக் கூற்றுக்களில் நம்நாட்டைப் பொறுத்தவரையில் மிகவும் சிறப்பானக் கூற்று எது. காரணங்களைக் கூறுக.

## பாடம் - 2

## இலக்கணம் அவசியமா?

இது நல்லதொரு கேள்வியே. மறுபுறமாக நாமும் ஒரு கேள்வியைக் கேட்க தான் வேண்டும். வளர்ந்தவருக்கு உடை அவசியமா? குழந்தை என்றால் உடைகளின் அவசியம் அவ்வளவு இருக்காது. ஆனால் வளர்ந்தவருக்கு? அப்படியென்றால் இலக்கணம் உடைகளுக்கு உவமானமா? இல்லை. இலக்கணத்தின் நுனியில் தொங்கி நிற்கும் அணிவகைகளைத் தான் அணிகலன்களுக்கும் உடைகளுக்கும் உவமிக்கலாம். அப்படியென்றல் இலக்கணம்?

பொறுங்கள், அதோதெரிகிறதே ஓர் உருவம். அந்த உருவம் ஒரு மனிதனாகத்தான் இருக்க வேண்டும். அந்த உருவத்தைக் கொண்டவர் ஓர் அங்கவீனர். அவரது கால் கவட்டுக் கால். மேலும் நொண்டி. கைகளோ கோணல். குருடன். செவிடன். ஊமை. தேகத்தில் உடுப்பாக ஒரு நூல் கூட இல்லை. அவனது தோற்றமே உருக்குலைந்து தான் இருக்கின்றது. அப்படிப்பட்ட அவன் தெருவில் சுயேச்சையாகச் செல்ல முடியுமா? அவன் ஓர் அப்பாவிப் பிறவியே.

இலக்கணம் என்பது மொழி என்னும் உடலின் அங்கங்களாகும். எழுத்து, சொல், பொருள், யாப்பு போன்றவையும் உவமை, உவமானம் போன்ற அணிகளும் எதுகை மோனை ஆகியவையும் நிறைந்தவொரு பூரணமான ஒன்றே இலக்கணம். இலக்கணத்தின் ஒரு பகுதியையேனும் கற்காதவன் ஓர் அங்கவீனன் ஆவான். ஏதேனும் ஒரு மொழியினது இலக்கணத்தை சீராக முற்றாகவே படிப்பதன் மூலம் தான் ஒரு மனிதன் பூரணமான மொழியறிவு உள்ளவன் ஆகலாம். எனவே இலக்கணம் அவசியமா எனக் கேட்பவன் நிருவாணமாகச் இருக்க விரும்பும் அங்கவீனன் போன்றவன்.

பேச்சு வழக்கில் என்றாலும், எழுத்து வழக்கில் என்றாலும் இலக்கணம் இருப்பது அவசியம். நாம் உண்ணும் உணவை பச்சையாக உண்ணுவது வழக்கமானதில்லை. விதம் விதமான சமையல் முறைகளைப் பயன்படுத்தி வெவ்வேறான முறையில் சமைத்தால் தான் சுவை அதிகம். அதற்கு சமையற்காரன் கைதேர்ந்தவனாகவும், வல்லவனாகவும் இருப்பது அவசியம். ஒருவகையான கீரை என்றாலும், வெவ்வேறு சமையல் முறைகளைக் கொண்டு சமைத்தால் தான் அதில் சுவையும் உருசியும் அதிகமாக இருக்கும்.

இலக்கணத்தை நன்கு பயன்படுத்துவதற்கு அது சம்பந்தப்பட்ட அறிவு இருப்பது அவசியம். இலக்கண அறிவுடையோரின் ஆற்றலால் மயங்காதவர் யார் உளர்.

பழங்கால இந்திய அறிஞர் ஒருவர் இலக்கண அறிவில்லாதவன் காட்டில் வசிக்கும் குருட்டு யானைக்கு சமமானவன் எனக் கூறியுள்ளார்.

'யோ நிருக்திங் நஜானாதி
வனேஅந்த கஜோ விய"

(இலக்கண அறிவில்லாதவன் காட்டில் வாழும் குருட்டு யானைக்கு சமமானவன்)

## பயிற்சி

1. தமிழ் மொழியில் எழுதப்பட்ட பிரதான இலக்கண நூல்கள் எவையென்பதை குறிப்பிடுக.

2. தமிழ் இலக்கண நூல்களில் காணக்கிடைக்கின்ற "ஆரியமொழி" சாயல்களை விளக்குக.

3. தமிழ் மொழிக்கும் ஆரிய மொழிக்கும் இடையிலுள்ள குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் இரண்டினைக் குறிப்பிடுக.

4. அணிகளும், யாப்புகளும் இலக்கணமா?

5. தமிழ் பேச்சு வழக்கிலும், சிங்கள பேச்சு வழக்கிலும் வினை அமைப்பில் கவனிக்கத்தக்க விசேடம் என்ன?

6. சிங்களத்தில் உள்ள "சிதத் சங்கராவ" என்னும் இலக்கண நூல் தமிழ் "நன்னூல்" என்னும் இலக்கண நூலைத் தழுவி தயாரிக்கப்பட்டது" ஆராய்க.

    1. இலக்கணத்துக்கும், இலக்கியத்துக்கும் இடையிலுள்ள தொடர்பு யாது?
    2. ஓர் இலக்கண நூலின் அமைப்பை ஆராய்க.
    3. இலக்கண வழுக்கள் உண்டாகக் கூடிய சில இடங்களை உதாரணங்களோடு விளக்குக.
    4. "வனே அந்த கஜோவிய" என்பதில் பொதிந்துள்ள உண்மையை விளக்குக.
    5. சிங்கள, ஆங்கில மொழிகளில் இல்லாத, தமிழ் மொழியில் தனிச்சிறப்பாக அமைந்துள்ள இலக்கண முறைகள் எவை?
    6. தன்மை, முன்னிலை படர்க்கைப் பெயர்ச் சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்கும் போது அடையும் மாற்றங்களை விளக்கிக் காட்டுக.

# பாடம் 3
# மொழிப்பயிற்சி

1. இரு வசனங்களை ஒன்றாக்குதல்

உதாரணம் (1) பாலன் தவம் செய்தான்
சீலன் தவம் செய்தான்.

இவை இரண்டு வசனங்கள். இவற்றைக் கருத்து மாறுபடா வண்ணம் ஒன்றாக்கினால்.
பாலனும் சீலனும் தவம் செய்தார்கள் என்று அமையும்

**உதாரணம் (11)** விபுலாநந்தர் தமிழ் கற்றார்
அவர் ஆங்கிலமும் கற்றார்.

இவ்வசனங்களை ஒரு வசனமாக்கினால், விபுலானந்தர் தமிழும் ஆங்கிலமும் கற்றார் என்று அமையும்.

பின்வரும் இருவசனங்களை ஒரு வசனமாக எழுதுக.

(அ) வாணி பாட்டுப் பாடினாள்; பாலன் பாட்டு பாடினான்.

(ஆ) பசு பால் தரும்; ஆடு பால் தரும்

(இ) நாதன் நற்குணம் உடையவன்; பாலன் நற்குணம் உடையவன்.

(ஈ) நான் பாடம் படிப்பேன்; நீ பாடம் படிப்பாய்.

(உ) நாதன் நற்குணம் உடையவன்; அவன் நல்லொழுக்கமும் உடையவன்.

(ஊ) பாரதியார் தலைப்பாகை அணிந்திருப்பார்; அவர் சட்டையும் அணிந்திருப்பார்.

(எ) தம்பி பாடசாலைக்குப் போவான்; அவக்ன கடைக்கும் போவான்.

2. ஒரு வசனத்தை இரண்டு வசனங்கள் ஆக்குதல்:

பின்வரும் வசனங்களை இரண்டு வசனங்களாக எழுதுக.

(அ) வாணியும்·பரனும் விளையாடினார்கள்.

(ஆ) ஆடும் மாடும் புல் மேய்கின்றன.

(இ) நீயும் நானும் எழுதினோம்.

(ஈ) அரசன் புலவருக்குப் பொன்னும் மணியும் கொடுத்தான்.

(உ) கமலா காலையும் மாலையும் கடவுளை வணங்கினாள்.

(ஊ) எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.

(அ) மொழிப் பயிற்சி

(1) பின்வரும் வசனங்களை ஒரு வசனமாக்குக.

(1) நான் உதவி செய்வேன்; நீ உதவி செய்வாய்

(2) தாயார் எமது தெய்வம்; தந்தையாரும் எமது தெய்வம்.

(3) தாயார் எமது தெய்வம்; தந்தையாரும் எமது தெய்வம்.

(2) ஒரு வசனத்தை இரு வசனங்களாக்குக.

(1) நீங்களும் அவர்களும் வந்தீர்கள்

(2) நாங்களும் நீங்களும் விளையாடுவோம்

(3) நாதனும் மசங்கரனும் கோயிலுக்குப் போனார்கள்.


(3) மாறிய சொற்களை சேர்த்து வசனமாக்குதல்.

கீழ் வரும் அட்டவணையில் உள்ள சொற்களை இணைத்து வசனமாகக் கூறுக.

உதாரணம் – கடவுள் எல்லாம் வல்லவல்

| | | |
|---|---|---|
| கடவுள் | உண்மை | வல்லவர் |
| பாரதியார் | அழகாக | சொல்லும் |
| ஐயம் | பாடம் | உண் |
| கிளி | எல்லாம் | பாடினார் |
| அரிச்சந்திரன் | பால் | ஆடும் |
| மயில் | சொன்னதைச் | பேசினான் |
| ஆசிரியர் | பாப்பாப்பாட்டுப் | தரும் |
| பசு | இட்டு | படிப்பித்தார் |

## பாடம் . 4



## ஸ்ரீ லங்கா

ஸ்ரீ லங்கா எமது தாய் நாடு. அது இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ளது. சமுத்திரத்தினால் சூழப்பட்டுள்ளமையால் எமது தாய்நாடு ஒரு தீவு ஆகும். நம்நாடு வளமானது. ஆதலால் பண்டைய காலத்திலிருந்து வெளிநாட்டினர்கள் வளங்களைத் தேடி நம்நாட்டை வந்து அடைந்தனர். அந்தக் காலத்தில் முத்துக்கள், யானைத் தந்தங்கள், இரத்தினக்கற்கள் போன்ற பெறுமதி வாய்ந்த பொருள்களைத் தேடி அவர்கள் இங்கு வந்தனர். அரேபிய

வணிகர்களும் கறுவாப்பட்டை, ஏலம், கிராம்பு போன்ற வாசனைப் பொருள்களைத் தேடி இங்கு வந்தனர். நம் நாட்டிலிருந்து பெறப்பட்ட விலைமதிக்கவொண்ணா இரத்தினக் கற்கள் உலகத்தில் சக்கரவர்த்தி களினதும் அரசர்களினதும் முடிகளில் பதிக்கப்பட்டிருந்தன. ஆதலால் நம்நாடு அக்காலத்தில் இரத்தின தீபம் என்னும் பெயரினாலும் அழைக்கப்பட்டது.

ஸ்ரீ லங்கா ஒரு சிறிய தீவாக இருந்த போதிலும் அது உலகமெங்கும் பரவியஅழியாப்புகழ் கொண்டுள்ளது. இங்கு உஷ்ண, குளிர், நடுத்தர சுவாத்தியங்கள் உள்ளன. நாட்டின் கரையோரப் பகுதி உஷ்ண சுவாத்தியத்தையும், உயர்ந்த மலைகள் நிறைந்த நடுப்பகுதி குளிர் சுவாத்தியத்தையும் கொண்டுள்ளன. உஷ்ணம், குளிர் ஆகிய இரண்டையும் கொண்ட பகுதியில் நடுத்தர சுவாத்தியத்தைக் காணலாம். அந்தந்த சுவாத்தியங்களுக்கேற்ற வகையில் பல்வேறு செடிகொடி மரங்கள் செழிப்புற வளர்கின்றன. .

இற்றைக்கு சுமார் இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் விஜய என்னும் குமாரன் எழுநூறு தோழர்களோடு இங்கு வந்து குடிகொண்ட காலந்தொட்டு இந் நாட்டின் வரலாறு ஆரம்பமாகிற்று. அவர்கள் நாட்டின் வடமேற்குப் புறத்தில் குடியிருப்புகளை ஆரம்பித்து வாழத்தொடங்கினர். அவ்விடம் படிப்படியாக நாட்டின் நிருவாக மையமாக மாறி பின்னர் அனுராதபுரம் என்னும் நகரம் உருவாகியது. அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட அனுராதபுரமே ஸ்ரீ லங்காவின் முதலாவது இராசதானியாக விளங்கியது

அயல் நாடுகளிலிருந்து அடிக்கடி படையெடுத்து இங்கு வந்த அரசர்களும், படை வீரர்களும் நம் நாட்டின் வளத்தைச் சூறையாடினர். இப் பகைவர்களின் தாக்குதல்களின் விளைவாக பிற் காலத்தில் அனுராதபுர இராசதானி, பொலன்னறுவை, கம்பளை, தம்பதெனியா, குருநாகல், கண்டி ஆகிய இடங்களுக்கு மாறியது . ஸ்ரீ லங்காவின் கடைசி இராசதானி கண்டி இராசதானி ஆகும்.

கண்டி அரசாட்சியின் பலவீனத்தைக் கண்ட ஐரோப்பியர்கள் அவர்களின் நவீன ஆயுத பலத்தைக் கொண்டு நம் நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றினார்கள். போர்த்துக்கேயர்களும், ஒல்லாந்தர்களும் அவ்வாறு நம் நாட்டின் சில பகுதிகளை தற்காலிகமாக நிருவகித்தனர்.

இறுதியில் ஆங்கிலேயர்கள் வந்து கடும் போர் செய்து கண்டி அரசனை பிடித்து, நமது தாய்நாட்டை முற்றாகக் கைப்பற்றினர். அது 1815 ஆம் ஆண்டில் நிகழ்ந்தது. அதற்குப் பின்னர் அவர்கள் 1948 ஆம் ஆண்டு வரை நம் நாட்டை ஆண்டனர். நாம் 1948 ஆம் ஆண்டு மாசி மாதம் 04 ஆம் திகதியில் அவர்களுடைய அதிகாரத்திலிருந்து சுதந்திரத்தைப் பெற்றோம். தற்போது எமது தாய்நாடு ஒரு சுதந்திரக் குடியரசாகும்.

இங்கு சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் ஆகிய இனத்தவர்கள் வசிக்கின்றனர். மேலும் பௌத்தம், இந்து, கத்தோலிக்கம், இஸ்லாம் ஆகிய சமயங்களும் இங்கு உள்ளன. சிங்கள பௌத்தர்கள் இங்கு பெரும்பான்மை யினராக விளங்குகின்றார்கள்.

நாம் விவசாயத்தை முதற்றொழிலாகக் கொண்டவர்கள். தற்போது தென்னை, இறப்பர், தேயிலை ஆகிய மூன்று பயிர்களும் வர்த்தகப் பயிர்களாக நம் நாட்டு வருமானத்தின் பெரும் பங்கினை ஈட்டித் தருகின்றன.

## பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. ஸ்ரீ லங்கா ஒரு தீவு எனக் கூறப்படுவதற்கு காரணம் என்ன?
2. பண்டைய காலத்தில் வெளிநாட்டினர்கள் நம் நாட்டுக்கு வந்தது ஏன்?
3. தற்போது வெளிநாட்டினர்கள் நம் நாட்டுக்கு வருவதற்கு காரணம் என்ன?

4. பழங்காலத்தில் நாம் ஏற்றுமதி செய்த பொருள்கள் எவை?
5. தற்போது நாம் ஏற்றுமதி செய்கின்ற பொருள்கள் எவை?
6. நமது தாய்நாடு ஒரு விவசாய நாடு என கூறுவதற்கு காரணம் என்ன? அதற்கான சான்றுகளைக் காட்டுக.
7. ஸ்ரீ லங்காவின் நிருவாகம் சம்பந்தப்பட்ட முக்கிய இடங்களை ஒழுங்காகக் குறிப்பிடுக.
8. நாம் வல்லரசுகளின் ஆட்சியின் கீழ் எவ்வளவு காலம் இருந்தோம்? – விளக்குக.
9. நாம் சுதந்திரம் பெற்றது பற்றியும், குடியரசு ஆனது பற்றியும் உமது கருத்துக்களை கூறுக.
10. தற்போதைய ஸ்ரீ லங்கா ஒரு மூன்றாம் உலக நாடு எனச் சிலர் கூறுகின்றார்கள். இன்னும் சிலர் வளர்முக நாடென அறிமுகப்படுத்து கின்றார்கள். எமது தாய்நாட்டைப் பொறுத்தவரையில் இந்தப் பெயர்கள் பொருத்தமானவையா, இல்லையா என்பதைக் காரணங்காட்டி ஆராய்க.

பின்வரும் சொற்களை விளக்குக.

1. மூன்று சுவாத்தியங்கள்
2. ஸ்ரீ லங்காவின் புவியமைப்பு
3. பருவக்காற்று மழை
4. இரு வலயங்கள்

பின்வரும் கூற்றுக்களுக்குக் கருத்துரை தருக.

1. "அரசராட்சியின் கீழ் இருந்த காலத்தில் ஸ்ரீ லங்கா சமய, கலாசார துறைகளிலும் சுபீட்சத்திலும் புகழ் பெற்றிருந்தது. வெளிநாடு களிலும் கூட அதன் கீர்த்தி பரவிக் காணப்பட்டது.

2. "ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தின் கீழ் நாம் வாழ்ந்த காலம் ஸ்ரீ லங்காவின் பொற்காலமாகும். நிருவாகத்தின் நேர்மை, வெளிநாட்டுடனான தொடர்புகளின் விருத்தி, வர்த்தகப் பயிர்கள் மூலம் அந்நியச் செலாவணி பெறல், போக்குவரத்து, சுகாதாரம், கல்வி போன்றவற்றின் மறுமலர்ச்சி இந்தக் காலத்திலே தான் இடம்பெற்றன."

3. "ஸ்ரீ லங்கா 1948 ஆம் ஆண்டில் சுதந்திரம் பெற்றது. அதன் பின்னர் கட்சி வாதம் இனப் பிரச்சனைகள், மொழிக் கலவரங்கள் சமய வேற்றுமைகள் முதலியவற்றினால் ஸ்ரீ லங்கா சீர்கெட்டுப் போயிற்று."

# பாடம் - 5

## அஞ்சலி

1. சின்னஞ் சிறிய மலர், இந்தச்
   சிறிய மலரைக் கொய்திடுவாய்,
   இன்னுங் காலஞ் செல்லின், ஒளி
   இழந்து வாடி விழுந்திடுமே.

2. ஐயனே! நீ அணிமாலைக்கு
   ஆகா மலரே யானாலும்,
   செய்ய உன்றன் திருக்கரத்தால்
   தீண்டும் பெருமை அளிப்பாயே.

3. நேரம் இருண்டு போய்விடுமோ?
   நியமப் பூசை தவறிடுமோ?
   ஒரும் உள்ளம் அயர்கின்றேன்,
   உண்மை அறியா துழல்கின்றேன்.

4. மணமும் நிறமும் இல்லாவோர்
   மலரே எனினும், ஐயா! நின்
   பணியிற் சேரத் தாழாது
   பறித்துக் கொள்ள வேண்டினனே.

## பயிற்சி


பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. முதலாவது பாட்டின் பொருளை சுருக்கமாக விளக்குக.
2. முதலாவது பாட்டு மூலம் புலவர் அறியத் தரும் வாழ்க்கை சம்பந்தமான தத்துவம் யாது?
3. ஐயனே என்னும் சொல்லால் அழைக்கப்படுவர் யார்?
4. புலவர் மூன்றாவது பாட்டில் வெளிப்படுத்தும் சந்தேக விடயங்கள் எவை?
5. பூவைப் பறிக்கத் தகாதவர்களாகக் கருதப்படுவர்கள் யாவர்?
6. பூவினது மணமும் நிறமும் போல் மனிதனின் எந்த குணங்களை புலவர் எடுத்துக் கூறுகிறார்?
8. இந்த நாலு பாடல்களினதும் பொருளை சுருக்கமாக ஐந்து வசனங்களில் எழுதுக.
9. அணிமாலை, திருக்கரத்தால், என்னும் சொற்களுக்கு இலக்கணம் கூறுக.
10. வாழ்வின் நிலையாமையைப்பற்றி இந்தப்புலவரினதும் திருவள்ளுவரினதும் கருத்துக்களை ஒப்பிட்டு விளக்கு.

# பாடம் 6
# மொழிப் பயிற்சி

## லகர, ழகர, ளகரச் சொற்கள்:

01. பின்வரும் சக்கரங்களின் ஓரத்துள் இருக்கும் எழுத்துக்களோடு நடுவிலுள்ள எழுத்தைச் சேர்த்துச் சொற்களாக்குக.




02. முதலாம் சக்கரத்தில் உள்ள சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக:

(அ) மாடு .............................. தின்னும்

(ஆ) அழுத பிள்ளை .............................. குடிக்கும்

(இ) நீ நிமிர்ந்து ..............................

(ஈ) .............................. துலக்கி முகம் கழுவு

(உ) .............................. எறிந்து விளையாடாதே.

(ஊ) மேசையின் ............................ புத்தகம் இருக்கிறது.

(எ) மகிழ்ச்சி உண்டாகும் போது நாய் ............................ ஆட்டும்.

(ஏ) முக்காலி மூன்று ............................ உள்ள ஓர் ஆசனம்.

03. இரண்டாம் சக்கரத்தில் உள்ள சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

(அ) ............................ ஆயினும் குளித்துக் குடி.

(ஆ) ஆலமரத்தின் ............................ வழிப்போக்கன் இளைப்பாறினான்.

(இ) யாழ்ப்பாடி ............................ வாசித்துப் பரிசு பெற்றான்.

(ஈ) ஆறு இல்லா ஊருக்கு அழகு ............................

(உ) நீ நீண்ட காலம் ............................

(ஊ) ............................ பத்து எழுபது ஆகும்.

04. மூன்றாம் சக்கரத்தில் உள்ள சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

(அ) போர்வீரன் ............................ கொண்டு பகைவனுடன் போர் செய்தான்.

(ஆ) குதிரை ............................ தின்னும்

(இ) ...............................ளில் இருந்து எண்ணெய் எடுக்கலாம்.

(ஈ) கமலா மிளகாய்த் ............................... இட்டுக் கறி சமைத்தாள்.

(உ) என் காலிலே ............................... தைத்தது.

(ஊ) துணைக்கு ............................... இல்லாததால் சுந்தரம் கீரிப்பிள்ளையைக் கூட்டிச் சென்றான்.

(எ) பாலன் தன் புத்தகப் பெட்டியைத் ............................... மேற் சுமந்து சென்றான்.

(ஏ) இருபத்து நான்கு மணி நேரம் ஒரு ............................... எனப்படும்.

## பாடம் . 7

## யாவருக்கும் புகலிடம்

ஆதிகாலத்தில் எமது முன்னோர்கள் அடர்ந்த காடுகளில் வசித்து வந்தனர். நம் நாட்டில் மாத்திரமல்ல உலகமெங்கும் ஆதிகாலத்தில் வாழ்ந்தவர்கள் காடுகளிலேதான் வாழ்ந்தனர். அவர்களுக்கு நாகரீகம் பற்றிய அறிவு இருந்திருக்கவில்லை. அக்காலத்தவர்களின் வாழ்வு மிருகங்களின் வாழ்வுக்கு சமமாகவே இருந்தது. அவர் களுக்கு உணவோ, மருந்தோ, உடுப்புகளோ புகலிடங்களோ இருக்கவில்லை. அவர்கள் மழையினாலும், காற்றினாலும் மற்றும் இயற்கை ஆபத்துக்களினாலும் பாதிக்கப்பட்டு இருந்தனர். வேட்டையாடி, மிருகங்களைக் கொன்று, அவற்றின் இறைச்சியை உண்டனர். பழ வகைகளையும், கிழங்கு வகைகளையும், சில தாவர வகைகளையும் உண்டு, கற்குகைகளில் வாழ்ந்தனர்.

காலஞ்செல்லச் செல்ல, அவர்களின் சனத்தொகை பெருகி, தேவைகளும் அதிகரித்து வந்தமையால் அவர்கள் கூட்டம் கூட்டமாக புதிய புதிய இடங்களைத் தேடிப் பிரிந்தனர். அவ்வாறு பிரிந்து போவது அவர்களின் மனதில் ஒருவிதமான உணர்ச்சியை உண்டாக்கியது. அந்தப் புத்துணர்ச்சி தான் நாகரீகத்தின் ஆரம்பம் ஆகும்.

வேட்டையாடி நடமாடும் கூட்டங்களாக வாழ்ந்த அவர்கள் நிரந்தரமாக வசிப்பதற்கு கற்குகைக்ளைத் தெரிந்தெடுத்தனர். கடும் மழை பெய்யும் மாரி காலங்களிலும் கடும் வரட்சி பரவிய கோடை காலங்களிலும் உண்டான

இடையூறுகளின் விளைவாக பண்ணைகளை உருவாக்கியெடுக்கும் எண்ணம் அவர்களுக்கு உண்டானது. கற்குறைகள் போதாமையினால் அவற்றை சீர்திருத்தியெடுக்கும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். இவ்வாறு தலைமுறை தலைமுறையாக பெற்றிருந்த அனுபவங்கள் அவர்களை நாகரீகத்தை நோக்கி இட்டுச் சென்றன.

பின்னர் வேட்டையாடுவதிலும் பார்க்க ஆடுமாடுகளை வளர்ப்பதிலும் வேளாண்மை செய்வதிலும் நன்மையைக் கண்ட ஆதிவாசிகள் மரப்பட்டைகளைக் கொண்டு உடுப்புகளைத் தயாரிக்கவும், நெருப்பைக் கொண்டு உணவை சமைக்கவும் பழகினர்.

இவ்வாறு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் சிறிது சிறிதாக வளர்ந்து வந்த நாகரிகம் தற்போது அதன் சிகரத்தை அடைந்திருப்பதைக் காணலாம்.

ஆதிகாலத்தவர்களின் ஒரே நோக்கமாயிருந்த உணவைத் தேடுதல், உடுப்பு, வீடு ஆகிய வேறான அம்சங்களைத் தேடுவது வரை விரிவடைந்தது. தற்போது உணவுக்கு அடுத்ததாக முக்கிய இடம் வகிப்பது புகலிடமாகும்.

நாம் வாழும் உலகத்தின் சில பகுதிகளில் வசிக்கின்றவர்கள், விசேடமாக புதிய விஞ்ஞானத்தின் உச்சப் பயனைப் பெறும் வல்லரசு நாடுகள், சந்திரன், செவ்வாய், வெள்ளி, வியாழன் ஆகிய கிரகங்களில் குடியிருப்புகளை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அதுவும் ஒருவித புகலிடத் தேடலாகுமே.

தற்போதைய உலகத்தில் மனிதனாகப் பிறந்தவன் மனிதாபிமானத்தோடு வாழ வேண்டுமென்றால் அவனுக்கு கட்டாயமாகப் புகலிடம் தேவைப்படும். சனத்தொகையின் பெருக்கத்தோடு நிலபரப்பின் குறுக்கமும் விரைந்து ஏற்படுகிறது. ஒவ்வொரு தனி மனிதனும் தனக்கென ஒரு புகலிடம்

இருக்க வேண்டும் என்று விரும்புவது இயற்கை. இது "எனது வீடு" என்னும் அளப்பரிய அபிமானத்தினால் உண்டாகும் ஒரு இச்சையே ஆகும்.

உலகத்தில் எவ்வளவோ நிலப்பரப்பு இருந்தாலும், யாவருக்கும் புகலிடம் என்பது எப்போதும், எவராலும் நிறைவேற்ற முடியாத ஒன்றாகும். அதற்கு பிரதான தடையாயிருப்பது நாம் கண்டம், தேசம், நாடு, இனம், சமயம், மொழி ஆகிய பல்வேறு பேதங்களினால் பிரிக்கப்பட்டிருப்பதாகும்.

## பயிற்சி

1. ஆதிகாலந்தொட்டு இதுவரை மனிதனின் புகலிடம் பெற்ற மாற்றங்கள் எவையென ஆராய்க. அவற்றின் வடிவமைப்புகள், அதற்காகப் பயன்படுத்த பொருள்கள் ஆகியவற்றையும் கட்டடக் கலையென்று ஒரு கலை உருவாகிய விதத்தையும் விளக்குக.

2. எமது ஆதிவாசிகள் கற்குகைகளை வசிப்பிடங்களாக தெரிந்தெடுத்தற்கு காரணம் என்ன? பிற்காலத்தவர் அதனை விட்டுவிட்டதற்கும் காரணம் என்ன?

3. "நாம் தற்போது நாகரிகத்தின் உச்ச நிலையை அடைந்துள்ளோம்" இந்தக் கூற்று சரியானதா? காரணங்காட்டுக.


4. "யாவருக்கும் புகலிடம்" என்னும் குறிக்கோள் எப்போதும் நிறைவாகாத ஒரு கனவு." ஆராய்க.

5. "தனக்கென ஒரு புகலிடம்" என்னும் எண்ணம் இல்லாதவர்களும் உலகத்தில் வாழ்கிறார்கள். அவர்கள் யாவர்?

## பாடம் . 8

## வேளாண்மை

எமது நாடு ஒரு விவசாய நாடு. ஆதலால் நாமும் விவசாயிகள். நாம் தலைமுறை தலைமுறையாக விவசாயத்தை எமது தொழிலாகக்கொண்டு வருகின்றோம். பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக நாம் நம் நாட்டை விவசாயம் மூலம் வளப்படுத்தினோம். எமது முன்னோர்கள் இந்த சிறிய தீவை கிழக்காசியாவின் நெற் களஞ்சிய மாக்கினார்கள்.




எமது பழங்கால மன்னர்கள் சமுத்திரங்களைப் போன்ற குளங்களைக் கட்டுவித்து, அவற்றில் மழை நீரை தேக்கி வைத்து, நீண்ட வாய்க்கால்கள் மூலம் பரந்த வயல்வெளிகளுக்கு அந்த நீரைப் பாய்ச்சினார்கள். அதன் மூலம் நெல் உட்பட பல்வகையான தானியங்கள் பயிரிடப்பட்டன. இதனையே வேளாண்மை என அழைத்தனர். அந்தக் காலத்தில் மாடுகள் பூட்டப்பட்ட ஏர்கள் மூலம் நிலத்தை உழுதார்கள். மண்வெட்டிகள் மூலம் நிலத்தை சமன்படுத்தினார்கள். அவ்வாறு பண்படுத்தப்பட்ட நிலத்தில் விதைக்கப்பட்ட நெற்பயிர்கள் செழிப்புற வளர்ந்து ஏராளமான விளைச்சலைத் தந்தன.



4 –

அந்தக் காலத்தில் பொதுமக்கள் மாத்திரமல்ல அரசர்களும் கூட வேளாண்மையில் ஈடுபட்டனர். ஐப்பசி மாதத்தில் நாடு முழுவதிலும் உழவுத் தொழில் ஒரு விழாவாக நடைபெறும். அந்த விழாக்களுக்கு தலைமை வகித்தவர்கள் எமது அரசர்களே. பொன் ஏர்களில் பூட்டப்பட்ட மாடுகளுடன் நாள் பூராகவும் வயலில் இறங்கி



உழவுத் தொழிலில் ஈடுபட்டு அவர்கள் நாட்டினருக்கு உதாரண புருடர்களாக வாழ்ந்து தமது வாழ்க்கையையே உழவுத்தொழிலுக்கு அர்ப்பணித்தனர்.




நம் நாட்டின் அமைப்பானது சீரான வேளாண்மைக்கு உகந்தவாறு அமைந்திருக்கின்றது. வருடத்தின் ஆரம்ப மாதமாகிய தை மாதத்தில் பதினாலாவது நாளில் சூரிய பவானுக்கு நன்றிக் கடனாக பொங்கல் படைத்து விழாவை எடுப்பார்கள். சூரிய பகவான் அகில உலகத்தவர்களுக்கும் ஒளி வழங்குவது போல பயிர்களுக்கும் ஒளி வழங்குகின்றார். பயிர்கள் சூரியபகவானிடதிலிருந்தே சக்தியைப் பெற்று செழிப்புற வளர்ந்து விளைச்சலைத் தருகின்றன. எமது நாட்டின் சில பகுதிகள் வரண்ட பிரதேசங்களாக உள்ளன. அநேகமாக வடக்கு, வடமத்திய, தெற்கு பிரதேசங்கள்

வரண்ட வலயத்தில் அமைந்துள்ள மையால் ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் அப்பிரதேசங்களில் கடும் வரட்சி ஏற்பட்டுவிடும். அந்தக் காலங்களில் மழை நீர் கிடைப்ப தரிது. ஆதலால் தான் எமது அரசர்கள் நிலைமையை உணர்ந்து மாரிகாலத்தில் இடைவிடாது பெய்யும் மழை நீரை தேக்கி வைப்பதற்காக



மிகப்பெரிய குளங்களைக் கட்டுவித்தார்கள். சில இடங்களில் வெள்ளத்தை கட்டுப்படுத்துவதற்கு உறுதியான அணைகளையும் கட்டுவித்தார்கள். மாரி காலத்தில் மழை நீரினாலும் கோடைக் காலத்தில் குளநீரினாலும் வேளாண்மையை மேற்கொள்ள நம்நாட்டு விவசாயிகள் பழகிக் கொண்டனர். .



மாரி காலத்தில் பருவக்காற்று மழை அதிகம். அந்தக் காலத்தில், பெரும் போக முறைக்கேற்ப நீண்ட காலத்தில் விளைச்சல் தரும் நெல் வகைகள் பயிரிடப்படுகின்றன. கோடைக் காலத்தில் மழை குறைந்து போவதனால் சிறு போக முறையில் குறுகிய காலத்தில் விளைந்து பயன்தரும் நெல் வகைகள் பயிரிடப்படுகின்றன.

நம் நாட்டு விவசாயிகள் விதைக்கப்படும் தானிய வகைகள் பற்றியும் நன்கு அறிந்திருந்தனர். நெல், தினை, மற்றும் சாமை, கோதுமை, பயறு, குரக்கன் முதலிய தானியங்களையும் பயிரிட்டனர். அவை

மாத்திரமல்ல, பல்லின கிழங்கு வகைகளையும், காய்கறி வகைகளையும் பயிரிட்டார்கள். மேலும் இயற்கை பசளைகளைப் பயன்படுத்திய அவர்கள் இயற்கைக் கிருமிநாசினிகளையும் பயன்படுத்தினர். அவர்கள் வருடம் பூராவும் நிகழும் சுவாத்திய மாறுபாடுகளை நன்று அறிந்திருந்தமையால் தரையிலும் சேற்று நிலத்திலும் பயிரிட வேண்டிய, பருவத்திற்கு பொருத்தமான தானிய, கிழங்கு, காய்கறிவகைகளைத் தெரிவு செய்து பயிரிட்டனர். ஆனால் வரட்சி, வெள்ளம் கிருமி போன்றவற்றினால் அவர்கள் பயிர்களை அழியவிடவில்லை.

## பயிற்சி

1. "வேளாண்மை" என்பது என்ன? விளக்குக.

2. வேளாண்மையை மேம்படுத்தும் இயற்கைக் காரணிகள் யாவை?

3. ஈர வலயத்திலும் பார்க்க வரண்ட வலயத்தில் வேளாண்மை வெற்றிகரமாக அமையும். ஏன்?

4. பழங்கால வேளாண்மை முறைகளுக்கும் தற்போதைய வேளாண்மை முறைகளுக்கும் இடையிலுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளக்குக.

5. "நீரின் றமையா யாக்கைக்கெல்லாம்
உண்டிகொடுத்தோ ருயிர் கொடுத்தோரே,
அடுபோர் செழிய! நிகழாது வல்லே
நிலநெளி மருங்கி னீர் நிலை பெருகத்

தட்டோரம்ம விவட்டட் டோரே
தள்ளா தோரிவட்டள்ளா தோரோ"

என்னும் புறநானூற்றுக் கூற்றுக்கள் இக் காலத்திற்கும் எவ்வளவு தூரத்திற்கு பொருந்தும் என்பதனை ஆராய்க..

6. ஐரோப்பியர்களின் ஆட்சிக்காலத்தில் வேளாண்மை முற்றாகவே கைவிடப்பட்டது. ஏன்?

7. தற்போதும் வேளாண்மை புறக்கணிக்கப்பட்ட நிலையில் தான் உள்ளது. அதற்கு ஏதுவாயமையும் சூழ்நிலையை ஆராய்க.

8. "මඩ සෝදාගත් කල ගොවියා රජකමටත් හොබී,: சேற்றைக் கழுவிய பின்னர் விவசாயி சிம்மாசனத்துக்கும் பொருத்தமானவர் ஆவார்) இப்படியான வழக்கொன்று தோன்றுவதற்குக் காரணம் என்ன?

## பாடம் - 9

## சுப்பிரமணிய பாரதியார்



தமிழகத்தில் "புரட்சிக் கவி" என்னும் பெயர் சூட்டப்பட்ட புலவர் சுப்பிரமணிய பாரதியார் ஆவார். ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தின் கீழ் மொழி, சமயம், கலை, கலாசாரம், ஆகியவற்றை இழந்து திரிசங்கு நிலையில் இருந்த தமிழகத்தினருக்கு சுப்பிரமணியம் ஓர் உதயசூரியனானார். சுய

காரியகருமங்களில் அக்கறைக் காட்டாமல் பிறரின் இன்ப துன்பங்களையும் மகிமையையும் மாத்திரம் பாராட்டிக் கொண்டுகாலம் கழித்துக் கொண்டிருந்த இளைய பரம்பரையினருக்கு பாரதியார் ஒரு கலங்கரை விளக்கம் ஆனார்.

தென்னிந்தியாவில் எட்டயபுரம் என்னும் ஓர் ஊர் உண்டு. பாரதியார் அந்தக் கிராமத்தில் சின்னச்சாமி ஐயர் என்பவருக்கும், இலக்குமி அம்மாள் என்பவருக்கும் மகனாகப் பிறந்தார். பாரதியார் புத்தியுள்ள சிறுவனாக விளங்கினார். அதனால் அவர் சிறுவயதிலேயே தமிழ் மொழி உட்பட பல மொழிகளில் சிறந்த மாணவராக விளங்கி தனது சாதுரியத்தைக் காட்டினார். பாடசாலையிலுள்ள பாடங்களுடன் ஆங்கிலம், சமஸ்கிருதம், இந்தி ஆகிய பிறமொழிகளையும் கற்றார். அவர் இளமையிலேயே பாடல்களை இயற்றுவதிலும் பாடுவதிலும் வல்லவராக விளங்கினார். அவர் தனது இனத்தவர்கள் சோம்பேறிகளாக நேரத்தை விணே கழிப்பதைக் கண்டார். அற்ப விடயங்களையிட்டு வாதப் பிரதிவாதங்களில் இறங்கி தாய் நாட்டின் வளங்களை வீணாக்குவதையும், அந்நியர்கள் வந்து தத்தமது சமயம், மொழி, கலாசாரம் ஆகியவற்றைப் பரப்புவதையும் கண்டு அவர் மனம் வருந்தினார். உற்சாகமின்மை, நேர்மையின்மை, போலி வாழ்க்கை விரும்புவது ஆகிய கேடான நெறிகளில் செல்வதைக் கண்டு அவற்றைக் கண்டித்தும் பாடல்களை இயற்றினார்.

பாரதியார் மெலிந்த தேகம் உடையவராக இருந்தும் கம்பீரமாகத் தோற்றமளித்தார். அவர் தடித்த சட்டையும் தலைப்பாகையும் அணிந்திருந்தார். எப்போதும் நெற்றியில் சந்தனத் திலகத்தை வைத்துக்கொண்டு முறுக்கிய மீசையுடன் இருந்த அவர் வீரனைப் போலவே நடந்தார். அவரின் தோற்றம் கம்பீரமானதாயிருந்தும், அவர் எப்போதும் மகிழ்ச்சி பொங்கும் முகத்துடன் தான் காணப்பட்டார்.

அவர் சிறுவர்களுக்காக "பாப்பா பாட்டுக்களை" பாடினார். அந்தப் பாட்டுக்களில் சுவையும் புத்திமதிகளும் நிரம்பியிருந்தன. அவருக்கு எல்லோரும் மரியாதைக் காட்டினார்கள். ஆதலால் அவரை எல்லோரும் பாரதியார் என அழைத்தனர். அவரும் எல்லோரையும் ‘‘பாண்டியா’’ என்னும் ஆதரவுச் சொல்லாலே அழைத்தார். அவரின் பாடல்களை சிறுவர்களும் முதியோர்களும் விரும்பிப் பாடினார்கள்.


அவர் எதற்கும் அஞ்சமாட்டார். ஆதலால் அவர் பழகியவர்களை அழைத்து ‘‘அச்சந்தவிர், ஆண்மை தவறேல், உடலினை உறுதி செய், எண்ணுவது உயர்வு, ஏறுபோல் நட’’ ஆகிய சொற்களால் உற்சாகப்படுத்தினார்.

அவர் ஒரு சிறந்த புலவர். அவரால் இயற்றப்பட்ட பாடல்கள் பல. அவரின் ‘‘பாப்பா பாட்டுக்கள்’’ அவற்றுள் தலைசிறந்தன. பின்வருவன பாரதியாரின் பாப்பா பாட்டக்களில் வரும் சில பாடல்களாகும்.


## பாடம் 10
## பாப்பாப் பாட்டு



காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு,
மாலை முழுதும் விளையாட்டு – என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா.




பொய் சொல்லக் கூடாது பாப்பா – என்றும்
புறஞ்சொல்லலாகாது பாப்பா.
தெய்வம் நமக்குத் துணை பாப்பா – ஒரு
தீங்கும் வர மாட்டாது பாப்பா.




சோம்பல் மிகக் கெடுதி பாப்பா – தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா
தேம்பி அழுங்குழந்தை நொண்டி – நீ
திடங்கொண்டு போராடு பாப்பா.



ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்கலாகாது பாப்பா,
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா.





## பயிற்சி

1. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
   1. புரட்சிக்கவி என்பவர் யார்?
   2. சிங்கள புரட்சிக் கவிகள் யாவர்?
   3. சுப்பிரமணிய பாரதியாரை புரட்சிக்கவி எனக் கூறுவது சரியானதா? உதாரணங்களோடு விளக்குக.
   4. பாரதியாரின் கவிதைகளிலுள்ள விசேடம் யாது?
   5. சுப்பிரமணிய பாரதியார் கண்ட கண்ட வரை "பாண்டியா" என அழைத்தார். ஏன்?
   6. பாரதியாரின் தோற்றத்தை விளக்குக.
   7. "பாப்பா பாட்டுக்கள்" என்பவை யாவை?
   8. பாரதியாருடன் ஒப்பிட்டு பேசக்கக்கூடிய சிங்களக் கவிஞர் யார்?
   9. "புரட்சிக்கவி" என்னும் வகையில் கணிக்கக்கூடிய, ஆனாலும் சிங்கள தேசத்தவர் அல்லாத சிங்கள பாட்டுக்களைப் பாடிய புரட்சிக்கவி யார்?
   10. சிங்கள புரட்சிக்கவிஞர்கள் இருவரினதும், பாரதியாரினதும் கவிதைகளை ஒப்பிடுக.

2. இந்தப் பாடத்திலுள்ள நாலு பாடல்களை சிங்களத்தில் செய்யுள் வடிவில் மொழிபெயர்க்குக.

3. பின்வரும் சொற்களின் பொருள்களைத் தருக.

(1) வழக்கப்படுத்துதல் (2) புறஞ்சொல்லுதல் (3) சொல்தட்டுதல்
(4) தேம்பியழுதல் (5) வைதல், (6) திடங்கொள்ளுதல்
(7) சோம்பல் (8) நொண்டி (9) தெய்வம்
(10) ஓய்ந்திருத்தல்

# பாடம் . 11

## வெசாக் பண்டிகை



வெசாக் பௌர்ணமி நாள் உலகத்துப் பௌத்தர்களின் புனித நாளாகும். பௌத்த சமயத்தைப் போதித்தவராகிய கௌதம புத்தபகவானின் பிறப்பு, மெய்ஞ்ஞானம் பெறல், பரிநிர்வாணமடைதல் ஆகிய மூன்று

சம்பவங்களும் வெசாக் பௌர்ணமி நாளிலே நிகழ்ந்தமையால் பௌத்தர் கள் இந்தப் புனிதநாளை அதி உத்தம நாளாகக் கருதுகின்றார்கள்.



இற்றைக்கு சுமார் இரண்டா யிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்தில் வட இந்தியாவில் கபிலவஸ்து என்னும் நகரத்தினை சுத்தோதனன் என்னும் ஒரு சிற்றரசன் ஆண்டு வந்தான். அந்த அரசனுடைய பட்டத்தரசியாகிய மஹாமாயா தேவி தேவதஹ நகரத்தின் சிற்றரசனாகிய சுப்பிரபுத் தனின் புதல்வியாவாள். சுத்தோத னன் அரசனுக்கும் மஹமாயா அரச மாதேவிக்கும் பிறந்த புதல்வன் சித்தார்த்தன் என்னும் பெயரினால் விளங்கினான். பிறந்த முகூர்த்தத் திலிருந்தே ஆச்சரியமான குணவியல்பு களினால் சுற்றத்தாரை யும், நாட்டினரையும், மகிழ்வித்த இந்த அரச குமாரன் பதினாறாவது வயதில் யசோதரை என்னும் அரசிளங் குமரியை மணந்தான். அவர்களுக்கு இராகுலன் என்னும் குமாரன் பிறந்தான். அவன் பிறந்த நாளிலே உலக இன்பங்களின் நிலையில்லாத் தன்மையை உணர்ந்த சித்தார்த்தர் உலக சுகங்களை

வெறுத்துவிட்டு, சகல இராச்சியத்தையும் கைவிட்டு துறவறம் பூண்டார். அதன் பின்னர் அவர் சித்தார்த்த துறவி என அழைக்கப்பட்டார்.

துறவறம் பூண்ட சித்தார்ந்தர் "கிங் சச்ச கவேசீ" (உண்மை என்பது என்ன) என்ற வினாவுக்கு விடை காண விடா முயற்சியில் ஈடுபட்டு பிறப்பு – இறப்பு ஆகிய துன்பங்களிலிருந்து விடுபடக்கூடிய மெய்ஞ்ஞானத்தைத் தேடி கயா என்னும் இடத்தில் ஆறு வருடங்கள் கடுந்தவம் இயற்றினார். பின்னர் ஐம்புலன்களை மகிழ்விக்கும் இல்லறவியலுக்கும் தேகத்தை வாட்டி செய்யும் கடுந் தவத்திற்கும் இடையிலான நடுவழியை மெச்சி அதனூடே தவஞ்செய்து, கயாவில் வெள்ளரச மர நிழலில் ஒரு வெசாக் பௌர்ணமி நாளில் சித்தாத்தர் ஞானத்தைப் பெற்றார். அதன் பின்னர் அவர் புத்தர் ஆனார்.

பின்னர் அவர் தான் பெற்ற மெய்ஞ்ஞானத்தை பிரம்ம தேவர் உட்பட அகில உலகத்தவர்களுக்கும் போதித்தார்.

அவர் தான் பெற்ற ஞானம் மூலம் இந்த வையகத்தில் உள்ள அனைத்தும் நாலு உண்மைகளில் அடங்கியிருப்பதைக் கண்டார். இந்த நான்கு உண்மைகளும் துக்க, சமுதய, நிரோத, மார்க்க என்பனவாம். ஆதியாகிய பிறப்பு துன்பமானது. அந்தமாகிய இறப்பும் துன்பமானது. "ஆதியாகிய பிறப்புக்கும் அந்தமாகிய இறப்புக்கும் இடையில் இன்பம் காண்பது அரிது." என்பதை அவர் துக்க என்னும் உண்மையினால் போதித்தார். இந்தப் பிறப்புக்கு மூலகாரணம் "பற்று" என்பதை இரண்டாவது உண்மையாகப் போதித்தார். துன்பங்களை உண்டாக்கும் பற்று முதலான ஏதுக்களை ஒழிக்கும் துக்க நிரோதத்தை மூன்றாவது உண்மையாகப் போதித்தார். பற்றற்று சாந்த சுகத்தைப் பெறுவதற்கான வழியாக, அதாவது மார்க்கமாக, எண் வகை நடத்தைகளையும் போதித்தார்.

இவ்வாறு மெய்ஞ்ஞானத்தைப் பெற்று நாற்பத்தைந்து ஆண்டுகளாக அங்க, மகத, காசி, கோசல, வச்ச மல்ல சூரசேன போன்ற பதினாறு இராஜ்யங்களில் உலாவிவந்து சமுதாயத்தின் சகல தரத்தினர்களுக்கும் தான்

அறிந்து கொண்ட தர்மத்தை போதனை செய்து, எண்பதாவது வயதில் குசினாரா என்னும் இராச்சியத்தில், மல்ல என்னும் அரசனின் பூங்காவில் பரிநிர்வாணம் அடைந்தார். பரிநிர்வாணம் என்பது தூய நிலையைக் குறிக்கும்.

பௌத்தர்கள், தமது சமய கர்த்தாவாகிய புத்தபகவானின் பிறப்பு, ஞானோதயம் பெறல், மறைவு ஆகிய மூன்று சம்பவங்களும் இடம் பெற்ற வெசாக் பௌர்ணமி நாளை மிகவும் புனிதமான நாளாகக் கருதுகின்றார்கள். உலகத்து பௌத்தர்கள் இந்தப் புனித நாளிலே சீல அனுஷ்டானத்தில் ஈடுபட்டு அன்னதானம் போன்ற தான தருமங்களை செய்து தியானத்தில் ஈடுபடுகின்றனர். ஸ்ரீ லங்காவில் வாழும் பௌத்தர்களும், சில வேற்று மதத்தவர்களும் தத்தமது வீடுகளில் வெசாக் கூடுகளை ஏற்றி வைப்பார்கள். நகரங்களில் அழகான வெசாக் பந்தல்களைக் கட்டுவார்கள். ஒவ்வொரு பன்சலையிலும் விசேட பூசைகளை ஒழுங்கு செய்வார்கள். வெசாக் பௌர்ணமி நாளில் நாடு முழுவதும் விழாக் கோலம் பூண்டு திருமண இல்லமாகத் திகழும்.

## பயிற்சி

1. ஸ்ரீ லங்காவில் வாழுபவர்களின் இன அடிப்படையிலான விழாக்கள் எவை, சமய அடிப்படையிலான விழாக்கள் எவை?
2. இன அடிப்படையிலான விழாக்களிலுள்ள தத்துவங்கள் யாவை?
3. ஸ்ரீ லங்காவைப் பொறுத்தமட்டில் வெசாக் பண்டிகை ஸ்ரீலங்கா மக்களின் தலைசிறந்த விழாவாகும். ஆராய்க.
4. வெசாக் போயாவுக்கும், பொசொன் போயாவுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் எவை?
5. வெசாக் பண்டிகையின் நோக்கம் என்ன?
6. வெசாக் பண்டிகை எடுத்தியம்பும் தத்துவம் யாது?

7. வெசாக் பண்டிகை நாளில் பௌத்தர்கள் பின்பற்றும் ஆசாரங்கள் எவை?

8. பின்வரும் சொற்களை விளக்குக.
   1. கிங் சச்ச கவேசீ
   2. ஐம்புலன்கள்
   3. நாலு உண்மைகள்
   4. நடுவழி
   5. பற்று
   6. பரிநிர்வாண நிலை


9. பௌத்தர்கள் வெசாக் பண்டிகையை கொண்டாடும் விதத்தை சுருக்கமாக விபரிக்க.


10. வெசாக் பண்டிகை உலகத்துக்கு எடுத்துக் கூறும் நற்செய்தி யாது?


# பாடம் - 12
# மொழிப் பயிற்சி:


## லகர, ழகர, ளகரச் சொற்கள்.


01. பின்வரும் சக்கரங்களில் இருக்கும் சொற்களுள் இலகுவானவற்றை வசனங்களில் அமைத்து எழுதுக.





02. அடைப்புக் குறியுள் உள்ள சொற்களிற் பொருத்தமானவற்றைக் கோடிட்ட இடங்களில் எழுதி வாக்கியம் அமைக்க.

(1) (அ) அவன் ............................ வீடு கட்டினான் (கள், கல்)

(ஆ) ........................ அழகான பறவை.கிளி, கிழி)

(இ) ............................ பூனை இனத்தைச் சேர்ந்தது. (புளி, புலி)

(ஈ) சூரியன் ............................ தருவதால் இருள் நீங்குகிறது. (ஒளி, ஒலி)

(உ) போர்வீரன் ............................ கொண்டு வெட்டினான். (வால், வாள்)

(ஊ) ............................ பெய்யக் குளம் நிரம்பியது.(மழை, மலை)

(எ) யானை மிகுந்த ............................ உடையது. (பழம், பலம்)

(ஏ) ............................ எழுந்தவுடன் படித்தல் நன்று.(காளை, காலை)

(ஐ) ............................ தாமரை வளரும். (குளத்தில், குலத்தில்)

(ஒ) துணையோடல்லது தனி ............................ போகேல் (வளி, வழி)

(2) (அ) தென்னை பனை மரங்களிற் .............................
எடுக்கப்படும். (கல், கள்)

(ஆ) பத்தில் இருந்து ஐந்தைக் .............................
(களி, கழி)

(இ) கறிக்குப் ............................. சேர்த்துச் சமைப்பர்.
(புளி, புலி)

(ஈ) குயில் கூவும் ............................. கேட்கிறது.
(ஒளி, ஒலி)

(உ) குரங்கின் ............................. நீளமானது.
(வாள், வால்)

(ஊ) சிவனொளிபாத .............................
இலங்கையில் உள்ளது.(மழை, மலை)

(எ) பலாப் ............................. மிகவும்
இனிமையானது. (பலம், பழம்)

(ஏ) .............................ப் பழம் சீப்புச் சீப்பாய்
இருக்கும். (வாழை, வாளை)

(3) (1) பின்வரும் வாக்கியங்களை அவதானிக்க.

(2) அவற்றில் லகர, ழகர, ளகரம் உள்ள சொற்களை உச்சரிக்க.

(3) அவற்றை அட்டவணைப்படுத்துக.

(அ) பழகப் பழகப் பாலும் புளிக்கும்

(ஆ) தோழனோடும் ஏழ்மை பேசேல்

(இ) இலங்கையின் கிழக்கு மாகாணத்தின் தலைநகரம் மட்டக்களப்பு.

(ஈ) நாதன் தமிழ் இலக்கிய இலக்கணங் களை நன்கு கற்றான்.

(உ) அவள் அவல் தின்றாள்.

(ஊ) வியாழன் வெள்ளிக் கிழமைக்கு முந்திய நாள்.

(எ) கடல் அகலமும் ஆழமும் நீளமும் உடையது.


(ஏ) இளையபிள்ளை வாழைப்பழம் தின் றாள்.

(ஐ) இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.

(ஒ) மழை பெய்யக் குளம் நிறைந்தது.

| | லகரம் | ழகரம் | ளகரம் |
|---|---|---|---|
| உதாரணம்: | பாலும் | பழகப் பழக | புளிக்கும் |
| (அ) | ............................. | ............................. | ............................. |
| (ஆ) | ............................. | ............................. | ............................. |
| (இ) | ............................. | ............................. | ............................. |
| (ஈ) | ............................. | ............................. | ............................. |
| (உ) | ............................. | ............................. | ............................. |
| (ஊ) | ............................. | ............................. | ............................. |
| (எ) | ............................. | ............................. | ............................. |
| (ஏ) | ............................. | ............................. | ............................. |
| (ஐ) | ............................. | ............................. | ............................. |
| (ஒ) | ............................. | ............................. | ............................. |

# பாடம் 13
# கோவில் வழிபாடு



1. கோவில் முழுதுங்கண்டேன் – உயர்
கோபுரம் ஏறிக்கண்டேன்,
தேவாதி தேவனை யான் – தோழி!
தேடியுங் கண்டிலனே.

2. தெப்பக் குளங்கண்டேன் – சுற்றித்
தேரோடும் வீதிகண்டேன்,
எய்ப்பில்வைப் பாம் அவனைத் – தோழி!
ஏழையான் கண்டிலனே.

3. சிற்பச் சிலைகண்டேன் – நல்ல
சித்திர வேலைகண்டேன்,
அற்புத மூர்த்தியினைத் – தோழி!
அங்கெங்கும் கண்டிலனே.

4. பொன்னும் மணியுங் கண்டேன் – வாசம்
பொங்கு பூ மாலை கண்டேன்,
என்னப்பன் எம்பிரானைத் – தோழி!
இன்னும் யான் கண்டிலனே.

5. தூப மிடுதல்கண்டேன் – தீபம்
சுற்றி எடுத்தல் கண்டேன்,
ஆபத்தில் காப்பவனைத் – தோழி!
அங்கே யான் கண்டிலனே.


6. தில்லைப் பதியுங் கண்டேன் – அங்குச்
சிற்றம் பலமுங் கண்டேன்,
கல்லைக் கனிசெய்வோனைத் – தோழி!
கண்களாற் கண்டிலனே.

## பயிற்சி

1. கவிராயர் முதலாவது பாட்டில் தான் காணாத பொருளாகக் குறிப்பிடுவது எதனை?
2. அவர் அந்தப் பொருளைக் காண்பதற்காக எடுத்த சிரமத்தை விபரிக்குக.
3. இரண்டாவது பாட்டில் கவிராயர் தான் எத்தகைய நிலை அடைந்துள்ளார் எனக் கூறுகிறார்?
4. ஒவ்வொரு பாட்டிலும் தான் தேடும் தேவனை புலவர் எவ்வாறு அறிமுகப்படுத்தியிருக்கிறார்?
5. இந்தப் பாடல்களில் புலவர் கண்ட இடங்களை வரிசைப்படுத்துக.
6. புலவர் கண்ட பொருள்கள் யாவை?
7. தேவாதிதேவன் என்னும் சொல்லின் பொருள் யாது?
8. கல்லைக் கனிசெய்வோன் என்பவர் யாவர்?
9. இந்தப் பாட்டுகளிலுள்ள தோழி என்னும் சொல்லுக்கு இலக்கணம் கூறுக.
10. இந்தப் பாடல்கள் எம்மதத்தினர்க்குரிய பாடல்கள் என்பதனை ஆராய்க.


## பாடம் . 14

## அசோக சக்கரவர்த்தி



பாரதம் என்னும் பெயரினாலும் அழைக்கப்படும் இந்தியாவை ஆண்ட அரசர் களுள் தலை சிறந்தவர் அசோகச் சக்கரவர்த்தி. அவர் பிந்துசார என்னும் அரசனின் புதல்வர் ஆவார். தந்தை யரான பிந்துசார ஆட்சி புரிந்த காலத்திலேயே அவர் இளவரசராக சில பகுதிகளை ஆண்டு வந்தார். சகல கலைகளிலும், வித்தைகளிலும் வல்லவராகத் திகழ்ந்த அசோக இளவரசர் கலிங்கத் தில் ஏற்பட்ட அட்டூழிய மொன்றை கட்டுப்படுத்து வதற்காக அங்கே அனுப்பப்

பட்டார். அங்கு கடும் போர் மூண்டது. அப்போரில் அசோக இளவரசர் வென்றார். ஆனால், போரில் பெருந்தொகையான மக்கள் இறந்தார்கள். அதிகமானோர் கை, கால் இழந்தவர்களாகினர். அசோக மன்னன் போரில் உயிர் இழந்தவர்களையும், அவர்களின் இழப்பினால் அநாதையர்களாகி விட்டவர்களையும் இன்னும் பல கோடிக் கணக்கான குடும்பத்தவர்களையும், அங்க வீனர்களையும், பற்றி சிந்தித்து பெருந்துயரங் கொண்டான். அற்ப பொருளுக்காக தானா "நான் பல கோடிக் கணக்கான நாட்டினரின் அருமையான உயிர்களைப் பறித்தேன்" என உணர்ந்து மனம் வருந்தினான்.



அவ்வாறு மனம் நொந்து, வேதனை யோடு அரண்மனையில் இருக்கும் வேளையில் தெருவில் செல்லும் பிக்கு ஒருவரின் சாந்த உருவத்தால் மனம் கவரப்பட்ட மன்னன் அந்த பிக்குவை அரண்மனைக்கு வரவழைத்தான்.

பின்னர் பிக்குவின் தர்ம போதனையினால் மனமாற்றம் கொண்ட அசோகன் பௌத்த சமயத்தைத் தழுவினான். இதுவரை இம்சை, ஆதிக்கம், தாக்குதல் ஆகியவற்றை தனது அரசநெறியின் கோட்பாடுகளாக்கி வாழ்ந்த அரசன் அன்று தொட்டு அகிம்சை, கருணை, சமதர்மம், தானம், ஆகியவற்றைத் தனது அரச கோட்பாடுகளாக்கினான். மிருகங்களையேனும் கொல்வது அபராதம் வழங்கக்கூடிய குற்றம் எனப் பிரகடனப்படுத்தினான். தனது இராஜ்ஜியம் முழுவதிலும் வைத்தியசாலைகள், பாடசாலைகள்,

விடுதிகள் ஆகியவற்றை உருவாக்கினான். வழிகளையும் பாலங்களையும் அமைத்தான். அநாதைகள், நோயாளிகள், வயோதிபர்கள் ஆகியோரைப் பேணிக்காப்பதற்கு பொது விடுதிகளை உருவாக்கினான். தனது இராஜ்யத்திற்குரிய பிராந்தியங்களில் மக்கள் தர்மநெறி தவறாது வாழும் வண்ணம் விதிகளை அமுலாக்கி கற்பாறைகளிலும் கற்றூண்களிலும் சிலாசாசனங்களை எழுதி வைத்தான். தேசிய வைத்தியர்களுக்கு சம்பளம் வழங்கி நாட்டினருக்கு இலவசமாக சிகிச்சை செய்யுமபடி கட்டளையிட்டான். மிருகங்களுக்கும் கூட சிகிச்சை செய்வதற்காக மிருக வைத்தியசாலைகளையும் கட்டுவித்தான்.

கலிங்கப் போரின் விளைவாக சண்டாசோகன் என அழைக்கப்பட்ட அரசன் பௌத்த சமயத்தைத் தழுவிய பின்னர் தர்மாசோகச் சக்கரவர்த்தி என அழைக்கப்பட்டான். புத்தபகவானின் பிறந்த இடமாகிய உலும்பினி பூங்காவை அடைந்த தர்மாசோக சக்கரவர்த்தி அங்கு மிகப் பெரிய கற்றூண் ஒன்றை நாட்டினார். அந்தக் கற்றூணில் சமய நெறிகளையும், கோட்பாடுகளையும் எழுதி வைத்தார்.

தர்மாசோகச் சக்கரவர்த்தியின் புதல்வரான மஹிந்த குமாரனும், புதல்வியான சங்கமித்தையும் பௌத்த சமயப் பிக்குவாகவும், பிக்குனியாகவும் மாறுவதற்கு அனுமதித்தார். தான் அறிந்து கொண்ட புனித சமயத்தை அகில இந்தியாவில் மாத்திரமல்ல உலகம் முழுவதிலும் பரப்ப வேண்டும் என எண்ணிய தர்மாசோகச் சக்கரவர்த்தி ஒன்பது பிற நாடுகளுக்கு பிக்குமாரைத் தூதர்களாக அனுப்பினார்.

தர்மாசோக மன்னனின் புதல்வராகிய அரஹத் மஹிந்த மகா தேரரும், புதல்வியாகிய அரஹத் சங்கமித்தா தேரியும் இலங்கைக்கு அனுப்பப்பட்டார்கள். அரஹத் மஹா மஹிந்ததேரர் இலங்கைக்கு வந்து, தேவநம்பியதிஸ்ஸ அரசனுக்கு தர்மபோதனை செய்து இலங்கையை ஒரு பௌத்த நாடாக்கும் அரும்பணிக்கு அத்திவாரத்தை இட்டார். அரஹத் சங்கமித்தா தேரி இந்தியாவில் இருந்து வெள்ளரசு மரத்தின் வலது பக்கக் கிளையுடன்

இலங்கைக்கு வந்தார். அவர் பெண்களை பௌத்த பிக்குனிமார்களாக்கும் வழியை உருவாக்கினார். தர்மாசோக மன்னனால் உலும்பினியில் நாட்டப்பட்ட "அசோக ஸ்தம்ப" எனப்படும் கற்றூண் உச்சியில் காணப்படும் "தர்ம சக்கர" சின்னம் தற்போது இந்தியா அரசாங்கத்தின் சின்னமாக பயன்படுத்தப்படுகின்றது.

## பயிற்சி

1. 1. சக்கரவர்த்தி என்னும் சொல்லின் பொருள் யாது?
   2. கலிங்க யுத்தத்தின் பெறுபேறுகள் எவை?
   3. பௌத்த சமயத்தைத் தழுவுவதற்கு அசோக அரசனுக்கு வாய்ப்பாக அமைந்தது எது?
   4. அசோக அரசன் பௌத்த மதத்தின் வளர்ச்சிக்காக செய்த தொண்டுகள் யாவை?
   5. அசோக அரசன் செய்த சமுதாய நலன்கள் எவை?
   6. பௌத்த மதத்தை உலகத்தில் பரப்புவதற்காக தர்மாசோக மன்னனால் எடுக்கப்பட்ட முயற்சிகளை விபரிக்க.
   7. மஹிந்தர், சங்கமித்தை என்பவர்கள் யாவர்?
   8. இலங்கையர்களாகிய எமக்கு இவ்விருவரும் செய்த தொண்டினை வெவ்வேறாக விளக்குக.
   9. தர்மாசோக சக்கரவர்த்தியினால் தாபிக்கப்பட்ட சிலாசாசனங் களதும், கல்வெட்டுக்களதும், கற்றூண்களதும் பெயர்களைக் குறிப்பிடுக. .
   10. இலங்கையில் பௌத்த மதத்தை நிலைநாட்டுவதில் அர்ஹத் மஹிந்த மஹா தேரரும் அர்ஹத் சங்கமித்தை தேரியும் பின்பற்றிய போதனை முறைகள் யாவை?

2. 1. அசோக சக்கரவர்த்தியினால் தாபிக்கப்பட்ட சிலாசாசனங்களை இந்தியாவின் படத்தில் குறிப்பிடுக.
   2. அசோகனின் பரம்பரையைக் காட்டும் ஓர் அட்டவணையை அமைக்க.

## பாடம் . 15

# பாரதியும் பட்டிக்காட்டானும்.

1. பாட்டுக் கொருபுலவன் பாரதி, அடா! – அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினான், அடா!
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனே, அடா! – அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாய், அடா!

2. சொல்லுக்குச் சொல்லழகும் ஏறுமே, அடா! – கவி
துள்ளும் மறியைப்போலே துள்ளுமே, அடா!
கல்லும் கனிந்துகனி யாகுமே, அடா! – பசுங்
கன்றும் பால் உண்டிடாது கேட்குமே –அடா

3. குயிலும் கிளியும் பாட்டில் கூவுமே, அடா! – மயில்
குதித்துக் குதித்துநடம் ஆடுமே, அடா!
வெயிலும் மழையுமதில் தோன்றுமே, அடா! – மலர்
விரிந்து விரிந்துமணம் வீசுமே, அடா!

4. அலைமேலே அலைவந்து மோதுமே, அடா! – அலை
அழகான முத்தையள்ளிக் கொட்டுமே, அடா!
மலைமேலே மலைவளர்ந் தோங்குமே, அடா! – அதை
வனங்கள் அடர்ந்தடர்ந்து சூழுமே, அடா!

5. விண்ணி லொளிருமீன்கள் மின்னுமே, அடா!
விளங்கும் மதிநிலவு வீசுமே, அடா!– விண்ணில்
கண்ணுக் கினியசோலை காணுமே, அடா! – அதில்
களித்திள மான்கள்விளை யாடுமே, அடா!

6. தேனும் தினையும் பாவில் உண்ணலாம், அடா! – மிகத்
தித்திக்கும் முக்கனியும் உண்ணலாம், அடா!
கானக் குழலிசையும் கேட்கலாம், அடா! – ஊடே
களிவண்டு பாடுவதும் கேட்கலாம், அடா!

7. நாட்டு மொழியுமவன் பாட்டினிசையில் – மிக்க
நல்ல கற்கண்டினிமை சொட்டுமே, அடா!
ஏட்டிலிம் மந்திரந்தான் கண்டவருண்டோ? – ஈதவ்
ஈசன் திருவருளென் றெண்ணுவாய், அடா!

## பயிற்சி

1. பாட்டை பண்ணோடொருவன் பாடினான் என்பதனை விளக்குக.
2. கல்லும் கனிந்துகனியாகும் என்பது என்ன?
3. மூன்றாவது பாடலில் வரும் வருணனையை விளக்குக?
4. அலை மேலே அலைவந்து மோதினால் விளையும் பயன் யாது?
5. மலை மேலே மலை வளர்ந்தோங்குவதனால் ஏற்படும் விளைவு என்ன?
6. "பாட்டுக்கொருபுலவர் பாரதி" இந்தக் கூற்று எவ்வளவுக்குப் பொருந்தும்.
7. துள்ளும் மறியைப்போல துள்ளுவது யாது?
8. விண்மீன்கள், மதிநிலவு, முக்கனி, கற்கண்டினிமை என்னும் சொற்களின் பொருள் தருக.
9. "கண்ணுக்கினிய சோலை காணுமே, அடா – அதில் களித்திள மான்கள் விளையாடுமே அடா" இவற்றிலுள்ள சந்திகளைப் பிரித்துக் காட்டுக.
10. இந்தப் பாடல்களினால் பாரதியார் வருணிக்கப்படுகிறாரா? இயற்கை வனப்பு வரணிக்கப்படுகிறதா?

# பாடம் - 16

## என்னை நிம்மதியாக இருக்க விடுங்கள்

ஐயோ! எங்கு பார்த்தாலும், இரைச்சல், கரைச்சல்; சூழல் எப்போதும் அல்லோல கல்லோலமாய்தான் தெரிகின்றது. நான் ஒரு நாட்டின் தலை நகரத்தில் தான் வசிக்கின்றேன். அங்கு பகற் பொழுதில் எண்ணிக்கையற்ற கோஷங்கள்; புகைவண்டிகள் அங்குமிங்கு ஓடும் போது உண்டாகும் சத்தம்; அவற்றின் விசில் ஒலி, அவற்றிலிருந்து இறங்கிப் போகும் பிரயாணிகளினதும் அவற்றில் ஏற முயலும் பிரயாணிகளினதும் சத்தம். இவை மாத்திரமா? ஓடாமல், அசையாமல் புகையிரத நிலையத்தில் நிற்கும் புகைவண்டிகளின் இயந்திரங்களின் இடைவிடாது இயங்கும் சத்தம். புகை கக்கிக் கொண்டு தண்டவாளங்களில் உருளும் போது உண்டாகும் சத்தம். புகைவண்டி அறையிலும் மின்விசிறிகள் வட்டமாக சுழலும் போது உண்டாகும் இரைச்சல், புகையிரத நிலையத்தில் நிம்மதியாக இருக்க முடியுமா! ஒவ்வொரு கணத்திலும் ஒலிபெருக்கிகள் அலறுகின்றன. வானொலி பெட்டியில் இருந்தும் சினிமா பாட்டுக்கள் ஒலிக்கத் தொடங்குகின்றன. தொலைக்காட்சி இயந்திரத்திலிருந்தும் அநேக இரைச்சல்கள்உண்டாகின்றன.

புகையிரத நிலையத்திலிருந்து வெளியே வந்தால் – வெளியே வந்தால் தானே – வெளிப்புறத்தில் அதிலும் பார்க்க இரைச்சல். பல்வகைக் கார் வண்டிகள் வீதிகளினூடாக நர்ந்து கொண்டிருக்கும் போது உண்டாகும்

சத்தங்கள். ஒரு வண்டி விரைந்து செல்லும் போது இன்னொரு வண்டி வந்து "பிறாஸ்" என்று நின்று விடும். நின்றால் போதுமே. நின்று அடுத்த கணத்தில் திரும்பி எஞ்சினை "ரேஸ்" பண்ணிக் கொண்டு விசிலையும் அடித்துக் கொண்டு புறப்படுகின்றது. அவ்வாறு கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை, பாணந்துறை, போன்ற இடங்களில் தினமும் நிகழ்கின்றன. பின்னாலே ஏறுங்கள் முன்னாலே இறங்குங்கள், சில்லறை காசு கொண்டு வாங்கள் என்ற கோஷத்தோடு வாகனங்கள் விரைகின்றன. மருதானை, பொறளை, மட்டக்குளி, கொட்டாஞ்சேனை போன்ற இடங்களிலும் நூற்றுக்கணக்கான வண்டிகளிலிருந்து ஒரே சத்தம். வாகனங்களில் இருந்து எழும் சத்தம் போதாதது போல சுவீப் ரிக்கட் விற்பவர்களின் ஒலிபெருக்கிகளின் சத்தம் தொடங்கி விடும்.அது ஓரளவுக்கு நின்றவுடன் அவரின் சைக்கிளில் இணைத்துள்ள "கசற் றெக்கோடரின்" கரஸ் கரஸ் தொனியுடனான பாட்டுக்கள். நடந்து செல்லுபவர்களின் பாதையில் சில்லறை வியாபாரிகளின் "விற்பனைச் சத்தம்". சரி அதனையும் சகிக்கலாம். அன்றாட வாழ்வுக்காக ஏதாவது அற்ப சொற்ப உழைப்பைப் பெறும் நோக்குடன் தானே அவர்கள் கத்துகின்றார்கள். ர்றீங், ர்றீங், ர்றீங், ர்றீங், செல்ரெல் ஒலி, ஓ, யர்ஸ், நோ, சொறி, பிளீஸ் காண்ட் ஹிார் ஓ. கே. அடுத்ததாக எழும்பி நிற்கும்.

இவையெல்லாம் நகர புறத்திலான இரைச்சலாகத் தான் இருக்க வேண்டும். கிராமப் புறத்தில் என்றால் நிம்மதி இருக்குமென நாம் நினைக்கலாம். ஆனால் கிராமப்புறங்களிலும் எதிர்பார்த்த நிம்மதி கானல்நீர் போன்றது. ஏன்? தற்போது நகரப்புறங்களில் சுற்றாடல் பாதுகாப்புத் திட்டங்கள் செயற்படுத்தப்படகின்றன. அதன் விளைவாக நகரப்புறங்களில் நிறுவப் பட்டிருந்த தொழிற்சாலைகள் தற்போது கிராமப்புறங்களையே ஆக்கிரமித் துள்ளன. அவற்றுடன் தொலைபேசி செலுலர், ஃபக்ஸ் போன்ற நவீன சாதனங்கள் நூற்றுக்கணக்கில் கிராமப்புறத்தை ஆக்கிரமிக்கத் தொடங்கி யுள்ளன. அவை மட்டுமா? தொலைக்காட்சி, சினிமா, வீடியோ, ஒலிபெருக்கி, முதலிய அனைத்தும் கிராமத்தை அடைந்துள்ளன.

சரி, இனி நிம்மதி காண்பது எங்கே? மனித சஞ்சாரமில்லாத வனம் தான். அடர்ந்த காட்டில் தன்னந்தனியாக நிம்மதியுடன் இருக்கலாம். அதுவும் ஒரு கனவாகிவிட்டது. கள்ளவியாபாரிகளின் அந்தரங்க காரியங்கள் யாவும் இடம் பெறுவது காடடிலேயே. சாதாரணமான காட்டில் அல்ல. அடர்ந்த காட்டில். கள்ளமர வியாபாரிகளின் கைக்கூலிகளால் நடாத்தப்படும் மரம் அரியும் ஆலைகள், கள்ளத்தனமாக காட்டுமிருகங்களை வேட்டையாடுபவர் களின் பதுங்கு குழிகள்; பறவைகளையும், பறவை முட்டைகளையும் இரகசியமாக வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யும் வனவிலங்குப் பாதுகாப்புச் சங்கங்களின் அங்கத்தவர்களது கொட்டில்கள். அவர்களுக்காக ஒற்றுக்கேட்கும் கடமை மேற்கொள்பவர்களின் அந்தரங்க தகவல்களை அறிவிக்கும் செலூலர் ஒலி, கள்ளச்சாரய வடிசாலைகள், இரத்தினக் கற்களைத் தேடி சுரங்கங்களைத் தோண்டுபவர் களுடைய கொட்டில்கள். அவர்களின் நீர் இறைக்கும் இயந்திரங்களின் இரைச்சல் தொலை தொடர்புச் சாதனங்களின் ஒலி. ஐயையோ, இப்படிப் பார்த்தால் நகரப் புறங்களிலும் பார்க்க கேவலமான இடங்களாக அடர்ந்த காட்டுப் புறங்கள் மாறிவிட்டன.

பாலைவனங்கள் என்ன பாலை வனங்கள்? ஒரு காலத்தில் பாலைவனங்கள் பாழடைந்திருந்தன. தற்போது எங்கும் எண்ணெய்க் கிணறுகள் காணப்படுகின்றன. எப்போதும் குண்டுவெடித்துக் கொண்டிருக்கும். படைவீரர்களின் மோதல்கள் இடம்பெறும். எறிபடைகள் , பீரங்கிகள், போர் விமானங்கள், றொக்கட்டுகள், ஒரு கணத்தில் ஆயிரமாயிரம் அங்குமிங்கும் செல்லும் இடமல்லவா பாலைவனம்.

அப்படியென்றால் உலகத்தின் உச்சியாகவுள்ள எவரெஸ்ட் மலை தான் நிம்மதியான இடமாயிருக்க வேண்டும். அந்த எண்ணமும் எவ்வளவு மதியீனம் என்று எவரெஸ்ட் உச்சியை அடைவதற்காக கூட்டம் கூட்டமாக வரும் மலையேறுபவர்களைக் கண்ட பின்னர் தான் தெரியவரும்.

நிலத்திலோ, பரந்த கடலிலோ நிம்மதியாக இருக்கக்கூடிய இடத்தைக் காணவே முடியாது. வானத்திலும் வானவூர்திகள், யுத்த விமானங்கள், எறிபடைகள். ஆகியவற்றின் ஆபத்து இல்லாத இடத்தைக் காணமுடியாது. வானத்திலும் பார்க்க அதி உயர்ந்த இடமாகிய வளிமண்டலத்தை நிம்மதியாக இருக்கக்கூடிய இடமாகக் கருதுவீர்களா? இல்லவேயில்லை. அங்கே பூமியிலும் பார்க்க இரைச்சல் அதிகம். சட்டர்ன், பார்த்பைண்டர், சட்டலைட், ஃபயனியர், வொயெஜர் போன்ற பல்லின நவீன சாதனங்களின் இடைவிடாப் பயணத்தினால் ஏகோபித்த இரைச்சல்.

இனி, ஒரு முடிவுக்கு வரலாம். நிம்மதி அவசியமானது; உடலுக்கு அல்ல உள்ளத்திற்கு. ஆதலின், உடம்பு என்னும் அரணினால் காக்கப்படும் எமது உள்ளத்திலே தான் நிம்மதி குடியிருக்கின்றது. நன்றி, இனி என்றாலும் என்னை நிம்மதியாக இருக்க விடுங்கள்! நான் உளச் சாந்தியை நாடி நிற்கிறேன்.

## பயிற்சி

1. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
    1. பழங்கால உலகத்தில் அமைதி நிலவியதற்கு காரணம் யாது?
    2. இந்தக் கட்டுரையில் விபரிக்கப்படும் பிரதான கதாபாத்திரன் எங்கே வசிக்கின்றவன்?
    3. அவன் நிம்மதியைத் தேடி சென்ற இடங்களை சுருக்கமாக வரிசைப்படுத்துக.
    4. அவன் ஆரம்பத்தில் நிம்மதி எங்கே இருக்கின்றது என்று தேடினான்?
    5. இறுதியில் நிம்மதி இருக்கும் இடமாக அவன் கண்டது எது?
    6. வளிமண்டலத்தில் நிம்மதி இல்லாமல் போவதற்கு காரணம் என்ன?

7. பாலைவனத்தில் நிம்மதியைக் கெடுத்துவிடும் காரணிகள் யாவை?

8. "உள்ளத்தின் நிம்மதி " என்பதனால் கருதப்படுவது யாது?

9. "ஐம்புலங்களை அடக்குவதனால் மாத்திரம் தான் நிலையான நிம்மதியைப் பெற முடியும்" இந்தக் கூற்று சரியா?

10. "துறவி" என்னும் சொல்லின் மறை பொருள் "நிம்மதி". இதனை இந்தக் கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

2. புதிய விஞ்ஞானத்தின் வளர்ச்சி மனித உளப்பாங்கினை முற்றாகவே மாற்றியுள்ளது. ஆராய்க.

3. மோட்சத்தைப் பெற விரும்பினால் இவ்வுலகத் தொடர்புகள் அனைத்தையும் விடவே வேண்டும். சுருக்கமாக விளக்குக.

# பாடம் . 17

## சொற்புணர்ச்சி

1. பின்வரும் வசனங்களில் உள்ள கோடிட்ட இடங்களைப் பொருத்தமான எழுத்துக்களால் நிரப்புக.

உதாரணம்:

சுந்தரன் பாட்டு–புத்தகத்தை எடுத்து – படித்தான்.
சுந்தரன் பாட்டுப் –புத்தகத்தை எடுத்துப் – படித்தான்.

(அ) சங்கரனும் நாதனை– போல கண்களை மூடி– கொண்டான்.
(ஆ) கமலா கண்களை விழித்து–பார்த்தாள்.
(இ) நரி சோர்வுற்று– தள்ளாடி சென்றது.
(ஈ) நரி பழங்களை– பறிப்பதற்காக – பல முறை தொங்கி – தொங்கி– பாய்ந்தது.

2. பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

உதாரணம்: 1. கத்தரி+செடி=கத்தரிச்செடி.
11. தவம்+செய்தான்=தவஞ்செய்தான்.

பறவை+குஞ்சு = ......................

திராட்சை+கொடி = .................

வாழை+பழம் = ......................

பாம்பு+புற்று = ...................

உழவு+தொழில் = .................

கொம்பு+தேன் = ...................

கறி+சட்டி = ......................

முள்ளி+செடி = ......................

அறம்+செய் = ...................................

மரம்+சரிந்தது = ................................

பழம்+தின்றான் = ..............................

பழம்+தந்தான் = .............................

நிறம்+தோன்றியது = .......................

துயரம்+கொண்டான் = ...................

கோபம்+கொண்டான் = .................

படம்+காட்டினான் = .........................

உதாரணம்: ஆடு+குட்டி = ஆட்டுக்குட்டி.

கடல்+கரை = கடற்கரை.

மாடு+வால் = .........................

கிணறு+நீர் = ......................

நாடு+மக்கள் = ......................

காடு+நரி = ......................

காடு+வளம் = ......................

வீடு+கூரை = ......................

சோறு+பானை= ...................

நீறு+காய் = ....................

தோல்+செருப்பு = ....................

பால்+குடம் = ........................

வேல்+படை = .......................

கல்+சட்டி = ........................

கால்+பந்து = ......................

வயல்+கரை = ....................

முயல்+குட்டி = ....................

பல்+பொடி = ......................

## சொற்களைச் சேர்த்து எழுதுதல்:

இப்பாடத்து மொழிப்பயிற்சி 2 இல் உள்ள சொற்களை சேர்த்து எழுதுக.

## மொழிப் பயிற்சி:
## சொற்புணர்ச்சி:

பின்வருஞ் சொற்களைச் சேர்த்து எழுதுக.

அ. கால்+அடி = காலடி ஆ. மணி+அடி = மணியடி

நிலா + ஒளி = நிலாவொளி

| | |
|---|---|
| பால்+அப்பம் = ...................... | மா+இலை = ........................ |
| வால்+ஆடும் = ........................ | பலா+இலை = ........................ |
| ஆல்+இலை = ......................... | ஈ+ஓட்டு = .......................... |
| தோல்+உரிந்தது = .................. | எரு+இட்டான் = ..................... |
| பேன்+ஊர்ந்தது = .................. | மலை+அருவி= ........................ |
| தேன்+எடுத்தான் = ................ | பனை+ஓலை = ....................... |
| தேர்+ஓடும் = ..................... | வாழை+இலை = ..................... |

பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக:

(அ) குருவிக் குஞ்சு = குருவி+குஞ்சு

(ஆ) ஆற்றுநீர் = ஆறு+நீர்

| | | | |
|---|---|---|---|
| நெல்லிச்சாறு | = ............... | நாட்டுமிருகம் | = ............... |
| கொவ்வைப்பழம் | = ............... | பேட்டுக்கோழி | = ............... |
| தண்ணீர்த்தொட்டி | = ............... | கூட்டுப்புறா | = ............... |
| வாழைத்தண்டு | = ............... | பாற்சோறு | = ............... |
| அப்பஞ்சுடு | = ............... | மட்குடம் | = ............... |
| பழந்தந்தான் | = ............... | முயற்குட்டி | = ............... |
| பணங்கொடுத்தான் | = ............... | பொற்காப்பு | = ............... |
| பாணந்தொடுத்தான் | = .............. | முட்பற்றை | = ............... |

## பாடம் . 18

### பரூடியின் கதை



உலகினர் போற்றும் பழைய புகழ்வாய்ந்த எகிப்த்து தேசத்திலே பல்வகை வளமும் சிறபபும் வாய்ந்த கைரோ என்னும் நகரம் உண்டு. அந்நகரின் தெருவீதிகளிலே திரிந்து பிச்சை எடுத்து உண்டு வாழும் வறிய மக்கட் கூட்டத்தினருள் தாய் தந்தை இல்லாதவனான பரூடி என்னும் சிறுவன் இருந்தான். அவன் ஒரு கடையிலே பொருள்களை விற்பனை செய்யும் நல்ல வணிகன் ஒருவனுக்கு வேலை செய்து வாழ்ந்து வந்தான். அவ்வணிகன் அப்பையன் மீது இரக்கம் கொண்டு தனது கடையிலே காவல் செய்யும் ஒரு காவலனாக அவனை நியமித்தான். அந்த வேலையை உவந்து நன்கு செய்து வரும் காலத்திலே அப்பையன் தானாக முயற்சி செய்து எழுத்துக்களை எழுதப் பழகிக் கொண்டான். பரூடியின் திறமையையும் நேர்மையையும் அறிந்த வணிகன் பரூடியைக் கடையிலே கணக்கனாக நியமித்தான்.

பரூடி தனது வேலையை நன்கு செய்து வந்தான்.ஒரு நாள் வணிகன் பரூடியிடம் வந்து "மகனே இனி நீ என்னுடன் இருக்க இயலாது. வேறொரு எசமானை அடைந்துவேலை செய்வாயாக. இன்று எனக்குத் துன்பந்தரும் ஒரு செய்தி கிடைத்தது. கப்பற் கொள்ளைக்காரர் என் கப்பலைக் கொண்டு சென்றனராம். என்பொருள் முழுவதும் தொலைந்து போயிற்று. எனது தொழில் நின்றுவிட்டது. என் மகளை எவ்வாறு காப்பேன். அவளுக்கு யாரைத் திருமணம் செய்விப்பேன். தங்க இடமும் இல்லையே என வருந்திக் கூறினான். பரூடி வணிகனை நோக்கி "ஐயா! வணிகரே! என்னை நீங்கள் தகுந்தவனாக கருதினால் யானே உங்கள் மகளை மணப்பேன். அவளுக்காக கவலையுறாதீர்கள். யான் வேலை செய்து சேர்த்த சிறுதொகை பணம் உள்ளது. அதனை முதலாகக் கொண்டு இருவரும் உள்ளம் பொருந்தி நன்றாக வாணிபம் செய்தால் பணம் "முன்போலப் பெருகும்" என்று அன்புடன் கூறினான். வணிகன் அதற்கு இணங்கினான்.

பரூடியின் சிறு தொகைப் பணத்தைக் கொண்டு ஏற்ற வழியில் வாணிபம் செய்ததால் மாதம் முடிவதற்குள் வாணிபம் வளர்ந்து பணம் பெருகியது. வாணிபம் வளர்ந்ததனால் வணிகன் அவன் மேல் மிக்க அன்பு கொண்டான். தன் மகளை அவனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். ஓராண்டில் பரூடி, ஓமார் என்னும் மகனைப் பெற்றான். அவன் நல்ல அறங்களைச் செய்தான். நாள்கள் சென்றபின் வணிகன் வாணிபத்தை பரூடியிடம் ஒப்படைத்துவிட்டு வீட்டில் மகிழ்ந்து இருந்தான். பரூடி சிந்தித்து ஏற்ற வழியில் வாணிபத்தை நடத்தியதால் அவனிடம் பெரு நிதி சேர்ந்தது. வணிகன் தேடிய பொருளும் பரூடிக்குக்கிடைத்தது. அவன் மெக்கா யாத்திரை செய்தான். அதனால் "கச்சியார்" என்றும் சிறப்புப் பெயரும் பெற்றான்.

அவனது பணம் அளவிறந்துஇருந்தது. எந் நாட்டவரும் அவனுடன் நட்பு கொண்டனர். மொரொக்கோ முதல் அபுகானித்தான் வரை உள்ள அரசர்கள் அவனின் நட்பைப் பெற விரும்பினர். திரிப்போலி அரசன் ஏமிர் என்பவனின்

மகளான பாத்திமாவுக்கும் ஓமாருக்கும் திருமணப்பதிவு சிறப்பாக நடைபெற்றது. எகிப்து நாட்டின் தவத்தினால் அதனூடு தவழ்ந்து செல்லும் பெருநதியாகிய நைல் நதியின் நீர் குறையாதபடி பெரும் கற்களை அமைத்துக் குளங்களை ஆக்கி அதிகம் நீரைச் சேமித்து வைத்து இரு கரைகளிலும் வயல்கள் பல உண்டாக்கிப் பசிய பயிர்கள் விளையும் பெரிய நாடாக எகித்து விளங்கும்படி அவன் செய்தான். அப்பெரிய தொண்டினால் அவன் புகழ் எங்கும் பரவியது.

பரூடி இவ்வாறு பெரும் புகழுடன் விளங்கும் போது கிழிந்த உடையினனும் பிச்சை எடுத்து உண்பவனுமான ஒரு முதியவர் வந்து சில பகல் அங்கு தங்க இடம் தரும்படி கேட்டார். அம் முதியவரது அறிவாற்றலையும் பெருமையையும் உணர்ந்த பரூடி அவருக்குத் தன் மாளிகையிலே தங்க இடம் கொடுத்தான். அவரது செயல்கள் மற்றவர்களால் விளங்கிக் கொள்ள முடியாதவையாக இருந்தன. ஓமாரின் உதவியுடன் உடைந்த ஓட்டுத் துண்டுகளை நிலத்தில் புதைத்தார் அம் முதியவர். சில நாள்களின் பின் அவ்விடம் விட்டுச் சென்றார். பரூடி சில மாதம் நோயினால் துன்புற்று இறந்தான். அவனது செல்வமும் குறைந்தது. ஓமாரும் வறியவனான். ஆடை அணிகளை விற்று வாழ்ந்தான். திரிப்போலி அரசனிடம் உதவி பெறுவதற்காக அங்கு சென்றான். காவற்காரன் ஓமாரை உள்ளே செல்ல அனுமதிக்கவில்லை. அதனால் பசியுடன் ஒரு சோலையில் தங்கியிருந்தான். ஓமார் உள்ளே அனுமதிக்கப்படாமையைப் பாத்திமா அறிந்து எவரும் அறியாதபடி ஒரு முதியவளின் தோற்றத்துடன் சென்று சோலையிலே தங்கிருந்த ஓமாரைக் கண்டு உணவளித்தாள். இருவரும் எகிப்த்தை அடைந்தனர். ஓமார் புதைத்த ஒட்டுத் துண்டுகள் யாவும் பொற் துண்டுகளாக மாறியிருத்தலைக் கண்டான். அவற்றைப் பெற்றதனால் ஓமார் தந்தையிலும் மேலான செல்வன் ஆனான்.

## பயிற்சி

1. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
    1. கைரோ எப்படிப்பட்ட நகரம்?
    2. பருடி செல்வந்தர் குலத்தில் பிறந்த சிறுவன் ஆவான். இக் கூற்றுச் சரியானதா?
    3. பருடிக்குக் கிடைத்த வேலை என்ன?
    4. பருடியின் எசமானுக்கு ஏற்பட்ட கதி யாது?
    5. பருடியின் மனைவி யார்?
    6. பருடி உபசரித்த அதிதி எப்படிப்பட்ட சுபாவம் கொண்டவர்.
    7. ஓமார் என்பவர் யார்?
    8. பாத்திமா என்பவள் யார்?
    9. ஓமாரின் வாழ்வினிலே உண்டான ஏற்றத்தாழ்வுகளை விபரிக்க.
    10. ஓமார் தம்பதிகளின் பிற்கால வாழ்வு எவ்வாறு அமைந்திருந்தது?

2. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.
    1. பல்வகை
    2. அந்நகரின்
    3. மக்கட் கூட்டத்தினர்
    4. வேறொரு
    5. துன்பந்தரும்
    6. கப்பற் கொள்ளைக்காரர்
    7. ஓராண்டில்
    8. பசிய பயிர்கள்
    9. ஒட்டுத்துண்டுகள்
    10. பொற்றுண்டுகள்

3. எதிர்ப் பொருளுள்ள சொற்களைத் தருக.
    1. புகழ்ச்சி
    2. இல்லாது
    3. இரக்கம்
    4. தகுந்தவன்
    5. வளர்ந்து
    6. அறங்கள்
    7. நட்பு
    8. முதியவன்
    9. துன்புற்று
    10. உள்ளே செல்ல

# பாடம் . 19

## வசந்தம்

1. மின்னி மேகம் பரவுது
மெல்ல மெல்லத் துளிக்குது
என்ன சொல்லித் துளிக்குதென்று
இயம்பு கின்றேன் கேளம்மா!

2. மண்ணில் கொஞ்ச நாள்களாய்
மறைந்து றங்கும் செடிகளே!
கண்ம லர்ந்து வாருங்கள்;
காலை யாச்சு தென்குது.

3. பட்டு டுத்து வாருங்கள்
பணிகள் பூண்டு வாருங்கள்
பொட்ட ணிந்து சீக்கிரம்
புறப்ப டுங்கள் என்குது.

4. வாசச் செப்பைத் திறவுங்கள்,
வாரி யெங்கும் வீசுங்கள்,
ஈசன் பாத பூசனைக்கு
எழுந்தி ருங்கள் என்குது.

5. வாட்ட மெல்லாம் நீங்கவே
வசந்த காலம் வந்தது,
மீட்டும் நன்மை காணலாம்
விரைந்தெ ழுங்கள் என்குது.

## பயிற்சி

1. மேகங்கள் சொட்டும் துளிகள்.
    (1) இரண்டாவது பாட்டில்
    (2) மூன்றாவது பாட்டில்
    (3) நாலாவது பாட்டில்
    (5) ஐந்தாவது பாட்டில்

    என்ன சொல்லுகின்றன?
2. மேற்கூறப்பட்ட சம்பவங்கள் நிகழுவதற்குரிய காரணம் யாது?
3. இங்கு கூறப்பட்ட மேகத்தின் விசேடம் என்ன?
4. இந்த வருணனை வசந்தப் பருவத்தின் எந்த நேரத்தை குறிப்பிடுகின்றது? பாட்டின் அந்தப் பகுதியை எழுதிக்காட்டுக.
5. வாசச் செப்பு என்பது என்ன?
6. வசந்தகாலம் எய்தும் போது உண்டாகும் மாற்றங்கள் யாவை?
7. நன்மை மீளுதல் என்பது எதனைக் குறிக்கிறது?
8. இந்தப் புலவரின் சமயம் எதுவென நினைக்கிறீர்?
9. பிரித்து எழுதுக.
    (1) துளிக்குதென்று (2) மறைந்துறங்கும்
    (3) காலையாச்சுதென்குது (4) பட்டுடுத்து
    (5) பொட்டணிந்து
10. இந்த வசந்த வருணனை இப் பாடல்களைப் பாடுபவர்களின் மனதைக் கவருவதில்லை ஏன்?

# பாடம் 20
# மொழிப் பயிற்சி

## இடம்

1. கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்களில் இட்டு நிரப்புக.
   (அ) நான் படிக்கிறேன்................ படிக்கிறோம்.
   (ஆ) நான் உண்டேன்; நாங்கள் ...................
   (இ) ................................. விளையாடுவேன்; நாம் ................

இவ்வசனங்களில் வந்த நான், நாம், நாங்கள் எனும் சொற்கள், சொல்பவரை குறிக்கும் பெயர்ச் சொற்கள்.

சொல்பவர்களைக் குறிக்கும் பெயர்ச்சொல், **தன்மைப்** பெயர்ச்சொல் எனப்படும்.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   (அ) நீ படிக்கிறாய்; ....................... படிக்கிறீர்கள்.
   (ஆ) நீ உண்டாய்; நீங்கள் ......................
   (இ) ............... விளையாடுவாய்; நீர் .....................

இவ் வசனங்களில் நீ, நீர், நீங்கள் என்னும் சொற்கள் முன்னின்று கேட்பவரைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள்.
முன்னின்று கேட்பவரைக் குறிக்கும் பெயர்ச்சொல் முன்னிலைப் பெயர்ச்சொல் எனப்படும்.

3. கோடிட்ட இடங்களை நிரப்புக.
   (அ) அவன் தமிழ் பேசினான்
   (ஆ) அவள் தமிழ் ......................
   (இ) அவர்கள் தமிழ் ......................
   (ஈ) அது ......................
   (உ) அவை ......................

இவ்வசனங்களில் வந்த அவன், அவள், அவர்கள், அது, அவை என்னும் பெயர்ச்சொற்களும் அப்பெயர்கள் முறையே குறிக்கும் மாணவன், மாணவி, மாணவர்கள், நாய், நாய்கள், என்பன போன்ற பெயர்ச் சொற்களும் படர்க்கைப் பெயர்ச் சொற்கள் எனப்படும்.

4. (அ) பின்வரும் வினை முற்றுக்களுக்கு எண், இடம், காலம் என்பவற்றைக் கூறுக.

| வினைமுற்று | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|
| (நான்) வந்தேன் | ஒருமை | தன்மை | இறந்தகாலம் |
| (நாம்) வருகிறோம் | ...................... | ...................... | ...................... |
| (நீ) வருகிறாய் | ...................... | ...................... | ...................... |
| (நீர்) வந்தீர் | ...................... | ...................... | ...................... |
| (நீங்கள்)வருவீர்கள் | ...................... | ...................... | ...................... |

## எழுத்து
## கடிதம் எழுதுதல்

1. ஆசிரியருக்குக் கடிதம் எழுது.தல்
   (ஆ) ஆசிரியருக்குக் கடிதம் எழுதும் முறையை எடுத்துக் கூறி அவ்வாறே கடிதம் ஒன்றையும் எழுதுவிக்க.
   (ஆ) தாயாரின் சுகவீனங் காரணமாகப் பள்ளிக்கூடம் செல்ல முடியாதிருப்பதைத் தெரிவித்து இரண்ட நாள் ஓய்வு தரும்படி கோரி தலைமை ஆசிரியருக்கு கடிதம் எழுதச் செய்தல்.
2. நண்பனுக்குக் கடிதம் எழுதுதல்
   (அ) நண்பனுக்குக் கடிதம் எழுதும் முறையை எடுத்துக்கூறி அவ்வாறே கடிதம் ஒன்றையும் எழுதுவிக்க.
   (ஆ) தன் பிறந்த நாட் கொண்டாட்டத்திற் பங்குபற்றுமாறு நண்பனுக்குக் கடிதம் எழுதச் செய்தல்.

# பாடம் . 21

## தமிழ் எவ்வாறு வளர்ந்தது?



மிகப் பண்டைய காலந் தொட்டு தமிழகம் மூவேந்திரர்களின் நல்லாட்சியின் கீழ் வளம் பெற்றது. சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவரசர்கள் அகில தமிழகத்தையும் முப் பிரிவுகளாகப் பிரித்து அரச நெறி தவறாது ஆண்டமையால் தமிழகத்தில் இலக்கணம், இலக்கியம், கலை, கலாசாரம் போன்றவை மட்டுமன்றி, பண்பு, நல்லொழுக்கம், அமைதி, சுபீட்சம் ஆகியவையும், ஓங்கி வளர்ந்துள்ளன. இந்த மூவேந்தர்களின் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாடு மிக்க பரந்த நாடாக இருந்தமையால் வளம் மிகுந்த நாடாகவும் புகழ்பெற்றிருந்தது. அது தெற்கில் அமைந்திருந்த குமரி முனைக்கு

அப்பாலும் பரவியிருந்ததாக சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது. பாண்டி நாட்டரசர்கள், பண்பு, பண்பாடு ஆகியவற்றில் தலை சிறந்தவர்களாகவும் விளங்கினார்கள். அரசநெறியானது நீதிநெறி யாகவே இருந்தது. அப்பாண்டி நாட்டில் அரசன் முதல் ஆண்டி வரையிலும் அதே நீதி நெறிக்கு உட்பட்டிருந்தனர். அத்துடன், மிருகங்கள் கூட அத்தகைய நீதி நெறிக்கு உட்பட்டிருந்தன.

பாண்டி நாட்டின் தலை நகரமாக மதுரை விளங்கியது. இந்த நகரம் தமிழ் வளர்ந்து வளம் பெற்று விரிவடைந்த மையமாக விளங்கிய படியால் பல தமிழ் நூல்கள் அதனைச் சிறப்பாகப் போற்றிக் குறிப்பிடுகின்றன. பாண்டிய மன்னர்கள் சீருஞ்சிறப்புமாக அந் நாட்டை ஆண்டமையால் ஏனைய பிரதேசங்களில் வாழ்ந்த தமிழ் கவிஞர்களும், புலவர்களும், துறவிகளும், பாண்டிய நாட்டை நாடி வந்து, அரசனை போற்றிப் புகழ்ந்து , மானியங்கள் பெற்று அங்கு வாழ்ந்து கொண்டு தமிழ் மொழிக்கு பல தொண்டுகளைச் செய்தனர். பாண்டிய அரசர்களும் பிறப்பிலேயே கல்வி, ஒழுக்கம், ஆண்மை, கொடை மிக்கவர்களாகவும் அரசநெறியில் அனுபவம் வாய்ந்தவர்களாகவும் விளங்கினர். அதனால் கற்றவர்களை பெரிதும் மதித்தனர். ஆதலால், அவர்கள் சான்றோர்களை தமது நாட்டுக்கு வரவழைத்து உபசரித்து, வசதிகளை அமைத்துத் தருவதன் மூலம் கல்வி, பண்பு போன்றவை விருத்தியடைய வழிவகுத்தனர். பாண்டிய அரச குலத்தில் பல மன்னர்கள் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது அரச பரம்பரைக்குரிய அரச நெறியையே தழுவி நாட்டை ஆண்டனர். முதன் முதலாக இவ்வம்சா வழியினரால் உருவாக்கப்பட்ட புலவர் சங்கமே பிற்காலத்தில் ''சங்கம்'' என்னும் பெயருடன் திகழ்ந்தது.

சங்க காலம் தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாகக் கருதப்பட்டது. அந்தக் காலத்தில் புலவர்கள் இயற்றிய நூல்கள் அனைத்தும் இன்று கிடைக்கப் பெறாமல் இருப்பினும் மிஞ்சின சில நூல்கள் சங்ககால நூல்களின்

சிறப்புக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன. உலகத்திற்கே பொதுவான இயற்கைச் சேதங்களிலிருந்து சங்ககால இலக்கியமும் தப்பியிருக்க முடியவில்லை. அடிக்கடி நிகழ்ந்த பூவதிர்ச்சிகள், கடல்கோள்கள், பகைவர்களின் ஆக்கிரமிப்புகள், வரட்சி, தீ விபத்து ஆகியவற்றினால் மதுரையும் அடிக்கடி சேதமடைந்தது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கடல்கோளினால் மதுரை நகரம் முழுவதும் மறைந்து போன சம்பவத்தை தமிழ் ஏட்டில் இருண்டகாலச் சம்பவமாகக் குறிப்பிடுவதில் தவறில்லை. ஆரம்பத்தில் பரந்த விரிந்த நிலப்பரப்பைக் கொண்ட பாண்டிய இராஜ்ஜியம் இந்தக் கடல்கோளினால் ஓரளவுக்கு சுருங்கிற்று. முதற் சங்கம் அவ்வாறு அழிவுற்ற பின்னர் தோன்றிய இடைச் சங்கமும் இயற்கைச் சீற்றத்தினால் நாசமாக்கப்பட்டது. அதற்குப் பின் தோன்றிய கடைச் சங்கத்தில் இயற்றப்பட்ட நூல்கள் சில மாத்திரமே பிற்காலத்தவர்களின் பாவனைக்கு மிஞ்சியிருந்தன. அக் காலத்தில் சங்கப் புலவர்களினால் இயற்றப்பட்ட சகல நூல்களும் ஏடுகளிலேயே எழுதப்பட்டிருந்தபடியால் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்துவந்த ஆக்கிரமிப்பாளர்கள் அவற்றை எரித்துவிட்டனர். அவற்றிலிருந்து தப்பி, மிஞ்சிய நூல்களாகிய எட்டுத்தொகை, பத்துப்பாடடு, பதிணெண் கீழ் கணக்கு ஆகியவை ஒரு சிலவாக இருப்பினும் அவை சங்ககால இலக்கியவடிவங்களைப் பிரதிபலிக்கின்றன.

இந்த நூல்களில் நாட்டினதும், அரச குலத்தினதும் சரித்திரம் எழுதப்பட்டிருந்தது. அவற்றில் ஒன்றாகிய புறநானூறில் அரசர்கள் பின்பற்ற வேண்டிய நெறியும் அவர்களின் கடமைகளும் நன்கு விளக்கப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு செய்யுள் வருமாறு .

"யாதுமூரே யாவரும் கேளிர்
தீது நன்றும் பிறர்தர வாரா
நோதலும் களித்தலும வற்றோரன்ன
சாதலும் புதுவதன்றே வாழ்தல்."


## பயிற்சி

1.
1. மூவேந்திரர்ககளின் பெயர்களைக் குறிப்பிடுக
2. மூவேந்திரர்களின் நல்லாட்சியின் பயனாக தமிழகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை?
3. தமிழ்மொழி தோன்றி, வளர்ந்து, விரிவடைந்த இடமாகக் கருதப்பட்ட இடம் எது?
4. "சங்கம்" என்னும் பெயர் எவ்வாறு உண்டாயிற்று?
5. தமிழ் இலக்கியத்தின் பொற்காலமாக சங்கக் காலத்தைக் கருதுவதிலுள்ள நியாயத்தை எடுத்துக் கூறுக.
6. சங்க இலக்கிய நூல்கள் பல அழிந்து போக காரணமாக இருந்தவை எவையென இந்தக் கட்டுரையாசிரியர் கூறுகிறார்.
7. "முச்சங்கம்" என்பது யாது?
8. முற்காலத்தில் நூல்களை எழுதுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவிகள் எவை?
9. சங்க நூல் சிலவற்றின் பெயர்களைக் குறிப்பிடுக?
10. "யாதுமூரே யாவரும் கேளிர்" என்னும் பாட்டின் பொருளை விளக்குக.

2. தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சங்க காலத்தில் இந்தியாவின் ஏனைய பிரிவுகளிலும் இலக்கண, இலக்கியங்கள் இருந்தனவா என்பதனை ஆராய்க.

## பாடம் . 22

# தலையாலங் கானத்துப் பாண்டியன் நெடுஞ்செழியன்



புற நானூற்றின் வாயிலாக, பாண்டியர் பழங் குடிப் பண்புடையர் எனவும் அவ்வர்கள் கொடை, வீரம், நீதியாகிய வற்றுட் சிறந்து விளங்கினர் எனவும் அவர்களுட் பலர் புலவராயிருந்து கல்வி கேள்விகளுட் சிறந்து விளங்கின ரெனவும், தமிழ் வளர்த்த பெருமை பெரும்பாலும் பாண்டியரையே சாருமென வும் அறிகிறோம்.

இத்தகைய மன்னர் வரிசையில், தலையாலங்கானத்துப் பாண்டியன் நெடுஞ் செழியன் என்னும் ஒருவனிருந்தான். செந்தமிழ்ப் புலமையும், பேராண்மையும் ஒருங்கே பொருந்திய இவன், இளம் பருவத்திலேயே அரியணை ஏறினான்.

தன்னாட்டின் வளத்தைப் பெருக்கினான். குடிகளை நீதி நெறி தவறாது புரந்தான். நாட்டைப் பலவாறு சிறப்புறச் செய்தான். இவன் காலத்தில் மேலை நாட்டினரான கிரேக்கர் தமிழ் நாட்டுடன் வாணிபம் புரியத் தொடங்கினர். தமிழ் நாட்டுச் சிறப்பு இவ்வாறு பிற நாடுகளுக்குப் பரவியிருந்தது.

இளையோனான நெடுஞ்செழியன் புகழறிந்து சேரப் பெரு மன்னன் இரும்பொறையும், சோழப் பேரரசன் பெருநற்கிள்ளியும் பாண்டியனை இளையோன் என இகழ்ந்து பேசினர். அவன் மேற் கொண்ட அழுக்காற்றால் அவனை அழித்து அவன் நாட்டைக் கைப்பற்ற எண்ணி முனைந்தனர். தம் சார்பான ஐந்து சிற்றரசரைப் பாண்டியனுக்கெதிராகக் கூட்டிச் சென்றனர். எழுவரும் செழியன் நாட்டை முற்றுகையிட்டனர்.

இதையறிந்த பாண்டியன் நெடுஞ்செழியன் கடுஞ் சினங்கொண்டான். அவர்களின் பொறாமைப் போரை எதிர்த்து எழுந்தான். "என்னை இளையன் என்றெண்ணி இகழ்ந்து, என்படை வலிமை அறிந்தும் அஞ்சாது, புன்மை பேசிவரும் பகை மன்னரைப் போரில் பொருது சிதறடிப்பேன். அவர்களை அவர் முரசங்களோடு கைக்கொள்வேன். இவ்வாறு செய்யேனாகில், என் குடைக் கீழ் வாழும் மக்கள் என்னைக் கொடியோன் என வைது தூற்றக் கடவாராக. நானும் வறுமையுற்றுத் துன்புறுவேனாக." என்று வஞ்சினம் கூறினான். ஆணவத்தோடு போர்க்கெழுந்தான். சிங்கேறுபோற் படைமுகம் புகுந்தான். "தலையாலங் கானம்", என்ற களத்திலே தன்னை எதிர்த்த மன்னர் எழுவர் மத்தியில் மன்னிய ஓர்மத்துடன் முனைந்து பொருதான். இளம் மன்னனை எதிர்த்து எழுந்த மலைபோன்ற மல்லர் சாய்ந்து வீழ்ந்தனர். முனைந்து வந்து பொருதினோரும் மலைந்து மடிந்தனர். ஒப்பற்ற தனியனாய்ப் போர்முகம் புகுந்த செழியன் தன்னை எதிர்த்த மன்னர் எழுவரையும் ஒருங்கே வென்ற வெற்றி வீரனானான்.

வெற்றியால் பெருமிதங் கொள்ளாத இவன் பேராண்மையை மக்கள் வியந்தனர். பகைவரும் நாணி அஞ்சினர். அழுக்காறும் அடங்கிற்று. இவ்வாறு

தன் பெயர் நாட்டிய பாண்டியன். "தலையாலங்கானத்துப் பாண்டியன் நெடுஞ்செழியன்" என அழைக்கப்பட்டான். அமைதி பெற்ற அவன் நாடு வேளாண்மை, வாணிபம், கல்வி, கைத்தொழிலாகிய ஆக்கமுயற்சியிற் சிறந்து செழிப்புற்றது. இத்தகைய மன்னன் நாட்டில், செந்தமிழ் செழித்தோங்கியதில் வியப்புண்டோ?

## பயிற்சி

1. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

   1. புறநானூறு மூலம் பாண்டிய குலத்தவரின் குணவியல்புகளை எவ்வாறு காணலாம்.
   2. தலையாலஙகானத்துப் பாண்டிய அரசன் எவ்வாறு விளக்கப் பட்டுள்ளான்.
   3. சேரப் பெருமன்னர் பாண்டிய அரசனை எவ்வாறு இகழ்ந்தனர்.
   4. தலையாலங்கானத்துப் பாண்டிய அரசனோடு போர் புரிய எத்தனை அரசர்கள் வந்தார்கள்?
   5. சேர அரசனின் கூற்றைக் கேட்ட தலையாலங்கானத்துப் பாண்டியன் அடைந்த நிலைமை என்ன?
   6. போரின் இறுதியில் யார் வெற்றி கண்டார்?
   7. இந்தப் பாண்டிய அரசனின் முழுப் பெயர் என்ன?
   8. அவனின் நாடு எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
   9. பின்வரும் சொற்களின் பொருளை விளக்குக.

| | | | |
|---|---|---|---|
| 1. | கொடை | 2. | புலமை |
| 3. | பேராண்மை | 4. | அரியணை |
| 5. | அழுக்காறு | 6. | முற்றுகையிட்டனர் |
| 7. | புன்மை | 8. | வஞ்சினம் கூறல் |
| 9. | மலைந்து மடிந்தனர் | 10. | நாணி |

2. பின்வரும் பந்தியிலுள்ள சந்திகளை பிரித்து எழுதுக.

"புறநானூற்றின் வாயிலாக, பாண்டியர் பழங்குடிப் பண்புடையர் எனவும் அவர்கள் கொடை, வீரம், நீதியாகியவற்றுட் சிறந்து விளங்கினர் எனவும், அவர்களுட் பலர் புலவராயிருந்து கல்வி கேள்விகளுட் சிறந்து விளங்கினரெனவும், தமிழ் வளர்த்த பெருமை பெரும்பாலும் பாண்டியரைச்சாருமெனவும் அறிகிறோம்"

3. பின்வரும் சொற்களுக்கு ஒத்த பொருளுடைய சொற்களைத் தருக.

| | | | |
|---|---|---|---|
| 1. | கொடை | 2. | புலவர் |
| 3. | ஒருங்கே | 4. | அரியணை |
| 5. | சினம் | | |

4. பின்வருஞ் சொற்களுக்கு எதிர் பொருளுள்ள சொற்களைத் தருக.

| | | | |
|---|---|---|---|
| 1. | நீதி | 2. | பலர் |
| 3. | இளமை | 4. | ஏறினான் |
| 5. | புகழ்ச்சி | 6. | சார்பான |
| 7. | சிற்றரசன் | 8. | ஒப்பற்ற |
| 9. | வெற்றி | 10. | பகைமை |

## பாடம் . 23

# ஆறு

1. கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்துவந்தேன்,
எல்லை விரிந்த சமவெளி – எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

2. கட்டும் அணையேறிச் சாடிவந்தேன் – அதன்
கண்ணறை தோறும் நுழைந்துவந்தேன்,
திட்டுத் திடர்களும் சுற்றிவந்தேன் – மடைச்
சீப்புகள் மோதித் திறந்துவந்தேன்.

3. காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன் – அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன்,
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன் – அங்கென்
ஆசை தீரவிளை யாடிவந்தேன்.

4. ஏறாத மேடுகள் ஏறி வந்தேன் – பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன்,
ஊறாத ஊற்றிலும் உட்புகுந்தேன் – மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

5. ஆயிரம் காலால் நடந்துவந்தேன் – நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன்,
நேயமுறப் புன்செய்க் காட்டிலும் – அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன்.

6. பஞ்சை அரைத்து நூல் நூற்றுவந்தேன் – சீனி
பாகமாய்ச் செய்து கொடுத்துவந்தேன்,
நெஞ்சம் உலர்ந்த நெடுநகரில் – குழாய்
நீராக வும்சென்று பாய்ந்து வந்தேன்

7. மாங்கனி தேங்கனி வாரிவந்தேன் – நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன்,
தீங்கரம் பாயிரம் தள்ளிவந்தேன் – மிகத்
தேனும் தினையுமே சேர்த்துவந்தேன்.

8. அல்லும் பகலும் அலைந்துவந்தேன் – எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்,
நில்லும் எனக்கினி நேரமில்லை – இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும் அம்மா!

## பயிற்சி

1. ஆறு எங்கே இறங்கி வந்தது? எங்கே தவழ்ந்து வந்தது.
2. ஆறு நுழைந்து வந்த இடங்கள் எவை?
3. ஆறு ஆற்றி வந்தது எதனை?
4. ஆறு கண்ட பயிர் எப்படிப்பட்டது?
5. ஆறு ஆசைத்தீர விளையாடிய இடம் எது?
6. ஆறு எதன் மீது ஏறி வந்தது? எதனை நிரப்பி வந்தது?
7. ஆறு எப்படி நடந்துவந்தது,
8. ஆறு நெடுக வருதற்கு காரணம் யாது?
9. பொருள் தருக,

   (1) சாடி வந்தேன். (2) கண்குளிருதல்

   (3) பொழில் செய்து (4) ஆயிரம் கால் (5) புன்செய்
10. இந்த வருணனையைப் பற்றி உமது கருத்துக்களை விளக்குக.

## பாடம் . 24

## சிலப்பதிகாரம்



தமிழிலக்கியத்தில் பெருமை வாய்ந்த ஐந்து நூல்கள் உள்ளன. அவை ஐம்பெருங்காப்பியங்கள் என்னும் பெயர் பெற்றுள்ளன. அக் காப்பியங்களுள் தலை சிறந்த காப்பியமானது சிலப்பதிகாரம். இளங் கோவடிகள் இதனை இயற்றினார்கள். பாண்டிய அரசனின் குணவியல்பு களையும் அவன் நீதி நெறி தவறாது ஆண்டமையையும், அவன் பெண் ஒருத்தியின்பால் தீராத விசுவாசத் தையும் அன்பையும் காட்டியிருந்தமை யையும் பாண்டிமாதேவியின் சிலம்பு காணாமற் போனமையில் உண்டான மனவேதனையையும் பொருட்படுத்தி கற்புநெறி தவறாத கண்ணகியின் கணவனாகிய கோவலனை கொலை செய்தமையும், அதன் விளைவாக சகல பாண்டி நாடும் எரிந்து போனதையும் விளக்கும் சிறந்த நூல் சிலப்பதிகாரம் ஆகும்.

அதன் ஒரு பகுதி பின்வருமாறு

"அந்நிலையில் கவுந்தியும் மாடலனும் கோவலனைத் தேற்றி, "இவ்விடம் துறவிகட்கல்லது மனையறம் பூண்ட மக்கள் இருத்தற்குரிய தன்று," இப்பகற் பொழுது கழிவதன் முன் நகரம் புகுந்து வணிகர் மனையொன்றைக் கண்டு, தங்குவதற்கு வழிசெய்க" என உரைத்தனர். அந்நிலையில், புறஞ்சிறையிலுள்ள இயக்கி கோயிற்குச் சென்று பால்மடை கொடுத்து வழிபட்டு வரும் மாதரி என்னும் ஆயர் முதுமகள் ஒருத்தி அவண் போந்து, கவுந்தியடிகளைக் கண்டு வணங்கினாள். அவளைக் கண்டதும், கவுந்தி அவள் பால் கண்ணகியைக் கையடைப்படுக்கக் கருதி, "ஆகாத்து ஓம்பி ஆப்பயன் அளிக்கும் கோவலர் வாழ்க்கையில் கொடுமையில்லை. மாதரியும் தீதிலள். முதுமகள் அவள்பால் கண்ணகியை இருத்துவது நன்று." எனத் தனக்குள் எண்ணி, துணிந்து அவளை நோக்கி, மாதரி, கேள், இவளுடைய கணவனான இக் கோவலன் தந்தைப் பெயரைக் கேட்கின் இவ்வூரிப் பெருவணிகர் இவர்களை விருந்தேற்றுக் கடிமனைப் படுத்துவர். அதுவரை இவளை நினக்கு அடைக்கலம் தந்தேன். இவளை நீராட்டி, கண்கட்கு மைதீட்டி, கூந்தலிற் பூச்சூட்டி, தூய ஆடையுடுப்பித்து, ஆயமும் காவலுமாவதுடன் தாயும் நீயேயாகித் தங்குதல் வேண்டும். இவளோ தன்சீறடி மண்மகளறியாத செல்வக் குடியில் பிறந்து வாழ்க்கைப் பட்டவள். இன் துணை மகளிர்க்கு இன்றியமையாத, கற்புக் கடம்பூண்ட பொற்புடைத் தெய்வம். தவத்தோர் தரும் அடைக்கலம் சிறிதாயினும், அதனால் விளைவது மிகப் பேரின்பம். இனி நீடித்திராது இவர்களைக் கொண்டு செல்க." என்றாள். மாதரியும் மிக்க மகிழ்ச்சியுடன் இருவரையும் தான் வாழும் இடைச்சேரிக்கு அழைத்துச் சென்றாள்.

அங்கே கவுந்தியடிகள் பணித்தவாறே கண்ணகியை நீராட்டிச் சீராட்டி, தன் மகள் ஐயை என்பவளைக் காட்டி, அவளை அடித்தொழிலாட்டியாகக் கொள்க என உரைத்து, பொழுது மறையுமுன், உணவு கொள்ளும் ஒழுக்கமுடையரென நினைந்து, அடிசில் ஆக்குதற்கென ஓர் இடம் வகுத்து,

உணவு சமைத்தற்கு வேண்டும் கலங்களையும் காய்கறிகளையும் தந்து சிறப்பித்தாள். கண்ணகியும் நன்முறையில் சமைத்துக் கோவலனை உண்பித்தாள்.

உணவு கொண்ட கோவலனுக்குக் கண்ணகி மிக்க அன்புடன் வெற்றிலைப் பாக்குத் தந்தாள். கண்ணகியின் முகமலர்ச்சியும் அன்புக் கிளர்ச்சியும் கோவலனுக்குப் பேரின்பத்தை விளைவித்தன. அதே சமயத்தில் கண்ணகியைக் காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து, கால் கடுக்க நடத்தியே கொண்டு வந்ததன் செயலையும், அவன் நினைத்தான். அவன் மனம் பெரிதும் வருந்தியது. தன்னை நொந்து கொண்டான். கண்கலங்கக் கண்ணகியைத் தன் அருகே இருத்திக் கூந்தலைக் கையால் நீவி மனமாறவுரைத்து மறுகினான். கண்ணகியும் மனத்திண்மை கரைந்து அவனையின்றித் தனித்திருந்த தன் வாழ்வை நினைத்து சுருங்கிய சொற்களால் "இல்லிருந்து அறவோர்க்களித்தல் முதலிய நல்லறங்களை செய்யும் வாய்ப்பிழந்து, மனைக்கண் தனித்திருந்த என்னை நின் தந்தையார் உள்ளத்தே மிக்க அன்போடு நோக்கியும் அருள் நிறைந்த மொழிகளை வழங்கியும் பாராட்டினார் என மனநோயும் துன்பமும் அவர்கட்குப் புலனாகாவாறு மறைத்துப் பொய் முறுவல் செய்தேன். அது கண்டு அவர் பெரும் துன்பம் உழந்து பேதுற்றார். அங்ஙனம் அவர்களெல்லாம் வருந்த நீங்கள் போற்றா ஒழுக்கமே பூண்டிருந்தீர்கள். எவ்வகையிலும் உங்கள் பால் வைத்த என் உள்ளத்தை ஒரு சிறிதும் மாற்றாத வாழ்க்கையில் இருந்தேன். அதனால் எழுக என்றுசொல் வந்தவுடன் அதனை ஏற்று எழுந்தேன்." என்று கூறினாள். அச்சொற்கள் கோவலன் வருத்தத்தை ஓரளவு மாற்றின. அவனுக்குக் கண்ணகி பால் கரைகாணாக் காதலன்பு பொங்கிப் பெருகிற்று. அவன் மனத்தில் நிறைந்திருந்த அவலமும் கவலையும் அறவே நீங்கின. அன்பும் ஆர்வமும், அவன் உணர்வு முற்றும் கவர்ந்தன. அதனால் அவன் கண்ணகியுடன் இனிய உரையாடி, அன்று மண அமளிமேல் இருந்து பாராட்டிய நிலையை எய்தி,

"நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக
என்னோடு போந்து என் துயர்களைந்த
பொன்னே, கொடியே, புனைபூங்கொத்தாய்
நாணின் பாவாய் நீணில விளக்கே
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி"
என்று பாராட்டி மகிழ்ந்தான்.

## பயிற்சி

1. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக
    1. சிலப்பதிகாரம் என்பது என்ன?
    2. அதனை இயற்றியவர் யார்?
    3. சிலப்பதிகாரத்தின் கதாபாத்திரங்கள் யாவர்?
    4. சிலப்பதிகாரத்தினால் போற்றப்படும் பெண்ணின் பண்பு யாது?
    5. "இலங்கையில் கண்ணகி வழிபாடு" என்பது எதைக் குறிக்கிறது?
    6. இந்தப் பந்தியில் எத்தனை கதாபாத்திரங்கள் உள்ளன?
    7. கவுந்தியடிகள் என்பவர் யார்?
    8. கண்ணகியின் குடும்பம் பற்றிய உமது கருத்து என்ன?
    9. கண்ணகியின் குணவியல்பு எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
    10. இந்தப் பந்தியில் காணப்படும் மொழி நடை பற்றி உமது கருத்து என்ன? உதாரணங்களோடு விளக்குக.

2. பொருள் தருக.
    1. மனையறம் பூண்ட மக்கள்
    2. பால் மடை கொடுத்து வழிபட்டு
    3. ஆயர் முதுமகள் ஒருத்தி

4. அவண் போந்து
5. கண்ணகியைக் கையடைப்படுக்க
6. அதுவரை இவளை நினக்கு அடைக்கலப் படுத்துவேன்
7. ஆயமும் காவலமுமாவதுடன்
8. இவளோ தன் சீறடி மண்மகளறியாத செல்வக்குடியில் பிறந்து
9. இனி நீடித்திராது இவர்களைக் கொண்டு செல்க
10. அடிசில் ஆக்குதற்கென ஓர் இடம் வகுத்து

3. இங்குள்ள செய்யுள்களை இலகுவான உரை நடையில் எழுதுக.

# பாடம் - 25
## காலைப் பாட்டு

1. அருணன் உதித்தனன், அம்புஜம் விண்டது,
அளிகளும் மொய்த்தன பாராய்!
அம்மா! நீ எழுந்தோடி வாராய்!

2. பசிய புல் நுனியில் பதித்தவெண் முத்தமோ?
பனித்துளி தானோ? நீ பாராய்!
பைங்கிளி ! எழுந்தோடி வாராய்!

3. பொழுது விடிந்தது, பொற்கோழி கூவிற்று,
பூஞ்செடி பொலிவதைப் பாராய்!
பொன்னே! நீ எழுந்தோடி வாராய்!

4. காகம் கரைந்தது, காலையும் ஆயிற்று,
கனியுதிர் காவினைப் பாராய்!
கண்ணே! நீ எழுந்தோடி வாராய்!

5. காக்காய்! காக்காய்! பறந்து வா,
கண்ணுக்கு மை கொண்டு வா.

6. கோழீ! கோழீ ! கூவி வா,
குழந்தைக்குப் பூக் கொண்டு வா.

7. வெள்ளைப் பசுவே! விரைந்து வா,
பிள்ளைக்குப் பால் கொண்டு வா.

## பயிற்சி

01. காலைப் பொழுதில் புலவர் கண்ட சம்பவங்கள் மூன்றினை முதலாவது பாட்டைக் கொண்டு விளக்குக.
02. அப்பாட்டிலுள்ள அருணன், அம்புஜம், அளிகள் என்னும் சொற்களுக்கு, இலக்கணங் கூறுக.
03. அந்தச் சொற்களின் பொருள்களைத் தருக.
04. வெண் முத்துபோல புலவர் கண்டது எதனை?
05. பொற்கோழி என்பதனை விளக்குக.
06. "கனியுதிர் கா" என்பதன் பொருளை விளக்குக?
07. அம்மா, பைங்கிளி, பொன்னே, கண்ணே என்னும் சொற்கள் உணர்த்தும் பொருள் என்ன?
08. உதித்தனன், விண்டது, மொய்த்தன, பாராய், கூவிற்று, ஆயிற்று என்னும் வினைச் சொற்களுக்கு இலக்கணம் கூறுக.

# பாடம் . 26
# மொழிப்பயிற்சி

## ணகர, னகரச் சொற்கள்:

1. (அ) பின்வரும் வசனங்களை வாசிக்க.
2. (ஆ) அவற்றிலுள்ள னகர, ணகரச் சொற்களை உச்சரிக்க.
3. (இ) அச்சொற்களை அட்டவணைப் படுத்துக.

I. களி மண்ணினாலே பானை செய்யலாம்.

II. யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே.

III. ஆண் மான் கலை எனப்படும்; பெண் மான் பிணை எனப்படும்.

தென்னை மணற்பாங்கான இடத்தில் வளரும்.

நுண்ணிய கருமம் எண்ணித் துணி.

கண் கண்டதைக் கை செய்யும்.


நன்றி மறப்பது நன்றன்று.


பொன்னன் மணி அடித்தான்.


## னகர ணகரச் சொல் அட்டவணை

| ன | ண | ன | ண |
|---|---|---|---|
| பானை | மண்ணினாலே | | |

**2.** பின்வரும் சக்கரங்களில் உள்ள சொற்களை வைத்து வசனங்கள் ஆக்குக.






3. இச்சக்கரங்களை எழுத்துக்களால் நிரப்பிச் சொற்களாக்குக. அச்சொற்களை வைத்து வசனம் அமைக்க.

4. அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்களிற் பொருத்தமானதைக் கோடிட்ட இடத்தில் நிரப்புக.

(அ) எல்லாளன் என்னும் ........................... இலங்கையை ஆண்டான். (மண்ணன், மன்னன்)

(ஆ) மழை பெய்யும் போது ........................... இருண்டிருக்கும். (வாணம், வானம்)

(இ) ........................... போன போக்கெல்லாம் போக வேண்டாம். (மனம், மணம்)

(ஈ) வெயிற் காலத்திலே குளிர் ........................... அருந்துதல் நன்று. (பாணம், பானம்)

(உ) நீ அங்கே உள்ள காட்சிகளைக் ........................... (காண், கான்)

(ஊ) வேடர் ........................... ஏற்றி அம்பு எய்வர். (நான், நாண்)

(எ) நான் ........................... மாதத்திற் பிறந்தேன். (ஆனி, ஆணி)

(ஏ) யாழ்ப்பாணத்திலே ........................... மரங்கள் உள. (பனை, பணை)

(ஐ) பெரியோரைக் ........................... பண்ணு. (கணம், கனம்)

# பாடம் . 27

## "யாம் ஐவேம்"

"யாம் ஐவேம்" என்னும் பகுதியில் வரும் உரையாடல் ஒரு புலவருக்கும் ஒரு சிறுமிக்கும் இடையில் நிகழ்ந்தது. புலவர் ஒரு நாள் காங்கேசன்துறையிலிருந்து கீரிமலைக்கு கடற்கரை வழியே சென்றபோது இந்தச் சிறுமியைச் சந்தித்தார். அவள் மிக அழகுள்ளவள். அவளது முகம் களங்கமற்றது. கூந்தல் இருண்டு சுருண்டு இருந்தது. நெற்றி பிறைபோன்றது. கண் புருவங்கள் கோதண்டம், காண்டீபம் என்னும் விற்கள் போன்றவை. அவளது பார்வையிலே கொல்லுந்தன்மை இருப்பினும் அருட்டன்மை இருந்தது. அவளது வாய் பவளம் போன்றது. பற்கள் முத்துக்கள் போன்றவை.

அவளைப் பார்த்துத் 'தங்கச்சி உன் பெயர் என்ன? ஐந்து சதம் தருகின்றேன். தந்தை தாயார் இருக்கின்றனரா?' எனப் புலவர் கேட்டார். பெரியவரே! என் பெயர் ஐந்து சதந்தான் பெறுமா? நாயும் தின்னாத உமது காசு எனக்குத் தேவையில்லை. எனது பெயர் சுந்தரி. எனது தந்தையும், தாயும் வீட்டில் இருக்கின்றனர். எனது அண்ணர் பெயர் சம்பந்தர். அவர் கொழும்பில் படிக்கிறார். எனது தமக்கை பெயர் சிவகாமி. அவர் இறங்கூனிலே

இருக்கிறார். எனது தங்கை பெயர் கற்பகம். அவள் சென்ற புரட்டாதி மாதத்திலே நடராசப் பெருமானது திருவடிகளை விரும்பி அடைந்திருக்கிறாள். எனக்கு ஒரு தம்பி இருக்கிறான். அவன் பெயர் சிதம்பரநாதன். அவன் சிறு குழந்தை. எங்கள் பெற்றோருக்கு நாங்கள் ஐந்து பேர் பிள்ளைகள். "ஐந்து புலன்களைப்போல ஐந்து பிள்ளைகள் இருக்கின்றனரென எம் பெற்றோர் மகிழ்வர்' என்று அவள் விடை கூறினாள்.

'பெண்ணே யான் ஒன்று உம்மைக் கேட்க விரும்புகிறேன். நீங்கள் ஐந்து பேர் பிள்ளைகள் என்றீர். ஒருவர் நடராசப் பெருமானது திருவடிகளை அடைந்து விட்டார். ஆகவே மிகுதி நான்கு பேர். ஐந்து பேர் என்பது பொருந்தாது. ஐந்தில் ஒன்று போனால் நான்கு தானே. என்று புலவர் கூறினார். 'ஐயா! யான் சொல்வதைப் பொறுமையுடன் கேட்பீராக. நீர் சொல்வது ஆச்சயரிமாக இருக்கிறது. எனது அண்ணர் கொழும்புக்குச் சென்றதனால் மிகுதி மூன்று பேர் என்று சொல்லுவீர் போலும். அக்காள் சிவகாமி இறங்கூனுக்குச் சென்றதால் இரண்டு பேர் தான் இருக்கின்றனர் என்பீரோ. இப்போது தந்தையாருடன் இரண்டு பேர் இருக்கின்றனர். மூன்று பேர் யாழ்ப்பாணத்தை விட்டுச் சென்று விட்டனர்' என அவள் கூறினாள். சுந்தரி யான் கூறுவதைக் கேள். கொழும்புக்குச் சென்ற சகோதரன் திரும்பி வருவான். அதுபோலச் சிவகாமியும் இறங்கூனிலிருந்து வருவாள். இவர்கள் போல உமதுதங்கை கற்பகமும் திரும்பி வருவாளா! இனி அவளை உலகில் நீ காண்பாயா? ஆதலால் இப்போது உங்களில் ஐந்து பேர் இல்லை. நால்வரே இருக்கிறீர்கள் என்று புலவர் கூறினார். அவர் கூறியபோதிலும் அவள் விடவில்லை. கொழும்புக்குச் சென்ற அண்ணர் திரும்பி வந்தாற்றான் இருக்கிறார் என்பதா. கொழும்பிலே தங்கிவிட்டால் இல்லை என்பதா". சிவகாமி இறங்கூனிலிருந்து வந்தாற்றான் இருக்கின்றார் வராவிட்டால் இல்லை என்பீரோ. தங்கை கற்பகம் இனி இங்கு வராளாதலின் அவளை ஒருவராகச் சேர்க்க வேண்டாம் என்கிறீர். அவள் வராவிடில் அங்கே சென்று

அவளைக் காண இயலாதோ, அண்ணர் வராவிடில் கொழும்புக்குச் சென்று அவரைக் காண்பேன். சிவகாமி வராவிடில் இறங்கூனுக்குச் சென்று அவளை காண்பேன். கற்பகம் வராவிடில் நடராசர் எங்கு இருக்கிறார் என அறிந்து அங்கு சென்று அவளைக் காண்பேன். ஆதலின் எங்கள் பெற்றோருக்கு நாங்கள் ஐந்து பேர் இருக்கிறோம். உமது போதனையை ஏற்கேன். நீர் பெரியவர். பிழை பொறுத்தருள்க. ஏன்று அவள் கூறினாள். அச் சிறுமியின் விளக்கத்திலிருந்து அன்று ஓர் உண்மையைப் புலவர் அறிந்தார். சாதலும் இறத்தலும் வேறுபட்ட பொருளுடையன. சாதல் என்பது இல்லாமல் அற்றுவிடல். இறத்தல் என்பது கடத்தல். இல்லாமல் அற்றுவிடுதலன்று என்பதே அந்த உண்மையாகும்.

## பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. இந்த உரையாடல் எவர்களுக்கிடையில் நடைபெற்றது?
2. சிறுமியின் தோற்றம் எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது?
3. புலவர் சிறுமிக்கு ஐந்து சதத்தைக் தருவதாகக் கூறியது ஏன்?
4. இந்தச் சிறுமிக்கு எத்தனை சகோதரர்கள் இருக்கிறார்கள்?
5. எத்தனை சகோதரிகள் இருக்கிறார்கள்?
6. கற்பகம் எங்கே இருக்கிறார்?
7. நடராசார் என்பவர் யார்?
8. இந்த விவாதத்தில் வென்றவர் யார்?
9. இந்தப் பந்தியை வாசித்த பின் இந்தச் சிறுமி எப்படியானச் சிறுமி என நீர் கருதுகிறீர்?
10. சாதல், இறத்தல் என்னும் இரண்டு சொற்களதும் சரியான பொருள்கள் எவையென புலவர் இறுதியில் அறிந்து கொண்டார்?

2. பின்வரும் முற்று வினைகளின் தொழிற்பெயர்களைத் தருக.

1. நிகழ்ந்தது
2. சந்தித்தார்
3. இருந்தது
4. தருகின்றேன்
5. படிக்கிறார்
6. விடை கூறினாள்
7. விரும்புகிறேன்
8. அடைந்தது
9. கேள்
10. காண்பேன்

3. பின்வரும் பெயர்ச் சொற்கள் இலக்கணத்தில் வகிக்கும் இடமென்ன.

1. மிக்க அழகி
2. எனது பெயர் சுந்தரி
3. அவன் சிறு குழந்தை
4. நாங்கள் ஐந்து பேர் பிள்ளைகள்
5. மிகுதி நான்கு பேர்

# பாடம் - 28

## குதிரையின் குணம்



குதிரை உத்தமமான பிராணி. மனித னுடைய நண்பர்களாயுள்ள வாய்விடாச் சாதிகளுட் குதிரை சிறந்தது. குதிரை இல்லாவிட்டால் நமது நாகரிகம் இவ் வளவு முன்னேற்றம் அடைந்திருக்க மாட்டாது. ஆதியில் இந்த நாட்டுக்கு வந்த முன்னோடிகள் இதற்குச் சான்று பகர்வார்கள். அப்பொழுது இந்நாடு வெறும் கட்டாந்தரையாகக் கிடந்தது. வீதிகள் கிடையா. பல இடங்களிற் காடு மண்டிக் கிடந்தது. நிலத்தைப் பண்படுத் தக்கூடிய சாதனங்கள் கிடைப்பது அருமை. எந்திரக் கலப்பைகள், மோட்டார் வண்டிகள் முதலிய எந்திர சாதனங்கள் அருமையாய் இருந்தன. இந்த நிலைமையிலே குதிரை மிகப்ப யனுடைய மிருகமாயிற்று. குதிரையில்லா

விட்டால் அவுஸ்திரேலியா இன்றைய நிலைமைக்கு அபிவிருத்தியடைந்திருக்க மாட்டாது. கோடை வெயில், மழைக்குளிர், வரட்சியுற்ற காலம், காட்டுத்தீ, மழைவெள்ளம் என்ற இன்னோரன்ன வருணிக்க முடியாத இடர்களுக்கிடையே காடாய்க் கிடந்த இந்த அவுஸ்திரேலியாவைக் குதிரையின் உதவியால் மனிதன் பூஞ்சோலையாக்கி விட்டான். விவசாயியான என்னுடைய நண்பர் ஒருவர் தமது பழைய குதிரையொன்றைக் குடிசையிற் பூட்டி வைத்து உணவு கொடுத்து வருகிறார். அதற்கு வேலையும் அவர் கொடுப்பதில்லை. முன்னொரு முறை அந்தக் குதிரை அவருடைய உயிரைக் காப்பாற்றியதாம்.

ஒரு நாள் இரவு எல்லாரும் தூக்கத்தில் அயர்ந்திருக்கும் சமயம், இந்தக் குதிரை வீட்டு முற்றத்தில் வந்து நின்று கொண்டு கனைத்து விவசாயியை எழுப்பிற்று. "பூட்டிவைத்த குதிரை பூட்டையும் உடைத்துக் கொண்டு முற்றத்துக்கு வந்து என்ன செய்கிறது?" என்று விவசாயி நினைத்தார். அவர் வெளியே வந்து பார்த்த போது குதிரை இலாயத்திலுள்ள ஒரு பகுதி தீப்பிடித் தெரிவதைக் கண்டார். உடனே அவருக்கு ஓர் எண்ணந் தோன்றியது. "இந்தக் குதிரை நெருப்புப் பற்றியதைக் கண்டுதான் எனக்கு அறிவிக்க வந்திருக்கிறது." என்று நினைத்தார். வயலிலே நெல்விளைந்து அருவி வெட்டுங்காலம். அந்தத் தீ பரவுமாயிருந்தால் நெற்கதிர் எல்லாம் சாம்பராய்ப் போயிருக்கும். கணப்பொழுதில் விவசாயி தீயை அணைத்துவிட்டார். குதிரைக்கு மிகவும் நன்றியறிதலுடையவராய் இருந்ததோடு அதனிடம் இனிமேல் வேலை வாங்குவதில்லையெனவும் அவர் நிச்சயித்தார்.

## பயிற்சி

1. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக
    1. குதிரை எப்படிப்பட்ட பிராணி?
    2. வாய்விடாச்சாதி என்பதன் பொருள் என்ன?
    3. குதிரைக்கும், நாகரீகத்துக்கும் உள்ள தொடர்பு யாது?

4. இங்கு விளக்கப்பட்டுள்ள இடர்கள் யாவை?
5. இங்கு குறிப்பிடப்படும் குதிரை எங்கிருந்தது?
6. இந்தப் பந்தியில் விளக்கப்படும் சம்பவம் நிகழ்ந்த நேரம் என்ன?
7. தீ பரவினால் உண்டாகக்கூடிய ஆபத்து என்ன?
8. அந்தக் காலப் பருவம் ஏன் முக்கியமாயிருந்தது?
9. குதிரைப்போன்று சமயோசித அறிவுள்ள இன்னொரு பிராணியைக் குறிப்பிடுக.
10. நாகரீகத்தின் வளர்ச்சிக்கு குதிரை மாத்திரமல்ல. இன்னும் சில பிராணிகள் பெருதுணையாயிருந்தன. அவை எவை?

2. குதிரை மூலம் செய்யப்படும் 5 வேலைகளைக் குறிப்பிடுக.

3. கீழ்க்காணும் சொற்களின் எதிர்பாற் சொற்களைத் தருக.

1. களிறு
2. பசு
3. நண்பன்
4. நடிகர்
5. ஆசிரியர்
6. எசமான்
7. சீமான்
8. பகைவன்
9. வீரன்
10. கலை

# பாடம் - 29

## கட்டடக் காவற்பொறுப்பாளர் பதவி

இலங்கை சுங்கத் திணைக்களத்தில் கட்டடக் காவற் பொறுப்பாளர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் 1997.05.20ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் "பணிப்பாளர் அதிபதி, இலங்கை சுங்கத் திணைக்களம், 5 வது மாடி, ரைம்ஸ் கட்டிடம், கொழும்பு 1" என்ற முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். "கட்டடக் காவற் பொறுப்பாளர் பதவி " என்று சொற்கள் விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் எழுதப்படல் வேண்டும்.

### குறிப்பு

(அ) விண்ணப்பம் அல்லது அத்துடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் பிற ஆவணங்கள் சுங்கப் பணிப்பாளர் நாயகத்தைக் தவிர்ந்த பிற எந்த உத்தியோகத்தருக்கும் அனுப்பப்படலாகா.

(ஆ) அஞ்சலில் அனுப்பும் போது விண்ணப்பம் அல்லது சம்பந்தப்பட்ட ஏதேனும் ஆவணம் இழக்கப்பட்டுவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது. என்ற முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டா.

(இ) அரசாங்க திணைக்களங்களில் / சபைகளில் / கூட்டுத்தாபனங்களில் ஏற்கனவேயுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் திணைக் களத்தின் / தாபனத்தின் தலைவர் ஊடாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2. (1) தகுதி: விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும்

(அ) இலங்கைப் பிரசையாகவிருத்தல் வேண்டும்.

(ஆ) சிறந்த குணவியல்பும் சிறந்த உடனலமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

3. சேவை நிபந்தனைகள்

இப் பதவி நிரந்தரமானதும் ஓய்வுதியமுடையதுமாகும். தெரிவு செய்யப்படும் வேட்பாளர்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவு தொகைகள் செலுத்த வேண்டும். இந்த நியமனம் 3 ஆண்டுகளுக்கு தகுதிகூர் நிலையில் இருக்கும். தகுதிகூர் நிலைக் காலத்தின் முடிவில் வேலையும் நடத்தையும் திருப்திகரமாக இருக்கும் பட்சத்திலும் பிற சேவைத் தேவைப்பாடுகள் திருப்திகரமாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் பட்சத்திலும் சேவையில் பணியாள் உறுதிப்படுத்தப்படுவார். தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் வைப்புப் பணத் தொகையொன்றை பிணைப்பணமாக செலுத்துமாறு திணைக்களத்தினால் பணிக்கப்படுமிடத்து அவ்வாறு செய்தல் வேண்டும். பிணைப் பணத்தின் அளவு இத் திணைக்களத்தினால் நிர்ணயிக்கப்படும்.

4. (1) வேதன அளவுத் திட்டம்:–

இப் பதவி 900 ரூபாவைக் கொண்ட 10 வருடாந்த வேதன ஏற்றங் களுடனும், 1,320 ரூபாவைக் கொண்ட வருடாந்த வேதன ஏற்றங் களுடனும் வருடமொன்றுக்கு 43,500 ரூபாவைக் கொண்ட தொடக்கச் சம்பளத்தையும் 63,060 ரூபாவைக் கொண்ட உச்சச் சம்பளத்தையும் கொண்டிருக்கும். (48,900 ரூபா வேதன நிலையில் வினைத்திறன் தடையொன்று உண்டு. அத்துடன் சம்பளம் 1997.01.15ந் திகதியிட்ட 2/97 ம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையின் நியதிகளின் பிரகாரம் கணக்கிடப்படும்.)

5. வயதெல்லை

18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

6. கல்வித் தகைமைகளும், பிற தகைமைகளும்

க.பொ.த (சாதாரண தரப் ) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்களம் /தமிழ், கணிதம்/எண் கணிதம் ஆகிய பாடங்கள் அடங்கலாக ஆறு (6) பாடங்களில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

தொழில் அறிவும் திறமைகளும்

அரசாங்க நிறுவனமொன்றில் கட்டடக் காவற்பொறுப்பாளராக 5 ஆண்டுகளுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(கட்டடங்களைப் பேணுதல், மின்பொருட்கள், காற்றுச் சீராக்கித் தொகுதிகள் ஆகியவற்றைப் பேணுதல், குளிரேற்றிகளை உபயோகித்தல், அவற்றைப் பேணுதல், வேலையாளர்களை மேற்பார்வை செய்தல் பற்றிய அறிவையும் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.)

7. பொது நிபந்தனைகள்

1. தாபன விதிக் கோவையின் 11ம் அத்தியாயத்தின் 10 முதல் 12 வரையுள்ள பிரிவுகள் ஏற்புடையனவாகும்.
2. நியமிக்கபபடுபவர் இரவிலும், பகலிலும் சேவையாற்றுவதற்கு பணிக்கப்படுவார். அவர் இந் நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பணிக்கப்படுவார்.
3. இந்த வர்த்தமானியின் பகுதி 1 தொகுதி (11அ) இல் வெளியிடப்பட்டுள்ள அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தான பொது நிபந்தனைகளுக்கு தங்களுடைய கவனம் கோரப்படுகிறது.
4. தெரிவு செய்யப்படும் வேட்பாளர் பதவியை நியமனத் திகதியி லிருந்து ஒரு மாதக் காலத்திற்குள் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக் கொள்ளாவிட்டால் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

8. சேவைக்கு ஆள்கள் சேர்க்கப்படும் முறை

வேட்பாளர்கள் தெரிவுச் சபையொன்றினால் நடத்தப்படும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும். தேர்வுச் சபையினால் செய்யப்படும் சிபாரிசுகளின் மீது ஆட்சேர்ப்புகள் செய்யப்படும்.

எஸ். எம்.ஜே. சேனாரத்ன
சுங்கப் பணிப்பாளர் அதிபதி

இலங்கை சுங்கத் திணைக்களம்
5ம் மாடி,
ரைம்ஸ் கட்டடம்
கொழும்பு 1
1997.04.04

**பயிற்சி**

1. இந்த விண்ணப்பத்திற்கேற்ப பிரசுரிக்கப்படவேண்டிய ஒரு மாதிரி விண்ணப்பத்தை எழுதுக.

2. அரசகரும மொழித் திணைக்களத்தில் உயர்தர "தமிழ்ப் பாடநெறி"க்கு ஆசிரியர்களை நியமிக்க வேண்டியுள்ளது. அதற்காக வர்த்தமானிப் பத்திரிகையில் பிரசுரிக்கக்கூடிய ஒரு மாதிரி விண்ணப்பத்தை எழுதுக.

# பாடம் - 30

## மகாபாரதம்

திருதராட்டினன், பாண்டு ஆகியோர் சகோதரர்கள். இவர்களில் திருதராட்டினன் பிறவிக் குருடன். அதனால் இராச்சிய உரிமை அவன் தம்பியாகிய பாண்டுவுக்கே சென்றது. பாண்டுவின் பிள்ளைகள் பாண்டவர்கள் எனவும் திருதராட்டினனின் பிள்ளைகள் கௌரவர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். பாண்டவர்களில் மூத்தவனாகிய யுதிஸ்திரன் "தர்மத்தின் உருவான தனியாளியான்" எனப் போற்றப்பட்டவன். கௌரவர்களில் மூத்தவனான துரியோதனனோ, "புன்படைப்பினில் அயன் படைத்த பூபன்" என வருணிக்கப்பட்டவன். துரியோதனன் தானே அரசனாக வேண்டும் என்ற நீதியற்ற பேராசையால் பாண்டவர்கள் மீது பொறாமை கொண்டு அவர்களை அழித்து இராச்சியத்தைக் கைப்பற்றத் திட்டம் தீட்டினான். இந்தத் திட்டத்துக்கு அவனின் மாமனாரான சகுனி துணைபோனான். சகுனி சூதாட்டத்தில் மிகத் திறமைசாலி. அதனால் சூதாட்டத்தில் பாண்டவர்களை வென்று சண்டையில்லாமல் அவர்களைக் காட்டுக்கு அனுப்பி விடலாம் எனச் துரியோதனனுக்கு சகுனி புத்திமதி கூற அவனும் அதற்கு உடன்பட்டு தர்மபுத்திரன் என்று அழைக்கப்பட்ட யுதிஸ்திரனை சூதாட்டத்துக்கு அழைத்தான். அக்காலத்து அரச தருமத்தின் படி தருமனும் சூதாட உடன்பட்டான்.

துரியோதனனது விருப்பப்படி தருமன் சகுனியோடு சூதாடிய போது நாடு நகர்களையும் பின்பு தங்களையும் துரோபதையையும் பந்தயமாக வைத்துத் தோற்றான். பாண்டவரும் துரோபதையும் துரியோதனனுக்கு உரியர்களாயினர். அதனாலே துரோபதையைச் சபைக்கு அழைத்து வரும்படி துச்சாதனை துரியோதனன் அனுப்பினான். அவன் துரியோதனன் இட்ட கட்டளையைக் கூறி அவளை அழைத்தான். தருமன் முதலிற் பாண்டவர்களைத் தோற்றபின்பு தன்னைப் பந்தயமாக வைப்பதற்கு அவனுக்கு உரிமையில்லை எனக்கூறி அரச சபைக்கு செல்ல அவள் மறுத்து விட்டாள். அவளது கருத்தைச் சபையிலே தெரிவிக்கும்படி அவனது தாயான காந்தாரியிடம் கூறினாள். துச்சாதனன் தனது தாயின் வார்த்தைகளைக் கேளாமல் அவளை வலிந்து இழுத்துச் சென்றான். அங்கிருந்த பெரியோர்களும் அரசர்களும் யாதும் பேசாமல் இருந்தனர். துச்சாதனன் பொல்லா வசைமொழிகைள கூறினான். அவற்றால் மிக வருந்திய திரௌபதை பிதா மகனாகிய வீட்டுமரையும் மாமனாகிய திருதராட்டினனையும் விளித்து எல்லா நெறியும் உணர்ந்தவர்களாகிய உங்களுக்கு இச்செயல் சரியானதாகத் தோன்றுகிறதா எனக் கேட்டாள். அவளது நிலைகண்டு இரங்கிய வீட்டுமர் நீயுரைத்த எல்லாவற்றையும் அரசர்களுக்கு இயம்பு எனக்கூறினான். அதற்கிணங்க, சூதிலே முறைப்படி தோற்கப்பட்ட பொருளே வென்றவருக்கு உரித்தாகும். தருமன் தன்னைத் தோற்றபின் என்னைப்பந்தயமாக வைத்துத் தோற்றிருக்கிறான். தன்னை முதலிலே தோற்ற ஒருவர் பின்பு என்னைப் பந்தயமாக வைக்க அவருக்கு உரிமையில்லை. இதனைச் சபை ஆராய்ந்து நீதி வழங்க வேண்டும் என அவள் முறையிட்டாள்.

அவளது வினாவுக்கு அச்சைபயிலிருந்த அரசர்களில் எவரும் பதில் கூறாது சிலைபோல இருந்தபோது துரியோதனனின் இளைய தம்பியான விகர்ணன் எழுந்து இச்சபையிலே இருப்பவர்கள் அரசர்கள். நீதி வேண்டி முறையிட்டவள் ஓர் அரசனின் மனைவி. அவள் மிக்க துயரமுற்ற நிலையில்

நீதியை வேண்டி நிற்கிறாள். அண்ணன் கோபிப்பான் எனப் பயந்து இருக்கிறீர்கள். உண்மையை எடுத்துக்கூறுதல் குற்ற மன்று. நற்குடியிற் பிறந்தவர் தாம் கண்ட நீதியை எந்த இடத்திலும் கூறுதல் வேண்டும். நீதியை நீங்கள் கூறாவிடில் நரகிற்கு நீங்கள் செல்ல வேண்டியிருக்கும். தருமன் தனக்குள்ள பொருள்கள் யாவையும் முதலிற் தோற்ற பின்பு தன்னையும் தோற்றான். தன்னைத் தோற்றுப் பிறருக்கு அடிமையாகிய பின்பு துரோபதையைப் பணயமாக வைக்கத் தருமனுக்கு உரிமையில்லை. இவ்வாறு கூறிய அவனை அரசர்கள் அறிஞன் என பாராட்டினர்.

அப்போது கர்ணன் எழுந்து விகர்ணனை நோக்கி இங்குள்ள அரசர்களிலும் நீ அதிக அறிவுள்ளவனோ? அரச நீதி உனக்கு முதிர்ந்து விட்டதோ? நீ இன்றேல் நீதி உரைப்பவர் இல்லாமற் போய்விடுவரோ? இந்த இடத்திலே நீதியைச் சொல்லும்படி யாராவது உன்னைக் கேட்டார்களா? ஒன்றைப்பற்றி முடிவு சொல்லுமுன் மற்றவர்களுடன் ஆலோசித்தல்லவா சொல்ல வேண்டும். தருமன் தன் பொருள்களனைத்தையும் தம்பிமாரையும் தன்னையும் தோற்றான். தன் நகரையும் மாளிகையினையும் தோற்றான். வீட்டுக்கு உரியவள் ஆதலினாலேயே இல்லாள் என்னும் பெயர் அவளுக்கு வந்தது. ஆகவே துரோபதை தருமனின் பொருளேயன்றி வேறாகாள். இவ்வாறிருக்க விகர்ணனைத் தக்கோன் எனல் தகாது. அவ்வாறு கூறும் அரசர்கள் தகுதியற்றவர்கள். யான் கூறியவற்றுள் தவறிருப்பின் அரசர்களாகிய நீவிர் கூறுவீராக எனக் கூறினான்.

ஈற்றில் பாண்டவர்கள் பன்னிரண்டுவருடங்கள் காட்டில் வசித்து அதன் பின்னர் ஏதாவது ஒரு நாட்டில் அஞ்ஞாத வாசமும் செய்து திரும்பி வந்து நாட்டைப் பெற்றுக் கொள்ளலாம் என உடன்பாடு காணப்பட்டது. அவ்வாறே பாண்டவர்களும் காட்டில் பன்னிரண்டு வருடங்கள் வாழ்ந்ததோடு விராட நாட்டில் ஒரு வருட அஞ்ஞாதவாசமும் செய்து முடித்தனர். அவர்கள்

திரும்பிய போது துரியோதனன் உடன்பட்டவாறு நாட்டைக் கொடுக்கவில்லை. அதன் விளைவாக குருக்ஷேத்திரத்தில் பாரதப்போர் நிகழ்ந்தது. அப்போரில் துரியோதனன் உட்பட அனைவரும் அழிந்தனர். பாண்டவர்கள் தமது நாட்டைப் பெற்று நீதி வழுவாது ஆண்டனர்.

பின்வரும் வினாக்களக்கு விடை தருக.

01. தருமனின் சூதாட்டத்தினால் உண்டான விளைவுகள் யாவை?
02. துரோபதை அரசசபைக்குப் போவதற்கு ஏன் மறுத்தாள்?
03. துரோபதை தனது முறைப்பாட்டின் போது விளக்கிய நீதி நெறி யாது?
04. அந்தச் சபையில் விகர்ணன் கூறியது என்ன?
05. கர்ணனின் விவாதத்தை சுருக்கமாக எழுதுக.
06. இந்தப் பந்தியில் கணவனும் மனைவியுமாக இருந்தவர்கள் யாவர்?
07. இல்லாள் என்னும் சொல்லின் பொருள் எதுவாக இங்கு விளக்கப் பட்டுள்ளது?
08. தன்னைத் தோற்றல் என்பது என்ன?
09. திரௌபதியினதும், கர்ணனினதும் நீதியறிவிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை ஆராய்க.
10. இந்த நூலுக்கு மகாபாரதம் என்னும் பெயரைச் சூட்டுவதற்கு காரணம் என்ன?

# பாடம் . 31

## மொழிப்பயிற்சி

1. இரு வசனங்களை ஒன்றாக்குதல் :

உதாரணம் (1): பாலன் தவம் செய்தான்.
சீலன் தவம் செய்தான்.

இவை இரண்டு வசனங்கள். இவற்றைக் கருத்து மாறுபடா வண்ணம் ஒன்றாக்கினால்,
பாலனும் சீலனும் தவம் செய்தார்கள் என்று அமையும்.

உதாரணம் (11) : விபுலாநந்தர் தமிழ் கற்றார்.
அவர் ஆங்கிலமும் கற்றார்.

இவ்வசனங்களை ஒரு வசனமாக்கினால், விபுலானந்தர் தமிழும் ஆங்கிலமும் கற்றார் என்று அமையும்.

பின்வரும் இரு வசனங்களை ஒரு வசனம் ஆக்குக.

(அ) வாணி பாட்டுப் பாடினாள்; பாலன் பாட்டுப் பாடினான்.

(ஆ) பசு பால் தரும்; ஆடு பால் தரும்.

(இ) நாதன் நற்குணம் உடையவன்; பாலன் நற்குணம் உடையவன்.

(ஈ) நான் பாடம் படிப்பேன்; நீ பாடம் படிப்பாய்.

(உ) நாதன் நற்குணம் உடையவன்; அவன் நல்லொழுக்கமும் உடையவன்.

(ஊ) பாரதியார் தலைப்பாகை அணிந்திருப்பார்; அவர் சட்டையும் அணிந்திருப்பார்.

(எ) தம்பி பாடசாலைக்குப் போவான்; அவன் கடைக்கும் போவான்.

2. ஒரு வசனத்தை இரண்டு வசனங்கள் ஆக்குதல்:

பின்வரும் வசனங்களை இரண்டு வசனங்களாக எழுதுக:

(அ) வாணியும் பரனும் விளையாடினார்கள்.

(ஆ) ஆடும் மாடும் புல் மேய்கின்றன.

(இ) நீயும் நானும் எழுதினோம்.

(ஈ) அரசன் புலவருக்குப் பொன்னும் மணியும் கொடுத்தான்.

(உ) கமலா காலையும் மாலையும் கடவுளை வணங்கினாள்.

(ஊ) எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்.

(அ) மொழிப் பயிற்சி

1. பின்வரும் வசனங்களை ஒரு வசனம் ஆக்குக.

(1) நீ நன்றி மறவாய்; அவன் நன்றி மறவான்.

(2) நான் உதவி செய்வேன்; நீ உதவி செய்வாய்.

(3) தாயார் எமது தெய்வம்; தந்தையாரும் எமது தெய்வம்

2. பின்வரும் தனி வசனத்தை இரு வசனங்கள் ஆக்குக.

(1) நீங்களும் அவர்களும் வந்தீர்கள்.

(2) நாங்களும் நீங்களும் விளையாடுவோம்.

(3) நாதனும் சங்கரனும் கோயிலுக்குப் போனார்கள்.

3. மாறிய சொற்களை சேர்த்து வசனமாக்குதல்:

கீழ் வரும் அட்டவணையில் உள்ள சொற்களை இணைத்து வசனமாக்குக.

உதாரணம்: கடவுள் எல்லாம் வல்லவர்.

| | | |
|---|---|---|
| <u>கடவுள்</u> | உண்மை | <u>வல்லவர்</u> |
| பாரதியார் | அழகாக | சொல்லும் |
| ஐயம் | பாடம் | உண் |
| கிளி | <u>எல்லாம்</u> | பாடினார் |
| அரிச்சந்திரன் | பால் | ஆடும் |
| மயில் | சொன்னதைச் | பேசினான் |
| ஆசிரியர் | பாப்பாப்பாட்டுப் | தரும் |
| பசு | இட்டு | படிப்பித்தார். |

# பாடம் . 32

## இராமாயணம்

இரகு வமிசத்தில் தோன்றிய தசரதச் சக்கரவர்த்திக்கு இராமன், பரதன் இலக்குமணன், சத்ருக்கினன் என்ற நான்கு புதல்வர்கள் இருந்தனர். இவர்களில் மூத்த மகனாகிய இராமன் பால் தசரதன் அளவிறந்த அன்பை வைத்திருந்தான். அதனால், இராமன் பராயம் அடைந்ததும் இராச்சியத்துக்கு உரித்தாளியான அவனுக்கு முடிசூட்ட விரும்பினான். தனது விருப்பத்தை அவன் தனது மூன்று மனைவியர்களுக்கும் அறிவித்தான். இதைக் கேட்டதும் அவனின் மனைவியர்களுள் ஒருத்தியான கைகேயி என்பவள் கூனியின் சூட்சியினால் ஏமாற்றப்பட்டு தனக்குப் பிறந்த மகனாகிய பரதனுக்கே முடிசூட்ட வேண்டுமென வற்புறுத்திக் கேட்டுக் கொண்டாள். தசரதன் தனக்கு அளிக்க



முன்வந்த மூன்று வரங்களின் மூலம் பரதனுக்கே முடிசூட்ட வேண்டுமென்றும் இராமர் வனவாசம் மேற்கொள்ள வேண்டும் என்றும் நிர்ப்பந்தித்தாள். கொடுத்த வாக்குறுதியை மீற இயலாதவனாகிய தசரதன் பரதனுக்கு முடி சூட்டுவதற்கும் இராமனைக் காட்டுக்கு அனுப்புவதற்கும் உடன்பட்டான். இதன் விளைவாக இராமன், இலக்குமணன், சீதை ஆகியோர் வனம் சென்றனர். இராமர் பிரிந்து வனஞ் சென்ற கொடுமையைத் தாங்க முடியாத தசரதன் சில காலத்தின் பின்னர் மரணமடைந்தான்.

தந்தையின் மரண நிகழ்வை அறிந்து வந்த பரதன் தனது தாய் இழைத்த கொடுமையைத் தாங்க முடியாதவனாய் தாயைக் கடுஞ் சொற்கள் பயன்படுத்தி இகழ்ந்து ஏசியதுடன் இராச்சிய பாரத்தை ஏற்க மறுத்து இராமனைத் திருப்பி அழைத்து வரக் காட்டுக்குச் சென்றான். அங்கு இராமனைக் கண்ட பரதன் எவ்வளவோ, மன்றாடிக் கேட்டும் இராமனின் மனதை மாற்ற முடியாமல் மனம் வருந்தினான். இறுதியில் இராமனின் பாதுகைகளைப் பெற்று இராமர் திரும்பும் வரை அவையே அரசாளும் என்று சூளுரைத்து அயோத்தி திரும்பினான்.

வனம் சென்ற இராமன் வனத்தில் நெடுந்தூரம் நடந்து பல முனிவர்களைச் சந்தித்து அவர்களின் ஆசிகளையும் பெற்று இறுதியாக பஞ்சவடியில் பர்ணசாலை ஒன்றை அமைத்து அதில் சீதை இலக்குமணன் ஆகியோருடன் தங்கினான். அதில் அவர்கள் வாழ்ந்து வரும் நாளில் இராவணனின் தங்கையாகிய சூர்ப்பனகை வான் மார்க்கமாக அங்கு வந்து சேர்ந்தாள். இராமனின் அழகைக் கண்ட அந்த அரக்கி இராமனைத் தனதாக்கிக் கொள்ள விரும்பினாள். இந்த விருப்பத்தின் விளைவாக இலக்குமணனால் மூக்கு அறுபட்டு இராவணனிடம் போய்ச் சேர்ந்தாள். இராம, இலக்குமணர் மீது பழிவாங்கும் நோக்கத்துடன் தான் செய்தவற்றை மறைத்து சீதையின் அழகை அளவுக்கு மிஞ்சி விபரித்து அத்தகைய அழகியை

இராவணனுக்காகத் தூக்கிவர முயன்றபோது அவர்கள் மூக்கை அரிந்து விட்டதாகக் கூறினாள். அதனால் கடுஞ் சினங் கொண்ட இராவணன் எப்படியாவது சீதையை அடைந்தே தீர்வதெனத் திடசங்கற்பம் பூண்டான். சூர்ப்பனகையின் சீதை பற்றிய வர்ணனையினால் காமத் தீ மூட்டப் பெற்ற இராவணன் வஞ்சனை மூலம் பஞ்சவடியிலிருந்த சீதையைத் தூக்கிவரச் சென்றான். ஒரு சிவ அடியார் போல வேடம் பூண்டு சென்ற அவன் சீதையைக் கவர்ந்து கொண்டு புஷ்பகவிமானம் மூலம் இலங்கை சென்றான். சீதையைத் தேடியலைந்த இராம, இலக்குமணர்கள் சீதையை இராவணன் இலங்கை கொண்டு சென்ற செய்தியை கழுகுகளுக்கு அரசனான சடாயு மூலம் அறிந்து சொல்லொணாத் துயரமடைந்தனர்.

வன வாழ்க்கையின் போது குரங்குகளின் தலைவனான சுக்கிரீவன், அநுமன் போன்றவர்களது நட்பைப் பெற்ற இராமன் அவர்களின் துணையுடன் சீதையைத் தேட முற்பட்டான். அநுமன் இலங்கை சென்று அசோக வனத்தில் சீதை சிறைவைக்கப்பட்டு அரக்கியர் கூட்டத்தினால் சூழப்பட்டிருப்பதைக் கண்டான். அங்கு அவன் சீதையிடம் சென்று தான் இராமரின் தூதுவனென தன்னை அறிமுகப்படுத்தி இராமர் கொடுத்தனுப்பிய ஆழியையும் காட்டினான். அதனால் அநுமன் இராமரின் தூதுவன்தான் எனத் தெளிவுற்ற சீதை சகல விபரங்களையுங் கூறி அவற்றை இராமரிடம் சொல்லுமாறு கூறி அவனுக்கு விடையளித்தாள்.

அநுமன் வெளியே செல்ல முற்படுகையில் பல அரக்கர்கள் அவனைச் சூழ்த்து கொண்டனர். அதனால் பெரும் போர் மூண்டு பல அரக்கர்கள் அழிக்கப்பட்டதுடன் இலங்கையும் எரியூட்டப்பட்டது. அதன் பின்னர் அநுமன் இராமரிடம் சென்று நிகழ்ந்தவை அனைத்தையும் கூறியதோடு சீதை சொல்லியனுப்பிய செய்தியையும் கூறினான்.

சுக்கிரீவனின் தலைமையிலான வானரப் படை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் உள்ள கடலைக் கல்லிட்டு நிரப்பி பாலம் ஒன்றை

அமைத்தது. அந்தப் பாலத்தின் மூலம் வானரச் சேனையும் இராம, இலக்குமணர்களும் இலங்கை சென்று படை வீடுகள் அமைத்துத் தங்கினர். அங்கிருந்து இராவணனுக்கு தூதனுப்பி சீதையை விடுவித்து இலங்கையைக் காப்பாற்றிக் கொள்ளுமாறு இராமர் இராவணனைக் கேட்டுக் கொண்டார். இராவணன் ஆணவ மேலீட்டாலும், விதி பிடர் பிடித்துத் தள்ளவும் யாருடைய புத்திமதியையும் கேட்காமல் சீதையை விடுவிக்க மறுத்துவிட்டான். அதனால் பெரும் போர் மூண்டது. அப்போரின் இறுதியில் இராவணனும் அவனின் துணைவர்களும் கொல்லப்பட்டதுடன் அரக்கர்களின் பெருஞ் சேனையும் அழிந்தொழிந்தது.

வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த
    திருமேனி மேலும் கீழும்
எள்ளிருக்கு மிடமின்றி யுயிரிருக்கு
    மிடநாடி யிழைத்த வாறோ
கள்ளிருக்கும் மலர்க்கூந்தற் சானகியை
    மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி யுடல்புகுந்து
    தடவியதோ வொருவன் வாளி.

அதன் பின்னர் இராமர் சீதையைச் சிறை மீட்டு அயோத்தி சென்று இராச்சிய பாரத்தைத் தனது தம்பியாகிய பரதனிடமிருந்து பொறுப்பேற்று அந்நாட்டை நீதி வழுவாமல் ஆண்டு வந்தார்.

## பயிற்சி

1. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்கள் ஒவ்வொன்றினதும் எழுவாய், பயனிலைகளைக் குறிப்பிட்டு அவற்றுக்கு விளக்கம் தருக.

   (அ) வானரங்களுக்குத் தலைவன் சுக்கிரீவன்

   (ஆ) சடாயு என்பவன் யாவன்?

   (இ) சீதை பஞ்சவடியில் பர்ணசாலையில் தங்கி இருந்தான்.

2. பின்வரும் சொற்களுக்குப் பொருள் தருக.

   (1) பிடர்பிடித்துத் தள்ளுதல்

   (2) ஆழி

   (3) பராயமடைதல்

   (4) பாதுகைகள்

   (5) சூளுரைத்தல்

   (6) பர்ணசாலை

   (7) வானரங்கள்

   (8) ஆணவம்

   (9) படைவீடு

   (10) நீதிவழுவாமை

3. (அ) பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

   (1) பொற்கழல்

   (2) பொலங்கழல்

   (3) பொற்றாலி

   (4) நற்செய்தி

   (5) கூனி

(ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்து எழுதுக.

(1) முள் – தைக்கும்

(2) வெம்மை – நீர்

(3) சொல் – தொடர்

(4) கடு – நவை

(5) பின் – சேர்க்கை

4. மகாபாரதத்தில் பாண்டவர்கள் வனஞ் சென்றதற்கான காரணங்களையும் இராமாயணத்தில் இராமர் வனஞ் சென்றதற்கான காரணங்களையும் ஒப்பிட்டு விளக்குக.

5. இராமாயணத்தையும் மகாபாரதத்தையும் ஆதாரமாகக் கொண்டு அந்தக் கால அரசர்களின் குணவியல்புகளை ஆராய்க.

6. சடாயு என்பவன் யார்? அவன் எவ்வாறு இராமனுக்கு உதவினான்?

7. சுக்கிரீவன், அநுமன் ஆகியோரின் துணை இல்லாதிருந்தால் இராமரால் சீதையை சிறை மீட்டிருக்க முடியுமா? விளக்குக.


8. சூர்ப்பனகை எப்படிப்பட்டவள். அரக்கர் குல அழிவுக்கு அவளே காரணம் என்பது சரியா? விளக்கம் தருக.

9. சீதை எங்கே சிறை வைக்கப்பட்டிருந்தாள். அநுமன் அவளைக் கண்ட போது அவளைச் சூழ்ந்திருந்தவர்கள் யாவர்?

10. மேலே தரப்பட்டிருக்கும் "வெள்ளெருக்கஞ்...." என்ற செய்யுளின் பொருளை எளிய உரை நடையில் எழுதி அதிலிருக்கும் நயங்களையும் எடுத்துக் காட்டி விளக்குக.

# பாடம் . 33

## (ஆ) மொழிப் பயிற்சி:




### ரகர, றகரச் சொற்கள்

1. இச்சக்கரங்களில் இருக்கும் <u>சொற்களை</u> எழுதுக. அவற்றுள் இலகுவானவற்றை வசனங்களில் அமைக்க.

2. பின்வரும் <u>சொற்களை ஓசைப்படி</u> பிரித்து அட்டவணைப் படுத்துக.

மார்பு, அற்புதம், மிருகம், சிறகு, பெருநாள், கறுப்பு, சர்க்கரை, கற்கண்டு, சரை, சிறை, வறுத்தாள், வருந்தினான், துரை, துறை, இருந்தான், இறந்தான், பறந்தது, இரைந்தன.

| ர | ற | ர | ற |
|---|---|---|---|
| மார்பு | அற்புதம் | ...................... | ...................... |
| ...................... | ................ | ...................... | ...................... |
| ...................... | ................ | ...................... | ...................... |
| ...................... | ................ | ...................... | ...................... |
| ...................... | ................ | ...................... | ...................... |

3. அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்களுட் பொருத்தமானதைக் கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அ) ........................... செய விரும்பு. (அரம், அறம்)

(ஆ) மாட்டின் முதுகில் வெள்ளை -------- இருக்கிறது. (மரை, மறை)

(இ) காகம் தன் குஞ்சுக்கு ........................... ஊட்டியது. (இரை, இறை)

(ஈ) நாதனின் தாய் தந்தையர் நோய்வாய்ப்பட்டு ............................ (இரந்தனர், இறந்தனர்)

(உ) பாலன் மரத்தைத்............................ (தரித்தான், தறித்தான்)

(ஊ) ............................ காலத்திலே மழை மிகுதியாகப் பெய்யும். (மாறி,மாரி)

(எ) கடற்............................யில் அலைகள் மோதும். (கறை, கரை)

(ஏ) நான் வண்டியில்............................ச் சென்றேன். (ஏரி, ஏறி)

(ஐ) கமலா ............................ உடுத்தாள். (கூறை, கூரை)

(ஒ) நான் எனது புத்தகத்துக்கு ............................ போட்டேன். (உரை, உறை)

(ஔ) நீ வாழைக் காயை எண்ணெயிற் ............................ (பொறி, பொரி)

# பாடம் 34

## வேற்றுமை

வேற்றுமையாவது பெயர்ச் சொற்களின் பொருளை வேறுபடுத்துவதாம் பெயர்களின் பொருளை வேறுபடுத்துவதற்குப் பயன்படுத்தப்படும் இடைச்சொற்கள் வேற்றுமை உருபுகள் என அழைக்கப்படுகின்றன. வேற்றுமை எட்டாகப் பகுக்கப் பட்டுள்ளது. அவை முதலாம் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றாம் வேற்றுமை, நான்காம் வேற்றுமை, ஐந்தாம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை, எட்டாம் வேற்றுமை என்பனவாம்.

1. முதலாம் வேற்றுமை முதற் பொருளில் மாத்திரம் வரும். வினைமுதல், கருத்தா, செய்பவன், எழுவாய் என்பவை ஒரு பொருட் சொற்கள். இவ்வேற்றுமைக்கு வினைச் சொற்களும், பெயர்ச் சொற்களும், வினாச் சொற்களும் பயனிலையாக வரும்.

உ+ம்: 1. முகிலன் முனகினான் – வினை பயனிலையால் வந்தது.

2. இராமன் ஒரு பையன் – பெயர் பயனிலையாய் வந்தது.

3. அவன் யாவன் – வினா பயனிலையாய் வந்தது.

2. இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருளில் வரும். இதனைச் செயப்படுபொருள் வேற்றுமை என்றுங் கூறுவர். செயப்படுபொருளாவது, கருத்தாவின் தொழிலினால் விளையும் பயனை அடையும் பொருளாகும்.

உ+ம்: கந்தன் வயலை உழுதான் – "வயல்" செயப்படுபொருள்

மாடு வண்டியை இழுத்தது – "வண்டி" செயப்படுபொருள்

வயலை, வண்டியை என்னும் சொற்கள் கருத்தாவின் தொழிலால் விளையும் பயனை அடைந்துள்ளன.

3. மூன்றாம் வேற்றுமை: இதன் பொருள் கருவி, கருத்தாப் பொருளும் உடனிகழ்ச்சிப் பொருளுமாகும். இதற்கு ஆல், ஆன், ஒடு, ஓடு என்ற நான்கு உருபுகளும் உடன், கொண்டு என்ற இரண்டுசொல்லுருபுகளும் உண்டு.

உ+ம்: கத்தியால் வெட்டினான்
வாளான் மகவரிந்து ஊட்ட வல்லேன் அல்லேன்
கருவிப் பொருள்

வெட்டுதலுக்கு கத்தியும் அரிதலுக்கு வாளும் கருவிகள் ஆகின.

உ+ம்: அரசனால் வீடு கட்டப்பட்டது – கருதாப்பொருள்
அமைச்சரால் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது
இவற்றில் வீடு, கட்டடம் ஆகியவற்றை ஆக்கியவர்கள் முறையே அரசனும் அமைச்சரும் ஆவர். அதனால் அவர்கள் கருத்தாக்கள் ஆகினர்.

உ+ம்: தந்தையோடு மைந்தன் வந்தான்
யானையோடு பாகன் வந்தான்
தந்தையோடு மைந்தனும் யானையோடு பாகனும் உடன் சென்றதைக் கவனிக்க

உ+ம்: தந்தை உடன் மைந்தன் வந்தான் – உடனிகழ்ச்சிப் பொருள்

வாள் கொண்டு வெட்டினான் – கருவிப் பொருள்

"உடன் " என்ற சொல்லுருபு ஒடு, ஓடு என்ற உருபுகளுக்கு மாற்றாக நின்று உடனிகழ்ச்சிப் பொருளை உணர்த்தியுள்ளது.

"கொண்டு" என்ற சொல்லுருபு ஆல், ஆன் என்ற உருபுகளுக்கு மாற்றாக நின்று கருவிப் பொருளை உணர்த்தியுள்ளது.

4. நான்காம் வேற்றுமை: இதன் பொருள் கொடை, பகை, தேர்ச்சி, தகுதி, அதுவாதல், பொருட்டு, முறை, என்பவற்றால் இதற்கு இது என்பது பட வருவதாம். இதன் உருபு "கு" ஆகும்.

உ+ம் : அகதிகளுக்குப் பொருள் கொடுத்தனர் – கொடைப் பொருள்

பாம்புக்குப் பகை கீரி – பகைப் பொருள்

கந்தனுக்கு மகன் பூதன் – நேர்ச்சிப் பொருள்

இராமனுக்கு உரியது இராச்சியம் – தகுதிப் பொருள்

காப்புக்குப் பொன் – அதுவாதற் பொருள்
பகைமைக்கு வித்திட்டான் – பொருட்டுப் பொருள்
குந்தியின் மகன் கர்ணன் – முறைப் பொருள்

5. ஐந்தாம் வேற்றுமை : இதன் பொருள் நீக்கற் பொருளும் ஒப்புப் பொருளும் எல்லை பொருளும் ஏதுப் பொருளுமாம். இதன் உருபுகள் "இல்" உம் "இன்" உம் ஆம்.

உ+ம்: மலையின் வீழருவி – நீங்கற் பொருள்
பாலின் வெளிது கொக்கு – ஒப்புப் பொருள்
கொழும்பின் தெற்கு தெஹிவளை – எல்லைப் பொருள்
கல்வியிற் பெரியர் கம்பர் – ஒப்புப் பொருள்

6. ஆறாம் வேற்றுமை : இதன் பொருள் கிழமைப் பொருள். இதன் உருபுகள் "அது", "ஆது", "அ" என்பவை. இதற்கு "உடைய" என்ற சொல்லுருபும் உண்டு. கிழமைப் பொருள் தற்கிழமைப் பொருள் பிறிதின் கிழமைப் பொருள் என இருவகைப்படும். தற்கிழமையாவது, தன்னின் வேறாகப் பிரிக்க முடியாத தன்மையுடையது. பிறிதின் கிழமையாவது, தன்னின் வேறாகப் பிரிக்கக்கூடிய தன்மையுடையது.

உ+ம் : மானினது கண் – தற்கிழமை
பூவினது மணம் – தற்கிழமை
கண்ணனது புத்தகம் – பிறிதின் கிழமை
பாண்டியனது நாடு – பிறிதின் கிழமை
தன் கைகள் – தற்கிழமை
தனாது கை – தற்கிழமை
அவனுடைய புத்தகம் – பிறிதின் கிழமை.

7. ஏழாம் வேற்றுமை – இதன் பொருள் இடப்பொருளாகும். இதற்கு கண், கால், கடை, இடை, வாய், திசை, வயின், முன், சார், வலம், இடம், மேல், கீழ், புடை, முதல், பின், பாடு, அனை, தேம், உழை, வழி, உழி, உளி, உள், அகம், புறம், இல் என்பன உருபுகளாய் வரும்.

உ+ம் : அவன் வீட்டில் இருந்தான்
மரத்தின் கண் காக்கை இருந்தது

ஏழாம் வேற்றுமை உருபுகள் இட வேறுபாடுகளை உணர்த்தும் சொற்களாகவும் வரும்:

உ+ம் : வலப் பக்கம்
இடப் பக்கம்
மேல் நிலம்
உட் புறம்

8. எட்டாம் வேற்றுமை : இதன் பொருள் படர்க்கையோரை தன்முகமாக அழைத்தலாகும். இவ் வேற்றுமையை விழி வேற்றுமை என்றும் அழைப்பர். இவ் வேற்றுமையை ஏற்கும் பெயர் ஈறு திரிந்தும், ஈறு குன்றியும் ஈறு மிகுந்தும், ஈற்றயல் திரிந்தும், ஈறு இயல்பாக நின்றும் விகாரப்படுதலே இதன் உருபுகளாக அமைகின்றன.

உ+ம் : தங்காய், வாராய். – ஈறு திரிந்தது
நண்ப, கூறாய். – ஈறு கெட்டது
இராமனே, வா. – ஈறு மிகுந்தது
தம்பி, பகராய் – ஈறு இயல்பாயிற்று
மாக்காள், சொல்வீர் – ஈற்றயல் திரிந்தது.

## வேற்றுமை உருபேற்கும் போது வேறுபடும் பெயர்கள்

நான், யான் என்ற தன்மை ஒருமைப் பெயர்களும் நாம், யாம் என்ற தன்மைப் பன்மைப் பெயர்களும் நீ என்ற முன்னிலை ஒருமைப் பெயரும் நீர், நீயிர், நீவிர், என்ற முன்னிலைப் பன்மைப் பெயர்களும் தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர் வேற்றுமை உருபேற்கும் போது வேறுபடும் தன்மை உடையன.

நான் + ஐ = என்னை

யான் + ஐ = என்னை

நாம் + ஐ = நம்மை

யாம் + ஐ = எம்மை

தான் + ஐ = தன்னை

தாம் + ஐ = தம்மை

நீ + ஐ = நின்னை

நீர் + ஐ = நும்மை

1. வேற்றுமையாவது யாது? அஃது எத்தனை வகைப்படும்.?
2. எட்டு வேற்றுமைகளுக்கும் உரிய உருபுகளைக் கூறுக.
3. முதல் வேற்றுமைக்குப் பயனிலையாய் வருவன யாவை?
4. இரண்டாம் வேற்றுமை எவ்வெப் பொருள்களில் வரும்?
5. தற்கிழமை, பிறிதின் கிழமை என்பவை என்ன?
6. பின்வரும் உதாரணங்கள் என்ன வேற்றுமையில் என்ன பொருளில் வந்தன என்பதைக் குறிக்க.

அரசன் கோயிலைக் கட்டினான், பொன்னாற் செய்த வளையல், தாயோடு மகள் வந்தாள், இராமனுக்கு மகன் வேலன், தவத்தில் உயர்ந்தவர் அகத்தியர், ஆட்டத்தின் கண் அபிநயம்.

## பாடம் - 35

# செய்வினையும் செயப்பாட்டு வினையும்

எடுத்துக் கொண்ட ஒரு கருத்தை வெளிப்படுத்துவதற்கு அமையும் சொற்றொகுதி வாக்கியம் எனப்படும். ஒரு வாக்கியம் பெரும்பாலும் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்ற மூன்று உறுப்புக்களைக் கொண்டிருக்கும். இதில் எழுவாய் என்பது திரிபில் பெயராகும் – அதாவது, எழுவாய் எப்போதும் வேற்றுமை உருபை ஏற்காத சொல்லாய் வாக்கியத்தின் முதலிடத்தில் அமையும். பயனிலை என்பது வாக்கியத்தின் பொருளை முடிவுறுத்தும் சொல்லாகி எப்போதும் வாக்கியத்தின் இறுதியில் அமையும். செயப்படு பொருள் என்பது கருத்தாவின் – அதாவது எழுவாயின், செயற்பாட்டின் விளைவு சென்றடையும் ஒரு பொருளாக இருக்கும். இது பெரும்பாலும் வாக்கியத்தின் எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் அமையும். "கந்தன் வயலை உழுதான்" என்ற வாக்கியத்தில் எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் என்ற மூன்று உறுப்புக்களும் அமைந்திருப்பதை நோக்குக. இவ்வாக்கியத்தில் கந்தன் எழுவாய், உழுதான் பயனிலை (வினைமுற்று), வயல் செயப்படு பொருள். ஒரு வாக்கியத்தில் மூன்று உறுப்புக்களும் இருக்க வேண்டுமெனினும் எழுவாய் என்ற உறுப்பு இல்லாமலும்

வாக்கியம் அமையும். "வயலை உழுதான்" என்ற வாக்கியத்தில் எழுவாய் இல்லை. இதுவும் முழுமையான வாக்கியமே. இந்த வாக்கியத்தில் உள்ள "உழுதான்" என்ற வினைமுற்றின் இறுதியில் காணப்படும் "ஆன்" என்ற விகுதியைக் கொண்டு எழுவாய் ஒன்று இருப்பதை உய்த்துணர முடியும்– அதாவது கந்தன் என்ற எழுவாய் இருப்பதை உய்த்துணர முடியும். இவ்வாறு இருக்கும் எழுவாய் "தோன்றா எழுவாய்" எனப்படும். இனி வாக்கியத்தின் அடுத்தத உறுப்பான "செய்யப்படு பொருள்" இற்கு வருவோம். செயப்படு பொருளானது வாக்கியத்தில் வரலாம் வராமல் விடலாம். செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள், என்ற ஆறையும் எப்போதும் தெரிநிலை வினைமுற்று தரும். இந்தத் தெரிநிலை வினைமுற்று எப்போதும் செயப்படு பொருளைக் காட்டுவதில்லை. அதாவது, வாக்கியத்தில் செயப்படுபொருள் இல்லாமலும் வாக்கியம் அமையும். அத்தகைய வாக்கியத்தில் உள்ள வினைமுற்று செயப்படு பொருள் குன்றிய வினை (Intransitive Verb) என்று கூறப்படும். இங்ஙனம் இல்லாமல் செயப்படு பொருளைக் காட்டிநிற்கும் வினைமுற்று செயப்படு பொருள் குன்றா வினை (Transitive Verb) எனப்படும். உதாரணமாக "வருகின்றான்" என்ற வினைமுற்று செயப்படு பொருளைக் காட்டவில்லை. அதனால் இது செயப்படு பொருள் குன்றிய வினையாகிறது. இனி "படிக்கிறான்" என்ற வினமுற்றை எடுத்து நோக்குவோம்.

இதில் அவன் "பாடத்தை" படிக்கிறான் என்ற வினை செயப்படு பொருள் குன்றா வினை ஆகிற்று.

இது காலும் ஒரு வாக்கியம் எழுவாயும் செயப்படு பொருளும் இல்லாமலும் அமையும் என்பதைக் கண்டோம். இனி, வாக்கியத்தின் முக்கிய உறுப்பான பயனிலைக்கு வருவோம். பயனிலை இல்லாமல் எந்த வொரு வாக்கியமும் அமைய முடியாது. "வந்தான்" என்ற சொல் முழுமையான வாக்கியமே. அது "அவன் வந்தான்" ஆகிறது. எனவே வந்தான் என்பது முழுநிறைவான வாக்கியம்.

இது வரையிற் பெற்ற அறிவைக் கொண்டு "செய்வினையும் செயற்பாட்டு வினையும்" என்ற தலைப்புக்கு வருவோம். மேலே குறிப்பிட்ட "கந்தன் வயலை உழுதான்" என்ற வாக்கியத்தை எடுத்துக்கொள்வோம். இதில் கந்தன் என்ற எழுவாய் "உழும்" கருமத்தைப் புரிகிறது. உழும் செயற்பாடு கந்தன் செய்யும் வினையாகிறது. எனவே "உழுதான்" என்பது "செய்வினையே" அதனால் "கந்தன் வயலை உழுதான்" என்ற வாக்கியம் செய்வினை வாக்கியம் ஆகிறது. மேலும் இந்த வாக்கியத்தின் பொருளை வேறு விதமாகவும் கூற முடியும். அதாவது "வயல் கந்தனால் உழப்பட்டது" என்ற வாக்கிய அமைப்பின் மூலம் அதே கருத்தைக் கூறமுடிகிறது. இரண்டு

வாக்கியங்களும் வெவ்வேறு அமைவுகளில் இருக்கின்ற போதிலும் அவை தரும் பொருள் ஒன்றே என்பதைக் கவனத்திற் கொள்க.

இரண்டு வாக்கிய அமைப்புகள் ஒரே பொருளை உணர்த்தி நிற்பதைக் கண்டோம். இனி இந்த இரண்டு வாக்கியங்களின் அமைவினைப் பார்ப்போம். கந்தன் வயலை உழுதான் என்பது செய்வினை வாக்கியம் என்பதைக் கண்டோம். "வயல் கந்தனால் உழப்பட்டது" என்ற அமைப்பு செயப்பாட்டு வாக்கிய அமைப்பாகும். கந்தன் வயலை உழுதான் என்ற வாக்கியத்தில் எழுவாயாகிய கந்தன் திரிபில் பெயராகி, அதாவது வேற்றுமை உருபினை ஏற்காமல், நிற்கும் அதேவேளையில் வயல் என்ற செயப்படு பொருள் இரண்டாம் வேற்றுமை உருபாகிய "ஐ" இனை ஏற்று நிற்பதைக் காண்க. எனவே செயப்படு பொருள் எப்போதும் உருபை ஏற்று நிற்கும் என்பதும் புலனாகிறது.

ஒரே பொருளைத் தரும் இவ்விரண்டு வாக்கியங்களையும் மாற்றி அமைப்பதற்கு ஒரு ஒழுங்கு முறை உண்டு. கந்தன் வயலை உழுதான் என்ற செய்வினை வாக்கியத்தை "வயல் கந்தனால் உழப்பட்டது" என்ற செயற்பாட்டு வாக்கியமாக அமைக்கும் போது "வயலை" என்ற செயப்படு பொருள் அதன் "ஐ" என்ற இரண்டாம் வேற்றுமை உருபினை இழந்து உருபு

எதனையும் ஏற்காத எழுவாய் ஆகும் அதேவேளையில் திரிபில் பெயராக இருந்த கந்தன் என்ற எழுவாய் மூன்றாம் வேற்றுமை உருபான "ஆல்" இனை ஏற்று வந்துள்ளது. மேலும் "உழுதான்" என்ற வினைமுற்று (பயனிலை) 'படு' என்ற துணைவினையை (Auxiliary Verb) ஏற்று "உழப்பட்டது" ஆகிற்று. இதில் இறந்த காலத்தைக் காட்டும் "த்" என்ற இடைநிலைக்கும் பதிலாக "ட்" என்ற இடைநிலை இடம்பெற்றிருப்பதையும் நோக்கு. எனவே இந்த ஒழுங்கினைப் பயன்படுத்தி எந்தவொரு செய்வினை வாக்கியத்தையும் செயப்பாட்டு வாக்கியமாக மாற்றி அமைக்க முடியும்.

செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்கள் இறந்த காலத்தில் மட்டுமில்லாமல் முக்காலத்திலும் வரும். கீழ் வரும் உதாரணங்களைக் கவனிக்க.

### இறந்த காலம்

(1) கந்தன் வயலை உழுதான் (இறந்த காலத்தில் உள்ள செய்வினை வாக்கியம்)

(2) வயல் கந்தனால் உழப்படுகிறது (நிகழ் காலத்தில் உள்ள செயப்பாட்டு வாக்கியம்)

## நிகழ் காலம்

(1) கந்தன் வயலை உழுகிறான் (நிகழ்காலத்தில் உள்ள செய்வினை வாக்கியம்)

(2) வயல் கந்தனால் உழப்படுகிறது (நிகழ் காலத்தில் உள்ள செயப்பாட்டு வினை வாக்கியம்)

## எதிர் காலம்

(1) கந்தன் வயலை உழுவான் (எதிர் காலத்தில் உள்ள செய்வினை வாக்கியம்)

(2) வயல் கந்தனால் உழப்படும் (எதிர்காலத்தில் உள்ள செயப்பாட்டு வினை வாக்கியம்)

செய்வினை, செயப்பாட்டு வினைகளுக்குப் பொதுவாக வரும் வினைகளும் உண்டு.

உ+ம் (அ) "புலிகொன்ற யானை" என்னும் சொற்றொடர் புலியைக் கொன்ற யானை எனப் பொருள் படுங்கால் "கொன்ற" என்பது செய்வினையாம்; புலியால் கொல்லப்பட்ட யானை எனப் பொருள் படும்போது அது செயப்பாட்டு வினையாம்.

(ஆ) "நாய் விழுங்கிய மீன்" என்னும் சொற்றொடர் நாயை விழுங்கிய மீன் எனப் பொருள் படுங்கால் "விழுங்கிய" என்பது செய்வினையாம்; அது நாயால் விழுங்கப்பட்ட மீன் எனப் பொருள்படுங்கால் செயப்பாட்டு வினையாம்.

## பயிற்சி

1. வாக்கியம் என்றால் என்ன?
2. வாக்கியத்தின் உறுப்புக்கள் யாவை? அவற்றை விளக்குக.
3. தோன்றா எழுவாய் என்பது யாது? வாக்கியங்கள் அமைத்து அதனை விளக்குக.
4. செயப்படு பொருள் குன்றிய வினை என்பது யாது? உதாரணம் தந்து விளக்குக.
5. செயப்படு பொருள் குன்றா வினை என்பது யாது? உதாரணம் தந்து விளக்குக.
6. வாக்கியத்தில் கட்டாயமாக இருக்க வேண்டிய உறுப்பு யாது? அதனை வாக்கியம் அமைத்து விளக்குக.
7. மேலே உரைப்பகுதியில் தரப்பட்டுள்ள இறந்தகால, நிகழ்கால, எதிர்கால செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்களில் காலம் காட்டும் இடைநிலைகளைக் குறிப்பிடுக. அவற்றைப் பயன்படுத்தி வேறு செய்வினை, செயப்பாட்டு வினை வாக்கியங்கள் அமைக்க.

8. பின்வரும் செய்வினை வாக்கியங்களைச் செயப்பாட்டு வினை வாக்கியங்களாக மாற்றுக.

(1) கந்தன் மாட்டை அடித்தான்.
(2) வேடன் புற்றில் இருந்த பாம்பைக் கொன்றான்.
(3) சுழியோடிய மீனவன் பெரிய மீனைப் பிடித்தான்.
(4) சுழிக்காற்று உயர்ந்த பனையை வீழ்த்தியது
(5) தினை விளைத்தவன் தினையை அறுப்பான்.

9. பின்வரும் செயப்பாட்டு வினை வாக்கியங்களை செய்வினை வாக்கியங்களாக மாற்றி அமைக்க.

(1) கடலால் இலங்கை சூழப்பட்டுள்ளது.
(2) தொழிலாளியால் மரம் வெட்டப்பட்டது.
(3) இராமரால் இராவணன் கொல்லப்பட்டான்.
(4) பெரு வெள்ளத்தால் பயிர்கள், மரங்கள் அழிக்கப்பட்டன.
(5) பனையால் விழுந்தவன் மாடு மிதித்துக் கொல்லப்பட்டான்.

9. இடைநிலைகள் யாவை? வாக்கியங்கள் அமைத்து அவற்றின் தொழிற்பாட்டை விளக்குக.

10. எழுவாய் என்ற சொல்லுக்கு மாற்றாக வரக்கூடிய சொற்களைக் குறிப்பிடுக.

11. செய்வினை, செயப்பாட்டு வினைகளுக்குப் பொதுவாக வரும் வகையில் வினைச் சொற்களை வாக்கியங்கள் அமைத்துக் காட்டுக.

# பாடம் - 36

## மொழிப் பயிற்சி:

இடம்:

1. கோடிட்ட இடங்களைப் பொருத்தமான சொற்கள் இட்டு நிரப்புக.

(அ) நான் படிக்கிறேன் ; ............................படிக்கிறோம்.
(ஆ) நான் உண்டேன்; நாங்கள் ............................
(இ) ............................ விளையாடுவேன்;

நாம் ............................

இவ்வசனங்களில் வந்த நான், நாம், நாங்கள் எனும் சொற்கள், சொல்பவரைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள்.

சொல்பவர்களைக் குறிக்கும் பெயர்ச்சொல், தன்மைப் பெயர்ச்சொல் எனப்படும்.

2. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அ) நீ படிக்கிறாய்; ........................ படிக்கிறீர்கள்.

(ஆ) நீ உண்டாய்; நீங்கள் ........................

(இ) ........................ விளையாடுவாய்; நீர் ........................

இவ் வசனங்களில் உள்ள நீ, நீர், நீங்கள், என்னும் சொற்கள் முன்னின்று கேட்பவரைக் குறிக்கும் பெயர்ச் சொற்கள்.

முன்னின்று கேட்பவரைக் குறிக்கும் பெயர்ச்சொல் முன்னிலைப் பெயர்ச் சொல் எனப்படும்.

3. கோடிட்ட இடங்களை நிரப்புக.

(அ) அவன் தமிழ் ........................

(ஆ) அவள் தமிழ் ........................

(இ) அவர்கள் தமிழ் ........................

(ஈ) அது ........................

(உ) அவை ........................

இவ்வசனங்களில் வந்த அவன், அவள், அவர்கள், அது, அவை என்னும் பெயர்ச்சொற்களும் அப்பெயர்கள் முறையே குறிக்கும் மாணவன், மாணவி, மாணவர்கள், நாய், நாய்கள், என்பன போன்ற பெயர்ச் சொற்களும் படர்க்கைப் பெயர்ச் சொற்கள் எனப்ப்டும்.

4. (அ) பின்வரும் வினை முற்றுக்களுக்கு எண், இடம், காலம் என்பனவற்றைக் கூறுக:

| வினைமுற்று | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|
| (நான்) வந்தேன் | ஒருமை | தன்மை | இறந்தகாலம் |
| (நாம்) வருகிறோம் | .................. | .................. | .................. |
| (நீ) வருகிறாய் | .................. | .................. | .................. |
| (நீர்) வந்தீர் | .................. | .................. | .................. |
| (நீங்கள்) வருவீர்கள் | .................. | .................. | .................. |

## எழுத்து:

1. ஆசிரியருக்குக் கடிதம் எழுதுதல்:

(ஆ) ஆசிரியருக்குக் கடிதம் எழுதும் முறையைப் பற்றிய கலந்துரையாடல்.

(ஆ) தாயாரின் சுகவீனங் காரணமாகப் பள்ளிக்கூடம் செல்ல முடியாதிருப்பதைத் தெரிவித்து இரண்டு நாள் 'ஓய்வு' தரும்படி கேட்டுத் தலைமை ஆசிரியருக்கு கடிதம் எழுதச் செய்தல்.

2. நண்பனுக்குக் கடிதம் எழுதுதல்:

(அ) நண்பனுக்குக் கடிதம் எழுதும் முறை பற்றிக் கலந்துரை யாடுதல்.

(ஆ) தன் பிறந்தநாட் கொண்டாட்டத்திற் பங்குபற்றுமாறு நண்பனுக்குக் கடிதம் எழுதச் செய்தல்.

# பாடம் 37

வெற்றி வேற்கை ஒரு நீதிநூல். இதனை குறுந்தொகை என்றுங் கூறுவர். இதில் எண்பத்தைந்து பாடல்கள் உள. இந்நூலை அதிவீரராமபாண்டியன் என்பவர் இயற்றினார்.

## செய்யுள் ஆசிரியர்

1. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்.
2. கல்விக் கழகு கசடற மொழிதல்
3. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்
4. உழவர்க் கழகிங் குழுதூண் விரும்பல்
5. வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை
6. அறிஞர்க் கழகு கற்றுணர்ந் தடங்கல்
7. உண்டிக் கழகு விருந்தோ டுண்டல்.

## கல்வி

8. கற்கை நன்றே கற்கை மநன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே
9. எக்குடிப் பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடிக் கற்றோரை மேல்வரு கென்பர்
10. அறிவுடை ஒரவனை அரசனும் விரும்பும்
11. கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதரா கும்மே.

## சிறியோர் நட்பு

12. நூற்றாண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குட் பாசி போல் வேர்க்கொள் ளாதே.

## பெரியோர் நட்பு

13. ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே.

## பெருமையிற் சிறுமை

14. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே.

## சிறுமையிற் பெருமை

15. தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே யாயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே

## பொருள் ஆசிரியர்.

1. எழுத்துக்களைக் கற்பித்த ஆசிரியர் கடவுள் ஆவர்.

## அழகு

2. ஒருவன் கற்ற கல்விக்கு அழகாவது, தான் கற்றவற்றைப் பிழை இல்லாமற் பிறருக்குச் சொல்லுதலாம்.
3. செல்வம் உடையவர்களுக்கு அழகாவது, நல்ல உறவினர்களைப் பாதுகாத்தலாம்.
4. வேளாளர்க்கு அழகாவது, இந்நிலத்திலே உழுது பயிர்செய்து உண்டமவாழுதலை விரும்புதலாம்.
5. வறுமை உடையவர்களுக்கு அழகாவது, வறுமை அடைந்த காலத்திலும் நல்ல குணமும் நல்ல ஒழுங்கமும் உடையவர்களாய் வாழுதலாம்.
6. அறிவு உடையவர்களுக்கு அழகாவது, கற்க வேண்டிய நல்ல நூல்களைக் கற்று, அவற்றின் பொருளை உணர்ந்து, தீயகுணம் செயல்களை நீக்கி வாழுதலாம்.
7. மணம் நிறைந்த உணவுக்கு அழகாவது, விருந்தினர்க்குக் கொடுத்து உண்ணுதலாம்.

## கல்வி

8. நல்ல நூல்களைக் கற்றல் நல்லது; பிச்சை எடுத்து வாழ நேர்ந்தாலும் கற்றல் நல்லது.

9. எந்தக் குலத்திலே பிறந்தாலும், யாராய் இருந்தாலும், அந்தக் குலத்திலே கல்வி கற்றவரை மேலிடத்துள்ளவர்கள் வருக என்று அழைத்துச் சிறப்புச் செய்வர்.

10. கல்வி அறிவுடைய ஒருவனை இராசாவும் விரும்புவார்.

11. கல்வி அறிவு இல்லாத ஒருவன் தன்னுடைய குலத்தின் சிறப்பைச் சொல்லுதல் நெல்லோடு சேர்ந்திருக்கும் பதரின் தன்மைபோல் ஆகும்.

## சிறியோர் நட்பு

12. நூறு வருடகாலம் பழகினாலும் சிறியோருடைய நட்பானது, நீரில் உள்ள பாசியைப் போல வேர் ஊன்றாது – மநிலையாக நில்லாது.

## பெரியோர் நட்பு

13. ஒரு தினம் பழகினாலும் பெரியவர்களுடைய நட்பானது, பெரிய பூமி மபிளக்கும்படி மரத்தின் வேர் செறிந்த ஒன்றி நிற்பது போல விட்டு நீங்காமல் இருக்கும்.

## பெருமையிற் சிறுமை

14. பனை மரத்தின் இனிமை பொருந்திய திரண்ட பழத்தில் உள்ள ஒரு பெரிய விதையானது ஆகாயத்தைப் பொருந்தும்படி உயர்ந்து செழிப்பாய் வளர்ந்திருந்தாலும், அஃது, ஒருவர் இளைப்பாறுதற்காவது நிழலைத் தராது. (பனையின் தேம்படு பழத்து ஒரு விதை என மாற்றுக.)

## சிறுமையிற் பெருமை

15. ஆலமரத்தின் தெளிவான சிறிய பழத்தில் உள்ள ஒரு சிறிய விதையானது, தெளிந்த நீரையுடைய குளத்தில் வசிக்கும் சிறிய மீனினது முட்டையிலும் சிறியதேயானாலும், அது, பெருமை பொருந்திய யானையும், அலங்கரிக்கப்பட்ட தேரும், குதிரையும், காலாளும் ஆகிய நான்கு பெரிய சேனைகளோடு அரசர்கள் வந்து தங்கியிருப்பதற்கு ஏற்ற நிழலைத் தரும்.

## (ஆ) கிரமித்தற் பயிற்சி ஆசிரியர்

1. எழுத்து அறிவித்தவர் யார்?
2. அவரை யாராக மதித்தல் வேண்டும்?

## அழகு

1. கல்விக்கு அழகு யாது?
2. செல்வர்க்கு அழகு யாது?
3. உழவர்க்கு அழகாவது யாது?
4. கற்று உணர்ந்து அடங்குதல் யாருக்கு அழுகு?
5. உண்டிக்கு அழகு எது?

## கல்வி

1. பிச்சை எடுப்பதாயினும் எது செய்தல் நல்லது?
2. மேலோர் யாரை வருக என்று கூறுவர்?
3. அரசர் யாரை விரும்புவார்?
4. நெல்லினுட் பிறந்த பதர்போன்றவர் யார்?

## சிறியோர் நட்பு

1. யாருடைய நட்பு இருநிலம் பிளக்க வேர் வீழ்க்கும்?

## பெருமையிற் சிறுமை, சிறுமையிற் பெருமை

1. பனையின் விதை, ஆலின் விதை இரண்டிலும் பெரியது எது?
2. பனை, ஆல், இரண்டின் நிழலிலும் எதன் நிழல் பெரியது,
3. எதன் நிழல் ஒருவர்க்கு இருக்கவம் உதவாது?
4. எதன் நிழல் பலருக்கும் இருக்க உதவும்?

# பாடம் . 38

## வாக்குண்டாம் (செய்யுளும் பொருளும்)

இஃது ஒரு நீதிநூல். இந்நூலில் முப்பத்தொரு பாடல்கள் உள. இந்நூலை மூதுரை என்றும் வழங்குவர். இதனை ஔவையார் இயற்றினார்.

<u>செய்யுள் :</u>

### காப்பு

1. வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது—பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கை யான் பாதம்
தப்பாமற் சார்வார் தமக்கு.

1. பவளம் போலும் சிவந்த திருமேனியையும் துதிக்கையையும் உடைய விநாயகப் பெருமானுடைய திருவடிகளை, பூவைக்கையிலே கொண்டு தவறாது அடைந்து பூசை செய்பவருக்கு நல்ல வாக்கு வன்மை உண்டாகும்; நல்ல மனம் உண்டாகும்; பெருமை பொருந்திய தாமரைப் பூவில் இருக்கும் இலக்குமியினுடைய அருட்பார்வை உண்டாகும்; உடம்பு வாட்டம் அடையாது.

விநாயகக் கடவுளுடைய திருவடிகளைப் பூசிப்பவர்களுக்கு நல்ல கல்வி, நல்ல மனம், நல்ல செல்வம், ஆரோக்கியம் என்பன உளவாம்.

## நன்றி

2. நன்றி ஒருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் எனவேண்டா – நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

3. நெல்லுக் கிறைத்தநீர் வாய்க்கால் வழியோடிப்
புல்லுக்கும் அங்கே பொசியுமாம்–தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்(டு)
எல்லார்க்கும் பெய்யும் மழை.

2. நிலத்திலே நிலைபெற்றுச் சோர்வில்லாமல் வளருகின்ற தென்னை மரமானது தன் அடியில் இருக்கும் வேரினாலே உண்ட வெறு நீரைத் தன் முடியினாலே இனிமை பொருந்திய இளநீராக்கித் தானே தருதலினால், நற்குணம் உடைய ஒருவனுக்கு ஓர் உபகாரத்தைச் செய்தால் அந்த உபகாரத்தை அவன் எப்பொழுது செய்வானோ என்று சந்தேகிக்க வேண்டுவதில்லை.

நற்குணம் உடையவனுக்கு உபகாரம் செய்தால், அதனிலும் சிறந்த உபகாரத்தை அவன் வணக்கத்தோடு விரைந்து செய்வான்.

3. நெற்பயிரின் பொருட்டு இறைக்கப்பட்ட நீரானது கால்வாய் வழியால் ஓடி, அங்கே இருக்கும் புல்லுக்கும் கசிந்து ஊறும்; அதுபோல, பழமையான உலகிலே நல்லவர் ஒருவராயினும் இருப்பாரேல், அவர் பொருட்டாக எல்லோருக்கும் மழை பெய்யும்.

4. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கன்மேல் எழுத்துப்போற் காணுமே–அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க் கீந்த உபகாரம்
நீர்மேல் எழுத்திற்கு நேர்.

## நல்லார் தொடர்பும்
## தீயார் தொடர்பும்

8. கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே – விற்பிடித்து
நீர்கிழிய எய்த வடுப்போல மாறுமே
சீர்ஒழுகு சான்றோர் சினம்.

### கல்வி

9. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்–மன்னற்குத்
தன்தேச மல்லாற் சிறப்பில்லைக் கற்றோர்க்குச்
சென்றஇட மெல்லாஞ் சிறப்பு.

10. கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி
தானும் அதுவாகப் பாவித்துத்–தானுந்தன்
பொல்லாச் சிறகைவிரித் தாடினாற் போலுமே
கல்லாதான் கற்ற கவி.

## அடக்கம் உடையவர்

11. அடக்கம் உடையார் அறிவிலரென் றெண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா–மடைத்தலையில்
ஓடுமீ னோட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாங் கொக்கு.

## சிறுமையிற் பெருமை

12. மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல் சிறியர் என்றிருக்க வேண்டா–கடல்பெரிது
மண்ணீரும் ஆகா ததனருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்.

## உயர்ந்தோர் இயல்பு

13. சீரியர் கெட்டாலும் சீரியரே சீரியர்மற்
றல்லாதார் கெட்டாலுங் கென்னாகும்–சீரிய
பொன்னின் குடமுடைந்தாற் பொன்னாகும் என்னாகும்
மண்ணின் குடமுடைந்தக் கால்.

14. அட்டாலும் பால்சுவையிற் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்.

15. சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
ஆந்தனையுங் காப்பர் அறிவுடையோர் – மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

# பாடம் . 39

## வாக்குண்டாம் (11)

### காப்பு

**நல்லவரைச் சேர்ந்த பிறகும் பயன் பெறுவர்.**

4. நற்குணம் உடையவரான ஒருவருக்கச் செய்த உபகாரமானது, கல்லின் மேல் எழுதப்பட்ட எழுத்ததைப் போல என்றும் நிலைபெற்று விளங்கும். மற்றை, அன்பு இல்லாத மனத்தினருக்குச் செய்த உபகாரமானது நீரின் மேல் எழுதப்பட்ட எழுத்துக்கு ஒப்பாகும்.
நல்லாருக்குச் செய்த உபகாரம் என்றும் நிலைபெற்று விளங்கும்; தீயவருக்குச் செய்த உபகாரம் செய்த அப்பொழுதே அழிந்து விடும்.

5. நல்லவரைக் காணுதலும் நல்லதே; நல்லவருடைய பயன் நிறைந்த சொல்லைக் கேட்டலும் நல்லதே; நல்லவருடைய குணங்களைப் பேசுதலும் நல்லதே; அந் நல்லவருடன் கூடி இருத்தலும் நல்லதே.

நல்லவரைக் காணுதலாலும் அவர் சொல்லைக் கேட்பதாலும், அவர் குணங்களைப் பேசுவதாலும், அவரோடு கூடி இருப்பதாலும் நல்லறிவும் நல்லொழுக்கமும் உண்டாகும்.

6. தீயவரைக் காணுதலும் தீயதே; தீயவரின் பயன் இல்லாத சொற்களைக் கேட்டலும் தீயதே; தீயவருடைய குணங்களைப் பேசுதலும் தீயதே; அத்தீயவருடன் கூடி இருத்தலும் தீயதே.

தீயவரைக் காணுவதாலும், அவர் சொல்லைக் கேட்பதாலும், அவர் குணங்களைப் பேசுவதாலும் தீய அறிவும் தீய ஒழுக்கமும் உண்டாகும்.

7. நீர் வற்றிய குளத்தில் இருந்து நீங்கிப் போகின்ற நீர்வாழ் பறவைகள் போல, ஒருவனுக்கு வறுமை வந்தபோது அவனை விட்டு நீங்குவோர் உறவினர் ஆகார்; அந்தக் குளத்திலே என்றும் விட்டு நீங்காமல் இருக்கின்ற கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போல, தாமும் வருத்தத்தை அநுபவித்துக் கொண்டு அவரை விட்டு நீங்காது இருப்பவரே உறவினர் ஆவர்.

தாம் செல்வம் நீங்கி வறியவரான இடத்தும் தம்மைக் கைவிடாதவரையே உறவினராகக் கொள்க.

8. கீழோர், இடைப்பட்டோர், மேலோர் ஆகிய மூவருள்ளும் கீழோர் தம்முள்ளே கடுங் கோபத்தினால் வேறுபட்டால் அவர்கள் கல்லினுடைய பிளவுகளைப் போன்றவர்களா வார்கள். (பின்னர் ஒன்றார்); அன்றி, அவருள் இடைப்பட்டோர் அப்படி வேறுபட்டபோது பொன்னினுடைய பிளவுகளோடு ஒப்பு ஆவர். (இவர் ஒருவர் கூட்டக் கூடுவர்); ஆனால், சிறப்புமிக்க அறிவுடையோர் ஆகிய மேலோர் சினமானது, வில்லைப் பிடித்து அம்பினாலே நீர் பிளக்க எய்த அதனுடைய பிளவுகள் போல அப்பொழுதே நீங்கும்.

கீழோர் கோபத்தினால் வேறுபட்டவிடத்து எக்காலத்துங் கூடார்; இடைப்பட்டோர் ஒருவர் கூட்டக் கூடுவர்; மேலோர் பிரிந்த அப்பொழுதே கூடுவர்.

## கல்வி

9. அரசனையும் குற்றந் தீரக் கற்ற வித்துவானையும் ஆராய்ந்து பார்த்தால், அரசனிலும் வித்துவானே சிறப்பு

உடையவனாவன். அரசனுக்கு அவனுடைய தேசத்தில் அல்லாமல் வேறு தேசங்களிலே சிறப்பு இல்லை; ஆனால், வித்துவானுக்கோ அவன் போன தேசங்களிலேல்லாம் சிறப்பு உண்டாகும்.

அரசனிலும் வித்துவானே சிறப்பு உடையவன்.

10. இலக்கண இலக்கியங்களைக் கற்றவர்கள் பிழை இல்லாமற் பாட்டைச் சொல்லிப் பொருள் உரைக்க, அதைப் பார்த்துக் கொண்டிருந்து, அவைகளைக் கற்று அறியாத ஒருவன் தன்னையும் கற்றவனாக நினைத்து, பாட்டைச் சொல்லிப் பொருள் உரைத்தல் ஆனது, காட்டில் உள்ள மயில் தனது அழகான தோகையை விரித்து ஆட, அதைப் பார்த்துக் கொண்டிருந்த வான் கோழி தானும் அம்மயிலாகவே நினைத்து, தனது அழகில்லாத சிறகை விரித்து ஆடுவது போலாகும்.

கல்லாத ஒருவன் கற்றவனுடைய தொழிலை மேற்கொண்டான் ஆயினும், அவன் கற்றவன் ஆகான்.

11. கொக்கு ஆனது நீர் நிலையிலே ஓடுகின்ற சிறு மீன்களை யெல்லாம் ஓடவிட்டு, பெரிய மீன் வரும் வரையும் அடங்கி இருக்கும். அதுபோல, தமக்கு எதிரிகளாகத் தகாதவர் எதிர்ப்படின், அவர்களை ஓடிப்போக விட்டு, எதிரிகள் ஆகத்தக்கவர் எதிர்ப்படும் வரையும் அடங்கி இருக்கும் குணம் உடையவரை அறிவு இல்லாதவர் என்று கருதி வெல்லுவதற்கு நினைக்கவும் வேண்டுவதில்லை.

அடக்கம் உடையவரது வலிமையை அறியாது, அவரை வெல்ல நினைப்பவனுக்குத் தப்பாது கேடு வரும்.

## சிறுமையிற் பெருமை

12. தாழம்பூ இதழ்களினாலே பெரிதாய் இருக்கின்றது. மகிழம்பூ இதழ்களினாலே சிறியதாயினும், வாசனையினாலே தாழம்பூவிலும் இனியதாய் இருக்கின்றது; சமுத்திரம் பெரிதாக இருக்கின்றது. ஆயினும், அதிலுள்ள நீர் உடம்பைக் கழுவுதற்குத் தக்க நீரும் ஆகாது. அதன் பக்கத்தே சிறிய மணற் குழியிற் சுரக்கும் ஊற்று நீர் குடிக்கத்தக்க நீருமாகும். ஆதலினால், ஒருவரை உருவத்தினாலோ சிறியவர் என்று கருதி, அவரை மதியாமல் இருக்க வேண்டாம்.

இவர் சிறிது பயன்படுவர்; இவர் பெரிது பயன்படுவர்; என்றும், இவர் ஒருவிதத்திலும் பயன்படார்; என்றும், இவர் பலவிதத்திலும் பயன்படார்; என்றும் அவரவர் குணங்களால் அன்றி உருவத்தால் அறிதல் கூடாது

13. மேலோர் கெட்டாலும் மேலோராகவே மதிக்கப்படுவர். கீழோர் தம்முடைய செல்வங் கெட்டால் அப்பொழுது அவருக்கு என்ன மதிப்பு உண்டாகும்? சிறப்பினை உடைய பொன்னால் ஆகிய குடம் உடைந்தாலும் பழைய பொன்னே ஆகும். மண்ணால் ஆகிய குடம் உடைந்தால் அதற்கு என்ன மதிப்பு உண்டாகும்?
செல்வம் இழந்த காலத்திலும் மேலோர் நன்கு மதிக்கப்படுவர். கீழோர் செல்வம் இழந்த காலத்தில் அவமதிக்கப்படுவர்.

14. பாலானது தன்னைக் காய்ச்சினாலும் தன் இனிமைத் தன்மையிற் குறைவுபடாமல் மிகும். சங்கானது தன்னை நீறாகும்படி சுட்டாலும் மிகுந்த வெள்ளை நிறத்தையே கொடுக்கும். அவை போல, தாம் தம்முடைய சிநேகிதராலே கெட்டாலும், தம்முடைய நற்குணம் வேறுபடாமல் மேலோராகவே விளங்குவர். சினேக

குணம் இல்லாத கீழோர், தம்மோடு ஒருவர் கலந்து சிநேகித்தாலும் சிநேகிதர் ஆகார்.

மேலோர் தம்முடைய சிநேகிதராலே தமக்குக் கேடு வந்தவிடத்தும் அவருக்கு நன்மையே செய்வர். ஆதலின், அவரோடு தானே சிநேகித்தல் வேண்டும்.

15. மனிதர் வெட்டிக் குறைக்குந்தனையும், மரங்களானவை குளிர் நிழலைத் தந்து, வெயிலை அவர் மேலே பட விடாமல் மறைக்கும். அதுபோல, அறிவுடைய வர்கள் தாம் இறந்து போகுமளவும், தமக்கு இறந்து போகத்தக்க தீங்குகளையே பிறர் செய்தாராயினும், தாம் அவரையும் தம்மாலே ஆகுமளவும் நன்மையே செய்து காப்பர்.

அறிவுடையோர் தமக்குத் தீங்கு செய்வோருக்கும் நன்மையே செய்வர்.

**கிரகித்தற் பயிற்சி :**

## பொது

1. வாக்குண்டாம் என்னும் நீதி நூலை இயற்றியவர் யார்?
2. இந் நீதி நூலின் மறு பெயர் என்ன?

## காப்பு

3. விநாயகக் கடவுளை எவ்வாறு பூசித்தல் வேண்டும்?
4. அவ்வாறு பூசிப்பவருக்கு என்ன நன்மை உண்டாகும்?

## நன்றி

5. யாருக்குச் செய்த நன்றி தவறாது பயன்படும்?
6. தாள் உண்ட நீரைத் தலையாலே தருவது எது?
7. அதனைப் போன்றோர் யாவர்?
8. நெல்லுக்கு இறைத்த நீர் வேறு எதற்கும் பொசிகின்றது?
9. நெல், புல் இவை இரண்டும் யாருக்கு ஒப்பாகும்?
10. மழை யாருக்காக உலகிற் பெய்கின்றது?
11. கல் மேல் எழுத்துப் போன்றது எது?
12. நீர் மேல் எழுத்துக்கு நேரானது எது?

## நல்லார் தொடர்பும் தீயார் தொடர்பும்

13. 'நல்லாரைக் காண்பதுவும்' என்னுந் தொடக்கத்தை உடைய செய்யுளின் பொருளைக் கூறுக.
14. "தீயாரைக் காண்பதுவும்" என்னுந் தொடக்கத்தை உடைய செய்யுளின் பொருளைக் கூறுக.
15. யாரோடு இணங்கி இருப்பது நன்று?
16. யாரோடு இணங்கி இருப்பது தீது?
17. அற்ற குளத்தில் அறு நீர்ப் பறவை போன்றவர் யார்?
18. எப்படிப்பட்டவர் உறவு அல்லர்?
19. கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போன்றவர் யார்?
20. எப்படிப்பட்டவர்களுடன் உறவு ஆவது நன்று?
21. கற்பிளவு போன்றவர் யார்?
22. அவருடைய இயல்பு யாது?
23. பொற்பிளவு போன்றவர் யார்?
24. அவருடைய இயல்பு யாது?
25. நீர்கிழிய எய்த வடுப்போன்றவர் யாவர்?

26. சீர் ஒழுகு சான்றோர் சினம் எப்படிப்பட்டது?

## கல்வி

27. தன் தேசத்தில் மாத்திரம் சிறப்புப் பெறுபவன் யாவன்?
28. யாருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாகும்?
29. மன்னன், கற்றோன் இருவரிலும் சிறப்பு உடையவர் யார்?
30. மயில், வான்கோழி இரண்டிலும் எதன் ஆடல் சிறப்புடையது?
31. மயில் போன்றவர் யார்?
32. வான் கோழி போன்றவன் யாவன்?
33. கல்லாதான் கற்ற கவி எதன் செயலை ஒத்தது?

## அடக்கம் உடையவர்

34. கொக்கு எது வரும்வரையும் வாடி இருக்கும்?
35. அந்தக் கொக்கைப் போன்றவர் யார்?
36. அடக்கம் உடையவரைப் பற்றி நாம் என்ன எண்ணுதல் தகாது?

## சிறுமையிற் பெருமை

37. தாழை, மகிழ் இரண்டின் பூவிலும் எது சிறந்தது? ஏன் அது சிறந்தது?
38. கடல், அதனருகே உள்ள சிற்றூற்று இரண்டிலும் சிறந்தது எது? ஏன் அது சிறந்தது?
39. தாழம்பூ, மகிழம்பூ, கடல், அதனருகே உள்ள சிற்றூற்று என்பவைகளைப் போன்றோர் யாவர்?

## உயர்ந்தோர் இயல்பு

40. பின்வருவன யாருக்கு ஒப்பாகக் கூறப்பட்டன?
(அ) "பொன்னின் குடம்"
(ஆ) "மண்ணின் குடம்"
41. செல்வம் இலர் ஆயினும், எவர் மதிக்கப்படுவர்?
42. பின்வருவன யாருக்கு ஒப்பாகக் கூறப்பட்டன?:
(அ) "சங்கு சுட்டாலும் வெண்மை தரும்"
(ஆ) "அட்டாலும், பால் சுவையிற் குன்றாது".
43. யார் அளவளாய் நட்டாலும் நண்பு ஆகார்?
44. மரத்தின் சிறந்த குணம் என்ன?
45. அம்மரத்தைப் போன்றவர் யார்?

## சொற்கள்

| | Page No. | Line No. | |
|---|---|---|---|
| 1.கற்பதிலும் | 1 | 1 | ඉගෙන ගැනීමෙහිත් |
| 2.கற்பிப்பதிலும் | 1 | 1 | ඉගැන්වීමෙහිත් |
| 3.தோன்றியுள்ள | 1 | 2 | ඇතිවී තිබෙන, පහළ වී තිබෙන |
| 4.சிரமமான | 1 | 5 | වෙහෙස කර, ආයස කර |
| 5.உறுதியாகக் | 1 | 6 | ස්ථිරව, දැඩි ලෙස |
| 6.கொண்டவையல்ல | 1 | 8 | සහිත වූ දේවල් නොවේ |
| 7.அப்பாற்பட்டவை | 1 | 12 | බොහෝ දුරස්ථය, බොහෝ වෙනස්ය |
| 8.பயன்படுத்தும் | 1 | 13 | ප්‍රයෝජනයට ගන්නා |
| 9.சாதிக்கக் கூடிய | 1 | 14 | සිද්ධකට හැකි, |
| 10.நீண்டகாலமாக | 2 | 1 | දීර්ඝ කාලීනව, දිගු කලක පටන් |
| 11.வடிவங்களும் | 2 | 4 | හැඩරුවත් |
| 12.முறைகளும் | 2 | 4 | ක්‍රම විධිත් |
| 13.அமைவுகளும் | 2 | 5 | සැකසීම් ආදියත් |
| 14.மேற்கொள்ளாத | 2 | 8 | සිද්ධ නොකරණ ලද |
| 15.செம்மையாக | 2 | 11 | යහපත් ආකාරයෙන් |
| 16.நம்பத்தக்க | 2 | 12 | විශ්වසනීය |
| 17.வழிகாட்டுபவராக | 2 | 16 | මාර්ගෝපදේශකයෙකු ලෙස |
| 18.புலப்படுத்தப்படும் | 3 | 11 | හඟවනු ලබන, දනවනු ලබන |
| 19.வரிசைப்படுத்தினால் | 3 | 12 | පෙළගැස්වීමෙන් |
| 20.அடைவதற்காக | 4 | 11 | ළඟාවීම සඳහා, පැමිණීම සඳහා |
| 21.கரடுமுரடான | 4 | 12 | රළු පරළු |
| 22.உவமிக்கலாம் | 5 | 6 | උපමාකට හැක |
| 23.உருக்குலைந்து | 5 | 12 | විකෘතිව, විරූපීව |
| 24.சுயேச்சையாகக் | 5 | 13 | සිය කැමැත්තෙන්ම |
| 25.அங்கங்களாகும் | 6 | 1 | අංග වේ, අංග වේ |
| 26.நிறைந்தவொரு | 6 | 3 | සපිරුණු |
| 27.பூரணமான | 6 | 3 | පිරුණු |
| 28.அங்கவீனன் | 6 | 5 | අංග විකල වූවෙක්, විකලාංග පුද්ගලයෙක් |
| 29.வழக்கமானதில்லை | 6 | 11 | පුරුද්දක් නැති, එබඳු පිළිවෙතක් නැත |
| 30.வெவ்வேறான | 6 | 12 | වෙනස් වෙනස් |
| 31.கைதேர்ந்தவனாகவும் | 6 | 13 | කෘත හස්ත පුද්ගලයෙකු වශයෙන් |
| 32.வல்லவனாகவும் | 6 | 13 | දක්ෂයෙකු වශයෙන් |
| 33.பயன் படுத்துவதற்கு | 6 | 16 | භාවිතා කිරීමට |
| 34.சம்மந்தப்பட்ட | 6 | 16 | සම්බනධ |
| 35.மயங்காதவர் | 6 | 17 | වසඟ නොවන්නෙක් |
| 36.அறிவில்லாதவன் | 6 | 18 | බුද්ධි නැත්තෙක් |

| | Page No. | Line No. | |
|---|---|---|---|
| 37.தயாரிக்கப்பட்டது | 7 | 11 | පිළියෙල කරන ලදී |
| 38.நல்லொழுக்கம் | 8 | 16 | යහපත් හැදියාවත් |
| 39.வசனமாக்கினால் | 8 | 9 | වාක්‍ය තැනුවහොත් |
| 40.விளையாடினார்கள் | 8 | 23 | ක්‍රීඩා කළෝය |
| 41.வசனங்களாக்குக | 9 | 10 | වාක්‍ය සාදන්න |
| 42.சமுத்திரத்தில் | 10 | 2 | සමුද්‍රයෙහි |
| 43.சூழப்பட்டுள்ளமையால் | 10 | 4 | වටවී ඇති හෙයින් |
| 44.பண்டைய காலத்திலிருந்து | 10 | 7 | පුරාණ කාලයේ පටන් |
| 45.வெளிநாட்டினர்கள் | 10 | 7 | ප්‍රකට කළහ |
| 46.வளங்களைத்தேடி | 10 | 8 | ඇත් දළ |
| 47.யானைத்தந்தங்கள் | 10 | 11 | මැණික් ගල් |
| 48.இரத்தனக் கற்கள் | 10 | 12 | ධනය, භාණ්ඩ |
| 49.பொருள்களைத் | 10 | 13 | වෙළෙන්දෝත |
| 50.வணிகர்களும் | 10 | 15 | කුළු බඩු |
| 51.வாசனைப் பொருட்களைப் | 11 | 1 | අම්ල |
| 52.விலை மதிக்கவொண்ணா | 11 | 1 | සක්විති රජවරුනගේත |
| 53.சக்கரவர்த்திகளினதும் | 11 | 3 | ඔබ්බනු ලැබ තිබිණි |
| 54.பதிக்கப்பட்டிருந்தன | 11 | 3 | අවිනාශී කීර්තිය |
| 55.அழியாப்புகழ் | 11 | 4 | උණුසුම් දේශගුණයත් |
| 56.உஷ்ணசுவாத்தியத்தையும் | 11 | 7 | සරු ලෙස |
| 57.செழிப்புற | 11 | 8 | රැස්වූ කාලයේ පටන් |
| 58.குடிகொண்ட காலந்தொட்டு | 11 | 12 | ජීවත් වීමට පටන් ගත්හ |
| 59.வாழத்தொடங்கினர் | 11 | 15 | |
| 60.இராசதானியாக | 11 | 17 | රාජධානි ලෙස |
| 61.சூறையாடினர் | 11 | 20 | අස්වැන්න මැඩූහ |
| 62.தாக்குதல்கள் | 11 | 22 | පෙළිම්වලින් |
| 63.கைப்பற்றினார்கள் | 11 | 23 | අල්ලා ගත්තෝය |
| 64.முதற்றொழிலாகக் | 12 | 15 | ප්‍රධාන රැකියාව ලෙස |
| 65.ஈட்டித்தருகின்றனர் | 12 | 17 | උපයා දුන්හ |
| 66.சுபீட்சத்திலும் | 13 | 25 | සුභික්ෂණ භාවයෙහිත් |
| 67.பொற்காலமாகும் | 14 | 3 | ස්වර්ණමය යුගයවේ |
| 68.முதலியவற்றினால் | 14 | 10 | යනාදියෙන් |
| 69.கொய்திடுவாய் | 15 | 2 | නෙලන්නෙහි |
| 70.திருக்கரத்தால் | 15 | 7 | ශ්‍රී හස්තයෙන් |
| 71.சுழல்கின்றேன் | 12 | 12 | ඉබාගාතයේ ඇවිදින |
| 72.நிலையாமையைப்பற்றி | 16 | 15 | අස්ථිර භවය ගැන |
| 73.இருந்திருக்கவில்லை | 20 | 4 | ලබා තිබුණේ නැත |

| | Page No. | Line No. | |
|---|---|---|---|
| 74.அக்காலத்தவர்களின் | 20 | 4 | ඒකාලයට අයත් අයගේ |
| 75.புகலிடங்களோ | 20 | 6 | නිවාසස්ථාන හෝ |
| 76.ஆபத்துக்களினாலும் | 20 | 7 | විපත් වලින් |
| 77.பாதிக்கப்பட்டு | 20 | 7 | පෙළුණු ලැබ |
| 78.காலஞ்செல்லச் | 20 | 11 | කල්යත්ම |
| 79.புத்துணர்ச்சி | 20 | 14 | නව හැඟීම් |
| 80.கற்குகைகளைத் | 20 | 17 | ගල් ගුහා |
| 81.இடையூறுகளின் | 20 | 2 | හිරිහැරවල |
| 82.உருவாக்கியெடுக்கும் | 21 | 2 | නිර්මාණය කොට ගන්නා |
| 83.சீர்திருத்தியெடுக்கும் | 21 | 4 | ප්‍රතිසංස්කරණය කොට ගන්නා |
| 84.வேட்டையாடுவதிலும் | 21 | 7 | දඩයමේ යාමෙහි |
| 85.மரப்பட்டைகளை | 21 | 9 | ගස් වල පොතු |
| 86.ஆயிரக்கணக்கான | 21 | 11 | දහස් ගණන් |
| 87.நோக்கமாயிருந்த | 21 | 13 | පරමාර්ථයව තිබුණු |
| 88.ஈடுபட்டிருக்கின்றார்கள் | 21 | 19 | යෙදී සිටි |
| 89.மனிதாபிமானத்தோடு | 21 | 21 | ස්වාභිමානයෙන් යුක්තව |
| 90.வேண்டுமென்றால் | 21 | 22 | අවශ්‍යනම් |
| 91.அளப்பரிய | 21 | 03 | අතිමහත් |
| 92.அபிமானத்தால் | 22 | 03 | අභිමානයෙන් |
| 93.பிரிக்கப்பட்டிருப்பதாகும் | 22 | 07 | වෙන්කරනු ලැබ තිබීම වේ |
| 94.தொழிலாகக்கொண்டு | 23 | 02 | රැකියාව කර ගනිමින් |
| 95.வளப்படுத்தினோம் | 23 | 04 | සරු කළෙමු |
| 96.வயல்வெளிகளுக்கு | 23 | 12 | කුඹුරු යාය වලට |
| 97.பாய்ச்சினார்கள் | 23 | 13 | ගලා යැව්වෝය |
| 98.சமன்படுத்தினார்கள் | 23 | 17 | සම කළෝය |
| 99.பண்படுத்தப்பட்ட | 23 | 18 | සකස් කරන ලද |
| 100.விழாக்களுக்கு | 24 | 06 | උත්සව වලට |
| 101.வாழ்க்கையையே | 24 | 12 | ජීවිතයම |
| 102.சக்தியை | 24 | 23 | ශක්තිය |
| 103விளைச்சலை | 24 | 24 | අස්වැන්න |
| 104.பிரதேசங்களாக | 24 | 27 | ප්‍රදේශ ලෙස |
| 105.அப்பிரதேசங்களில் | 25 | 03 | එම ප්‍රදේශ වල |
| 106.கட்டுப்படுத்துவதற்கு | 25 | 11 | පාලනය කිරීමට |
| 107.பசளைகளை | 26 | 02 | පොහොර |
| 108.சுவாத்திய | 26 | 04 | දේශගුණික |
| 109.தரையிலும் | 26 | 04 | ගොඩබිමත් |
| 110.பொருத்தமான | 26 | 05 | යෝග්‍ය |
| 111.முற்றாகவே | 27 | 03 | සම්පූර්ණයෙන්ම |

| | Page No. | Line No. | |
|---|---|---|---|
| 112.சூட்டப்பட்ட | 28 | 01 | (නමක්) පටබඳන ලද |
| 113.சாதுரியத்தை | 28 | 08 | චාතුර්යය |
| 114.இளமையிலே | 28 | 10 | ළමා වියේදීම |
| 115.கம்பீரமாக | 28 | 19 | ගාම්භීර |
| 116.தேம்பியழுதல் | 32 | 22 | හැඩීම |
| 117.ஓய்ந்திருத்தல் | 32 | 24 | විවේකයෙන් සිටීම |
| 118.நிரோதத்தை | 35 | 21 | නිරෝධය |
| 119.மார்க்கமாக | 35 | 22 | මාර්ගය ලෙස |
| 120.கோட்பாட்டுகளாக்கி | 46 | 22 | ප්‍රමේයයන් බවට පත් කොට |
| 121.பெருந்தொகையான | 46 | 03 | විශාල ප්‍රමාණයක් වන |
| 122.அரண்மனைக்கு | 46 | 19 | රජ මාලිගයට |
| 123.பாலங்களையும் | 47 | 01 | පාලම්ද |
| 124.அமுலாக்கி | 47 | 05 | (නිති) පනවා |
| 125.எண்ணிக்கையற்ற | 51 | 03 | අසංඛ්‍ය |
| 126.ஆக்கிரமிக்க | 52 | 26 | ආක්‍රමණය කිරීමට |
| 127.சஞ்சாரமில்லாத | 53 | 01 | ගමනා ගමනයක් නැති |
| 128.நிம்மதியான | 53 | 23 | සැනසිලි දායක |
| 129.புகழ்வாய்ந்த | 60 | 02 | කීර්තිමත් |
| 130.ஒப்படைத்துவிட்டு | 61 | 20 | පවරාදී |
| 131.மகிழ்ந்து | 61 | 21 | ප්‍රීතිව |
| 132.தவத்தினால் | 62 | 02 | යහපතින් |
| 133.பெருநதியாகிய | 62 | 02 | මහා ගංගාව වන |
| 134.சோலையிலே | 62 | 20 | උයනෙහි |
| 135.காலந்தொட்டு | 68 | 01 | කාලයේ පටන් |
| 136.விரிவடைந்த | 69 | 08 | පුළුල් වූ |
| 137.உருவாக்கப்பட்ட | 69 | 22 | නිර්මාණය කරන ලද |
| 138.பொற்காலமாக | 69 | 30 | ස්වර්ණමය යුගයක් වශයෙන් |
| 139.அழுக்காற்றல் | 73 | 07 | ඊර්ෂ්‍යාවෙන් |
| 140.சார்பான | 73 | 09 | පක්ෂ |
| 141.அஞ்சாது | 73 | 13 | නොබියව |
| 142.முரசங்களோடு | 73 | 15 | හොරණෑ සමඟ |
| 143.ஓர்மத்துடன் | 73 | 20 | ධෛර්යයෙන් |
| 144.வெற்றியால் | 73 | 25 | ජයග්‍රහණයෙන් |
| 145.கைத்தொழிலாகிய | 74 | 03 | හස්ත කර්මාන්ත වන |
| 146.ஆக்கமுயற்சியில் | 74 | 03 | නිමැවුම් කර්මාන්තයන්හි |
| 147.செழித்தோங்கியும் | 74 | 04 | සරුවට වැඩී බැබලීමෙහි |
| 148.நுழைந்து | 76 | 06 | රිංගා |

| | Page No. | Line No. | |
|---|---|---|---|
| 149.தவழ்ந்து | 76 | 06 | දණ ගා |
| 150.விளையாடிய | 77 | 17 | සෙල්ලම් කළ |
| 151.பெருமைவாய்ந்த | 78 | 1 | වටින, මහනීය |
| 152.விசுவாசத்தையும் | 78 | 11 | විශ්වාසය |
| 153.விருந்தேற்று | 79 | 14 | ආගන්තුක සත්කාරය |
| 154.கடம்பூண்ட | 79 | 19 | ව්‍රතයෙහි යෙදී |
| 155.நீடித்திராது | 79 | 21 | දීර්ඝ නොවේ |
| 156.இடைச்சேரிக்கு | 79 | 22 | ගොළු ගමට |
| 157.முகமலர்ச்சியும் | 80 | 05 | මුහුණේ සතුට |
| 158.புலனாகாவாறு | 80 | 16 | නොවැටහෙන පරිද්දෙන් |
| 159.கரைகாணா | 80 | 23 | තෙරක් නොපෙනෙන |
| 160.பாராட்டிய | 80 | 26 | වර්ණනා කළ |
| 161.எழுந்தோடி | 83 | 03 | නැගිට, අවදිව |
| 162.விரும்புகிறேன் | 90 | 07 | කැමැත්තෙමි |
| 163.கட்டாந்தரையாக | 93 | 09 | වනාන්තරයක් ලෙස |
| 164.வரட்சியுற்ற | 94 | 02 | වියලි ගිය |
| 165.பூஞ்சோலையாக்கி | 94 | 05 | මල් උයනක් කොට |
| 166.பரவுமாயிருந்தால் | 94 | 17 | පැතිරී ගියේ නම් |
| 167.சாம்பராய் | 94 | 17 | අළු වී |
| 168.திணைக்களத்தில் | 96 | 01 | දෙපාර්තමේන්තුවේ |
| 169.பிரசைகளிடமிருந்து | 96 | 02 | පුරවැසියෙක්ගෙන් |
| 170.இழக்கப்பட்டு | 97 | 02 | නැතිවූයේ නම් හෝ |
| 171.சமர்பிக்கப்படல் | 97 | 06 | පිළිගැන්විය යුතුය |
| 172.நிரந்தரமான | 97 | 13 | ස්ථිරය |
| 173.ஓய்வுதியமுடைய | 97 | 13 | විශ්‍රාම වේතනාර්හය |
| 174.பிணைப்பணமாக | 97 | 20 | ඇප මුදල් වශයෙන් |
| 175.நிர்ணயிக்கப்படும் | 97 | 23 | තීරණයකරනු ලබයි |
| 176.ஏற்றங்களுடனும் | 98 | 02 | වර්ධක සහිතව |
| 177.வருடாந்த | 98 | 03 | වාර්ෂික |
| 178.வினைத்திறன் | 98 | 06 | කාර්යක්ෂම |
| 179.சுற்றறிக்கை | 98 | 08 | චක්‍රලේඛය |
| 180.அடங்கலாக | 98 | 16 | ඇතුළත්ව |
| 181.பொறுப்பாளராக | 98 | 16 | භාරකරු ලෙස |
| 182.கட்டங்களை | 98 | 21 | කඩඉම් |
| 183.முன்னுரிமை | 99 | 01 | ප්‍රමුඛත්වය |
| 184.நேர்முகபரீட்சை | 99 | 04 | සම්මුඛ පරීක්ෂණය |
| 185.ஆட்சேர்ப்புகள் | 99 | 22 | බඳවා ගැනීම් |

| | Page No. | Line No. | |
|---|---|---|---|
| 186.இராச்சியத்தை | 101 | 10 | රාජ්‍යය |
| 187.சூதாட்டத்தில் | 101 | 12 | දූ කෙළියෙහ, සූදු කෙලිමෙහි |
| 188.சண்டையில்லாமல் | 101 | 13 | සටන් නොමැතිව |
| 189.நீதியைவேண்டி | 103 | 01 | නීතියේ පිහිට පතා |
| 190.அஞ்ஞானவாசம் | 103 | 22 | අඥාතව |
| 191.குருஷேத்திரத்தில் | 104 | 02 | කුරුක්ෂේත්‍රහි |
| 192.ஒன்றாக்குதல் | 105 | 01 | ඒකරාශි කිරීම |
| 193.அட்டவணையில் | 107 | 13 | උපලේඛනයෙහි |
| 194.இணைந்து | 107 | 14 | සම්බන්ධ කොට |
| 195.அளவிறந்த | 109 | 05 | අප්‍රමාණ |
| 196.சூட்சியினால் | 109 | 13 | පාලනයෙන් |
| 197.முடிசூட்ட | 109 | 14 | ඔටුනු පළන් |
| 198.வற்புறுத்தி | 109 | 15 | බලකොට |
| 199.மரணநிழல்லை | 110 | 09 | මරණය සිදුවීම |
| 200.சூளுரைத்து | 110 | 17 | පළිගසා |
| 201.நெடுந்தூரம் | 110 | 18 | බොහෝදුර |
| 202.ஆசிகளையும் | 110 | 21 | ආශිර්වාද |
| 203.தங்கையாகிய | 110 | 23 | නංගිවන |
| 204.தனதாக்கிக் | 110 | 25 | තමාට අයත්කොට |
| 205.பழிவாங்கும் | 110 | 22 | පළි ගන්නා |
| 206.மார்க்கமாக | 111 | 01 | මාර්ගයක් ලෙස |
| 207.முயன்றபோது | 111 | 03 | උත්සාහකළ කල්හි |
| 208.தீர்வதெனத் | 111 | 03 | විසඳේය කියා |
| 209.திடசங்கற்பம் | 111 | 03 | තිවූ ලෙස |
| 210.வர்ணமையினால் | 111 | 04 | වර්ණනාවෙන් |
| 211.பஞ்சவடியிலிருந்து | 111 | 05 | පඤ්චවටියේ සිට |
| 212.சூழப்பட்டிருந்ததைக் | 111 | 14 | වටකරණු ලැබ සිටිනු |
| 213.கொடுத்தனுப்பிய | 111 | 16 | දී යැවූ |
| 214.முற்படுகையில் | 111 | 20 | ඉදිරිපත්කිරීමේදී |
| 215.அழிக்கப்பட்டதுடன் | 111 | 22 | විනාශකරණු ලැබීමත් සමඟ |
| 216.எரியூட்டப்பட்டது | 111 | 22 | ගිනිගනු ලැබිය |
| 217.சொல்லியனுப்பிய | 111 | 24 | කියා යැවූ |
| 218.தலைமையிலான | 111 | 25 | ප්‍රධානත්වයෙන් |
| 219.புத்திமதியும் | 112 | 06 | උපදෙස් |
| 220.துணைவர்களும் | 112 | 08 | ආධාරකරුවෝ |
| 221.கொல்லப்பட்டதுடன் | 112 | 09 | මැරීමත් සමගම |
| 222.அழிந்தொழிந்தது. | 111 | 09 | විනාශභාග් වී |

| | Page No. | Line No. | |
|---|---|---|---|
| 223.பொறுப்பேற்று | 111 | 19 | වගකිම පවරා |
| 224.வேற்றுமையாவது | 118 | 01 | කිසියම් වෙනසක් |
| 225.இடைச்சொற்கள் | 118 | 03 | නිපාත පද |
| 226.மாத்திரம் | 118 | 09 | පමණක් |
| 227.தொழிலினால் | 119 | 09 | රැකියාවෙන් |
| 228.சொல்லுருபுகள் | 120 | 04 | ප්‍රත්‍යයන් |
| 229.திறந்து | 120 | 11 | විවෘත කොට |
| 230.ஆக்கியவர்கள் | 120 | 13 | සෑදූ අය |
| 231.யானையோடு | 120 | 16 | ඇතා සමග |
| 232.அகதிகளுக்கு | 121 | 15 | අනාථයින්ට |
| 233. இராட்சியம் | 121 | 19 | රාජ්‍යය |
| 234.கொடைப்பொருள் | 121 | 16 | දාන ද්‍රව්‍ය |
| 235.நேர்ச்சிப்பொருள் | 121 | 18 | |
| 236.பகைப்பொருள் | 121 | 17 | විරුද්ධාර්ථ |
| 237.வித்திட்டான் | 121 | 02 | |
| 238.தற்கிடமையாவது | 122 | 18 | සිය යුතුකම වන්නේ |
| 239.தன்மையுடையது | 122 | 20 | ස්වරූපයෙන් යුක්තය |
| 240.காக்கை | 123 | 14 | කපුටෙකු |
| 241.வலப்பக்கம் | 123 | 17 | දකුණු පස |
| 242.இடப்பக்கம் | 123 | 18 | වම් පස |
| 243.மேல்நிலம் | 123 | 19 | උස් බිම |
| 244.உட்புறம் | 123 | 20 | ඇතුල් පැත්ත |
| 245.படர்க்கை | 124 | 01 | ප්‍රථම පුරුෂය |
| 246.வழிவேற்றுமை | 124 | 02 | ආලපන විභක්තිය |
| 247.ஈற்றயல் | 124 | 04 | |
| 248.திரிந்தும் | 124 | 05 | ඇවිද |
| 249.விகாரப்படுத்தல் | 124 | 06 | විෂමරූප යෙදීම |
| 250.இயல்பாயிற்று | 124 | 10 | ස්වභාවයම විය |
| 251.கட்டினான் | 125 | 16 | බැන්දාය |
| 252.தவத்தில் | 125 | 18 | තපසෙහි |
| 253.உயர்ந்தவர் | 125 | 18 | උසස් පුද්ගලයා |
| 254.ஆட்டத்தின் | 125 | 18 | නැටුමෙහි |
| 255.கணையம் | 125 | 19 | නේත්‍ර විකාර |
| 256.முடிவுறுத்தும் | 126 | 08 | අවසන් කිරීම |
| 257.இறுதியில் | 126 | 09 | අන්තිමේදී |
| 258.நோக்குக | 126 | 15 | සැලකිල්ලට ගන්න |
| 259.உறுப்பு | 126 | 18 | ප්‍රත්‍යය |

| | Page No. | Line No. | |
|---|---|---|---|
| 260.முழுமையான | 127 | 02 | සම්පූර්ණ |
| 261.உய்த்துணர | 127 | 06 | උසස්ලෙස සිතන්නට |
| 262.காட்டுவதில்ல | 127 | 13 | පෙන්වන්නේ නැත |
| 263.குன்றாவினை | 127 | 18 | |
| 264.வினையாகிறது | 127 | 21 | ක්‍රියාවක් බවට පත්වේ |
| 265.முழுநிறைவான | 128 | 09 | සම්පූර්ණ |
| 266.தலைப்புக்கு | 128 | 11 | මාතෘකාවට |
| 267.கருமத்தை | 128 | 14 | කර්මය/ ක්‍රියාව |
| 268.அமைவுகள் | 129 | 01 | යෙදීම් |
| 269.வயலை | 129 | 06 | කුඹුර |
| 270.திரிபில் | 129 | 10 | තද්භව |
| 271.துணைவினை | 130 | 04 | ආධාරක ක්‍රියා |
| 272.முக்காலத்திலும் | 130 | 12 | තුන් කල්හිම |
| 273.புலியால் | 131 | 15 | කොටියා විසින් |
| 274.கொல்லப்பட்ட | 131 | 16 | මරණ ලද |
| 275.விழுங்கிய | 132 | 02 | ගිල දැමූ |
| 276.சுழியோடிய | 133 | 07 | සුළි සහිත |
| 277.சுழிக்காற்று | 133 | 08 | සුළි සුළඟ |
| 278.வினைத்தவன் | 133 | 09 | ක්‍රියාකළ අය |
| 279.இராவணன் | 133 | 14 | රාවණ |
| 280.வெள்ளத்தால் | 133 | 15 | ගංවතුරෙන් |
| 281.பயிர்கள் | 133 | 16 | වගාව |
| 282.மிதித்து | 133 | 17 | පාගා / මැඩ |
| 283.கடிதம் | 137 | 11 | ලිපිය |
| 284.சுகவீனம் | 137 | 13 | රෝගි වීම |
| 285.பள்ளிக்கூடம் | 137 | 14 | පාසැල |
| 286.தெரிவித்து | 137 | 15 | දන්වා |
| 287.பிறந்தநாள் | 138 | 04 | උපන්දින |
| 288.பங்குபற்றுதல் | 138 | 05 | සහභාගිවීම |
| 289.வெற்றிவேங்கை | 139 | 01 | ජයග්‍රාහි ස්වරූපය |
| 290.குறுந்தொகை | 139 | 01 | එනම් ග්‍රන්ථය |
| 291.எழுத்தறிவித்தவன் | 139 | 05 | ශාස්ත්‍රඥානය ඇත්තා |
| 292.விரும்பல் | 139 | 08 | කැමතිවීම |
| 293.நூற்றாண்டு | 139 | 20 | ශතවර්ෂය |
| 294.பழகனும் | 139 | 20 | ඇසුරුකළත් |
| 295.பிளக்க | 139 | 23 | පළාගෙන |
| 296.வளம்பெற | 140 | 02 | සරුව වැඩෙන්නට |
| 297.விதையானது | 141 | 19 | බීජය වන්නේ |

| | Page No. | Line No. | |
|---|---|---|---|
| 298.அலங்கரிக்கப்பட்ட | 141 | 26 | සරසන ලද |
| 299.சேனைகளோடு | 141 | 27 | සේනාවන් සමග |
| 300.நீதிநூல் | 143 | 01 | නීති ග්‍රන්ථ |
| 301.ஔவையார் | 143 | 03 | ඖවෛයාර් කිවිඳිය |
| 302.திருமேனி | 143 | 08 | ශ්‍රී ශරීරය |
| 303.தும்பிக்கை | 143 | 08 | සොඬවැල |
| 304.பவளம் | 143 | 10 | පුවාල මැණික් |
| 305.திருவடி | 143 | 12 | නෙළුම් මල |
| 306.தாமரைப்பூ | 143 | 16 | ලක්ෂ්මී දේවිය |
| 307.இலக்குமி | 143 | 17 | දිවැස් හෙලිම |
| 308.அருட்பார்வை | 143 | 17 | ශරීරය |
| 309.உடம்பு | 143 | 17 | ආරෝග්‍යය |
| 310.ஆரோக்கியம் | 143 | 03 | මුලින් ම |
| 311.வேரினாலே | 144 | 15 | උපකාරය |
| 312.உபகாரம் | 144 | 18 | සැක කරන |
| 313.சந்தேகிக்கும் | 144 | 19 | නමස්කාර පූර්වකව |
| 314.வணக்கத்தோடு | 145 | 03 | ඇල |
| 315.கால்வாய் | 145 | 05 | පොඩිකර |
| 316.கசிந்து | 145 | 06 | |
| 317.கடல்பெரிது | 145 | 08 | සාගරය සේ විශාල |
| 318.கொட்டியும் | 150 | 16 | හැලෙද්දී |
| 319.நெய்தல் | 150 | 16 | කුඹුරු ආශ්‍රිත ඉඩම් |
| 320.சினமானது | 151 | 10 | කෝපය වු කලි |
| 321.வித்துவானை | 151 | 17 | විද්වතාණන් |
| 322.அழகானதோகை | 152 | 11 | ලක්ෂණ පිල් කළඹ |
| 323.அழகில்லாத | 152 | 14 | ලක්ෂණ නැති |
| 324.சமுத்திரம் | 153 | 15 | |
| 325.மதியாமல் | 153 | 20 | නොසළකා |
| 326.சங்கானது | 154 | 15 | ශංඛය වුකලි |
| 327.நீராகுதல் | 154 | 16 | ජලස්නානය කිරීම / දිය කෙළිය |
| 328.சினேகித்தல் | 155 | 05 | හිතවත්වීම |
| 329.இறந்து | 155 | 09 | මිය ගොස් |
| 330.தீங்குகளை | 155 | 10 | විපත් / කරදර |
| 331.நன்மையே | 155 | 11 | යහපතම |
| 332.பூசித்தல் | 156 | 07 | ආලේප කිරීම |
| 333.சான்றோர் | 158 | 03 | උතුමෝ |
| 334.உயர்ந்தோர் | 159 | 08 | උසස් අය |
| 335.ஒப்பாக | 159 | 09 | සමව |

රජයේ මුද්‍රණ දෙපාර්තමේන්තුව